செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்துவிடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய
## சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

# குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தானமில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பது ஆயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணு அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக்கொண்டு என்னை மன்னிக்கவும். தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

# ஆண் தன்மை அடைந்தேன்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கட்கு,

அன்புள்ள ஐயா, தாங்கள் கொடுத்த இன்பசாரம் என்னும் மருந்து என்னை வீர புருஷனாகச் செய்து விட்டதை நோக்க நான் அடைந்த சந்தோஷம் சொல்லுந் தரத்த தன்று.

எனது முதல் மனைவி 10 வருட மிருந்து காலமானாள். இரண்

டாவது மனைவியை எனக்கு என் உறவினர்கள் கட்டி வைத்தார்கள். விவாகமானதி லிருந்து என் மனம் அடைந்த துன்பம் அளவிலடங்காது. எனது நண்பர் திண்டுகுறத்தி எதிராஜுலு செட்டியாரால் தங்களிடம் வந்து இன்பசாரம் என்னும் மருந்தை உட்கொண்டதால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஆனந்தம் கிடைத்தது.

என்னுடைய நாயகிக்குச் சரீரம் உஷ்ணமாயும் நீர் இறங்கும் போது பாதையாயும் இருப்பதாய்த் தெரிகின்றது. அதற்குத் தாங்கள் எண்ணெய் கொடுக்கும்படிக் கோருகிறேன்.

லேட் மோஸஸ் கம்பெனி
கொத்தா கிருஷ்ணசாமி செட்டியார்.

---

## க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு: என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்து கொண்டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட் டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமேயில்லை. இதை க்ஷய ரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சினேகிதர்களுக்குச் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,
7—5—32 கார்ட்டன் வூட்ராப் கம்பெனி, மதராஸ்.

---

அன்பார்ந்த டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு.

இதுவரையிலும் 6 புட்டி இன்பசார மாத்திரையை என் மனைவிக்குக் கொடுத்துள்ளேன். அதனால் நான் எதிர் பார்க்காதவண்ணம் குணம் கண்டிருக்கிறேன். இரத்த விருத்தியும் நல்ல பசியும் எடுக்கின்றது. என் மனைவி பிழைத்தது ஆச்சரியமே!

வேறொரு பெண்மணிக்கு இதைக் கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு இரத்த மில்லாமல் வெளுத்திருந்த உடம்பு இப்போது இரத்தம் பரவிவிட்டது. இன்னும் இரண்டு புட்டி வி. பி. யில் அனுப்பவும்.

இப்படிக்கு
28—4—32, காஞ்சிபுரம் Dr. T. N. நடராஜன். L. M. P.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

**புட்டி 1-க்கு விலை ரூபா 5.**

கிடைக்குமிடம் :—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

2424

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

## ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

' எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் '...

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | | இதழ் |
| --- | --- | --- |
| 4 | ஸ்ரீமுக௵ ஆடி௴ 1௳<br>1933௵ ஜூலை௴ 16௳ | 7 |


### கடவுள் வணக்கம்

தேவனே! பிறர்க்(கு) அடிமை உற்றிலேன்.
சிந்தை நின்வசம் தந்த தன்றியும்
நாவினால்தினம் பரவி வாழ்த்துவேன்.
நாளும் என்குறை தீர்ப்ப(து) ஆர்கொலோ?
காவல் மூவரண் கனல் கொளுந்திடக்
கருணை செய்திடுங் கடவுள்! போற்றி! யான்
பாவ காரியே எனினும் என்னைநீ
பாதுகாப் ப(து)உன் பண்ப தாகுமே.

—அதிவீரராம பாண்டியர்

# சீர்திருத்தம் செய்வ தெப்படி?



இக்காலத்தில் சீர்திருத்தப் பேச்சு எங்கும் அதிகமாகக் கேட்கப்படுகிறது. ஆனால் பேச்சின் அளவிற்குத் தக்கபடி மக்கள் சீர்திருத்தம் அடைந்திருக்கின்றனரா என்பது கூர்ந்து கவனிக்க வேண்டிய விஷயமாகும். சீர்திருத்தம் செய்ய விரும்புவோனுக்கு எவ்வளவு ஆர்வ மிருக்கிறதோ அவ்வளவு ஆவல் சீர்திருத்தம் அடைய விரும்புவோனுக்கும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் உண்மையான பலன் உண்டாகும்.

ஒருவன் பெருங்குடியனாகவும் செலவாளியாகவும் இருக்கின்றானென்று வைத்துக் கொள்வோம். அவன் பெரும்பாலும் அறிவு வளர்ச்சியற்றவனாகவும் ஏழையாகவும் இருப்பான். நாம் எவ்வளவு தான் அவனுக்கு அறிவுறுத்தினாலும் பொருள் கொடுத்து உதவினாலும் பயன் உண்டாகாது. என்றைக்கு அவன் உண்மையை உணர்ந்து, தன்னுள்ளாகவே இருந்து தன்னை அடிமைப் படுத்தித் துன்பத்தில் ஆழ்த்தும் ஆசையோடு எதிர்த்துப் போராடி வெல்லும் வன்மையைப் பெறுகின்றானோ அன்றுதான் நமது சீர்திருத்த உழைப்பு பய னளிக்கும். மற்றொரு உதாரணம் எடுத்துக் கொள்வோம். வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள அறியாத ஒரு பெண்மணிக்கு எவ்வளவுதான் சுகாதாரத்தைப்பற்றி எடுத்துரைத்தாலும் அல்லது எத்தனை முறை நாம் அவ்வீட்டைப் பெருக்கிச் சுத்தப்படுத்திக் கொடுத்தாலும் நமது நோக்கம் ஈடேறாது. இதனால் நாம் பிறருக்கு உதவி செய்தல் அவசியமில்லை என்று கூறுவதாக ஒருவரும் கொள்ளக் கூடாது. நம் அயலார் சீர்திருத்தம் அடைய வேண்டுமென்று நாம் பேரவாக்கொண் டிருப்பதனால் நமது அறிவுரையோ, பணமோ நிலைத்த பயனை அளிக்குமா? என்று எண்ணிப் பாராமல் தாராளமாக அவற்றை வழங்க முன்வந்துவிடுகிறோம். அதனை ஏற்போர் தக்க பருவம் அடையாது இருப்பதால் அது விழலுக் கிறைத்த நீராய்ப் போய்விடுகிறது. நாமும் ஏமாற்ற மடைந்து வருந் துகின்றோம். எனவே நாம் அன்பினால் தூண்டப்பட்டுப் பிறர்

நலத்திற்காக உழைக்கத் தொடங்குவதற்கு முன் நம்மால் உதவப் படுவோர் நமது உதவியின் அருமையை உணர்ந்து அதனால் எதிர் காலத்தில் பயனடையக் கூடியவர்களா என்று ஆராய்தல் வேண்டும். படிப்பதற்குச் சிறிதும் விருப்ப மில்லாத ஒரு பையனுக்கு நாம் கற்றுக் கொடுப்ப தெல்லாம் பய னளிக்காமல் போய்விடும். ஒரு வேளை அவனது மனப் போக்கை யறியாது கல்வியைத் தொடங்கியிருந்தாலும் உண்மையை உணர்ந்தவுடன் நிறுத்திக் கொள்வது நலம். அவனுக்குப் பதிலாக உண்மையாகப் படிக்க ஆர்வமுள்ள ஒரு சிறுவனுக்கு உதவி செய்யின் அவன் பய னடைவான்.

'பலனை எதிர் பாராமல் வேலை செய்வதே நிஷ்காம கர்மம்' என்று சொல்லப்படுகிறது. இதை முற்றும் ஏற்றுக் கொள்ள முடியாது. 'சுயநலமாகிய பலனை எதிர் பாராமல் வேலை செய்' என்று சொன்னால் அதை அறிஞர் ஏற்றுக் கொள்வர். 'எண்ணித் துணிக கருமம்' என்னும் வள்ளுவனார் வாக்கைக் கடைப்பிடிக்காமல் நிஷ்காம கர்மம் என்னும் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நம் உதவியை முழுமனதோடு வரவேற்காத மக்களுக்காக உழைத்தல் அறிவுடைமை யன்று. ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன் அதனுடைய பலா பலன்களை நன்றாக ஆராய்ந்து பிறகு அதில் நுழைந்த போதிலும் ஒவ்வோர் சமயத்தில் எதிர்பார்த்தபடி பலன் உண்டாவதில்லை. இத்தகைய சந்தர்ப்பத்தில் 'பெற்ற தெல்லாம் பிள்ளையா? நட்ட தெல்லாம் மரமா?' என்னும் பழமொழியே நமக்கு ஆறுதல் அளிக்கின்றது.

நாம் பல பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்டிருக்கிறோம்; படித்து மிருக்கிறோம். அவற்றால் முழுப் பயனை அடைந்திருக்கிறோமா? இல்லை. சிலவற்றை நம் வாழ்க்கையில் கடைப்பிடித்துள்ளோம். மற்றவைகளை இன்னும் கடைப்பிடிக்க முடியாதவர்களாக இருக்கின்றோம். காரணம் என்னவெனில் அவற்றைக் கைக்கொள்ள நமக்கு உண்மையான ஆவலும் மனோசக்தியும் உண்டாகாமையே. 'நிழ லருமை வெயிலிலே நின்றறிமின்' என்னும் முன்னோர் வாக்கிற் கிணங்க ஒருவனுடைய அனுபவமே அவனுக்குச் சிறந்த ஆசிரியனாக அமைகின்றது. இது பெரும்பாலோர் விஷயத்தில் பொருந்தும். வெகு சிலரே பிறரது அறிவுரைகளைக் கேட்டு அப்போதே திருந்துகின்றனர். சில சமயங்களில் மனவலிமை

யிருந்த வீரர்கள் தம் அருகிலுள்ள மக்களைத் தம் வழிப்படுத்தி நன்னெறியிற் செல்லுமாறு தூண்டுகின்றனர். ஆனால் அவ்வாறு தூண்டப்பட்டவர்கள் அந் நல்லொழுக்கத்தில் நீண்டகாலம் நிலைத்து நிற்பதாகக் காணப்படவில்லை. பலர், தம் மனவெழுச்சி அடங்கியவுடன் பழையபடியே தமது தீய நெறியில் ஒழுக ஆரம்பித்து விடுகின்றனர்.

ஒரு மனிதனைத் துன்பத்திற் குள்ளாக்குவது ஆசைதான். அன்பிற்கும் ஆசைக்கும் (அவாவிற்கும்) உள்ள வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். பிறருடைய நலத்திற்காக நம் மனத்தில் உண்டாகும் ஒருவித நெகிழ்ச்சியே அன்பு எனப்படும். சுய நலத்திற்காக நம் மனத்தில் எழும் இச்சையே ஆசை எனப்படும். அன்பினால் நமக்கு இன்பம் உண்டாகும்; ஆசையினால் துன்பம் உண்டாகும். பிறர்க்கு ஒரு பொருளைக் கொடுக்கத் தூண்டுவது அன்பு. பிறனுடைய பொருளை அடைய விரும்புவது ஆசை. இவ்வாசையின் பிடிப்பி லிருந்து ஒரு மனிதனை விடுவிக்க மற்றொரு மனிதனால் முடியாது. ஆசையின் ஆட்சிக்குட்பட் டிருப்பவன் அதன் கொடுமையை அனுபவத்தினாலும் பிறரது அறிவுரையாலும் உணர்ந்து தனது மனோசக்தியைப் பெருக்கிக்கொண்டு அதன் துணையால் ஆசையோடு போராடி வெற்றி பெற்று விடுதலை இன்பம் துய்க்கவேண்டும். ஒரு முறை வெற்றி பெற்று விட்டாலும் போதாது. நாம் இவ்வுடம்போடு கூடி இருக்கிற வரையில் 'ஆரா இயற்கை'யையுடைய அவ்வவாவின் மயக்கிற்கு உட்படாமல் விழிப்போ டிருத்தல் வேண்டும்.

சீர்திருத்தம் செய்ய விரும்புவோர் தமது ஒழுக்கத்தைக் கூடிய வரையில் திருத்திக் கொண்ட பிறகே அப்பணியில் இறங்க வேண்டும். குடியர்கள், மோசக்காரர்கள், கன்னெஞ்சர், புறங் கூறுவோர், கல்விச் செருக்குள்ளோர் முதலியோர் சமூக சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசுவதைப் பலர் கேட்டிருக்கக் கூடும். இவர்களால் உலகிற்கு ஒரு சிறிதும் நன்மை உண்டாகாது; இவர்களிடத்துப் பொது மக்களுக்கு நிலைத்த நம்பிக்கை இராது. 'உபதேசத்தை விட ஒழுக்கமே சிறந்தது' என்னும் பொருள் தரும் (Example is better than precept) ஆங்கிலப் பழமொழியைப் பற்றி நன்றாகச் சிந்தித்து அதனை நம் வாழ்க்கையில் கடைப் பிடிப்போமாக

# கல்கியின் நினைவுகள்

[உண்மை உணர்ந்தோன்]

## I

வாசகர்களின் பெயரில் யாருடைய பெயரையாவது நான் உபயோகிப்பேனேயானால், அது உங்களுடைய பெயரைக் குறிப்பதாய் எண்ணி, ஏமாந்து, அண்ணாந்து, மனமொடிந்து, முகம் வாடி, கண் சிவந்து, கை துடித்து, வாய் விரித்து என்னை நோக்காதீர்கள். நான் எழுதும் புனை பெயர்கள் ஒருவரையும் குறிக்காதெனினும், தங்கள் பெயரை எழுத எனக்கு உரிமை யுண்டா இல்லையா? என்பதை யோசித்துவிட்டு, பின்னர் வேண்டுமானால் என்னுடன் சண்டைக்கு வாருங்கள். நானும் ஒரு கை பார்க்கத் தயார்தான்!

எனது நண்பர் கல்கி தாம் சிறுவயதில் கண்டதும், கேட்டதுமாகிய சம்பவங்களை ஒரு எழுத்துக்கூட மறக்காமல் என்னிடம் ஒரு மாதத்திற்கு முன் சொன்னார். அவற்றில் சில மிகவும் ருசிகரமாக இருக்கின்றனவாதலின், 'தமிழரசு' வாசகர்களுக்கும் அச்சம்பவங்களில் சிலவற்றை எடுத்து இங்கு எழுதுகின்றேன். பாவம்! எனது நண்பர் கல்கிக்கு ஆங்கிலமும் தெரியாது; தமிழும் தெரியாது. ஆங்கிலம் தெரிந்திருந்தால் 'Memoirs of my life' என்ற ஒரு புத்தகத்தை எழுதி எப்போதோ வெளியிட்டிருப்பார்! ஆகவே நண்பர் மனக்குறையைத் தீர்க்கும் பொருட்டே 'கல்கியின் நினைவுகள்' என்ற கட்டுரையைத் தொடங்கினேன். கதையைக் கேளுங்கள்.

இரத்தினம் ஓர் இளம் பெண். அதிலும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளில் ஒன்றாகிய பொதுவுடைமைக் கொள்கைப்படி வளர்க்கப்பட்டவள்.

உருத்திர ராமகிருஷ்ண ஐயர் இரத்தினத்தின் மேல் கண் போட்டார். ஒரு சமயம் இரத்தினம் பாடிக்கொண்டிருந்தபோது ஐயர் சொன்னார்: 'நல்ல பாட்டு! குயிலின் குரல்! ஆஹா! ஆஹா! என்ன சங்கீதம்! பேஷ்! பேஷ்!! பலே பேஷ்!! உனது சங்கீதாமிர்தத்தைப் பருக உரிமை யுடையவர் அந்த தென்பாதி மிராசுதாரர்தான். அவர் மாதம் 200 ரூபா சம்பளம் கொடுப்பார். எனக்கு 50 ரூபா கொடுத்து உனக்காகக் காவல் வைப்பார். இது சங்கதி உனக்குப் பிரியமானால் நாளையே மிராசுதாரரை அழைத்து வருகிறேன்.

இதைக் கேட்ட இரத்தினத்தின் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது. 'ஐயர்வாள்! தேவரீர் ஆத்துக்கு வாங்களேன்! நீங்கள் எங்கள் வீட்டுக்கும் எனக்கும் மாமாவாய் இருங்கள்! நான் உங்களது குடும்பச் செலவுக்காக 20 ரூபா மாதம் தருகிறேன். நீங்கள் நமது வீட்டிலேயே சாப்பிட்டு விடலாம். மிராசுதார் வந்தால் மாத்திரம் வாராண்டாவில் படுத்துக்கொள்ளுங்கள். மிராசுதார் வராத நாட்களில் உங்களிஷ்டம்போல் என் கட்டிலிலும், மார்மேலும், மடிமேலும், இருந்து விளையாடலாம்! மாமா!' என்று கூறினாள் இரத்தினம்.

ஐயரும் 'கரும்பு தின்னக் கூலியா' என்று நினைத்து அவளது ஏற்பாட்டிற்கு இணங்கினார்.

மிராசுதாரும் வீட்டிற்கு வர ஆரம்பித்தார். நோட்டுக் கத்தைகள் இரத்தினத்தின் பெட்டியில் குவியலாயின. ஐயரும் சிறந்த ஊழியராக இருந்து வந்தார்.




இப்படியிருக்கும்போது அந் நகரவாசியாகிய பருப்பு செட்டியார் ஒருவர் புஷ்வண்டியில் வந்து இரத்தினத்தின் வீட்டில் இறங்கினார். ஐயர் திடுக்கிட்டு, 'யார் இவர்?' என்று இரத்தினத்தைக் கேட்டார். 'இவரா? இவர் ஒரு பணக்காரர்! இவர்கூட உமக்கு மாதம் 10 ரூபா தருவார்! எனக்கு 100 ரூபா தருவார்' என்றாள் இரத்தினம். ஐயரும் சரி! சரி! நடத்து உன் வேலையை!' என்றார்.

* * *

ஒரு நாள் கல்கி இரத்தினம் வீட்டிற்குப் போனபோது பருப்பு செட்டியார் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தார். இரத்தினம் பின்வருமாறு செட்டியாரை நோக்கி அர்ச்சனை செய்ய ஆரம்பித்தாள்:- சீ, சீ, காடுத, செப்புதிசி கொட்தானு சூடு, சிக்கிலி கட்ட (சீ, சீ, கழுதை, செருப்பாலேயே அடிக்கிறேன் பாரு, துடப்பக் கட்டை) என்ற வர்ணனைகள் வந்தன. அவ்வர்ணனைகளைச் சங்கீதமாகக் கொண்ட செட்டியார், ஹா! ஹா! பேஷ் பாக செப்திவி, பாக செப்திவி, இங்கொகதூரி செப்பு (நன்றாகச் சொன்னாய்! இன்னொரு தரம் சொல்) என்றார். கல்கியைக்கண்டு இரத்தினம் கும்பிட்டுச் சொல்

கிருள்:—'ஐயா, மன்னிக்க வேண்டும். இவர் எனக்கு மாதம் நூறு ரூபாய் தருகின்றார். காலையில் இங்கு வந்து உட்கார்ந்து என்னால் திட்டப்படுவதைக் கேட்டு ஆனந்த மடைவார். நான் திட்டுவதெல்லாம் அவருக்குத் தேவாமிர்தமாய் இருக்கின்றது. கடைசியில் 2 முட்டைகளை வேக வைத்து உரித்துக் கையில் கொடுப்பேன். அதைத் தின்று விட்டுப் போய்விடுவார்! மிகவும் அப்பாவியான மனிதர்.



இதைக் கேட்ட கல்கி, 'அடிபாவி! அடிபாவி!! பணத்தையும் வாங்கிக் கொண்டு திட்டலாமா?' என்றார். இரத்தினம் அதைக் கேட்டு நகைத்து, 'எங்கள் தொழில் பணம் சம்பாதிப்பதே தவிர பாபம் புண்ணியம் இவைகளையெல்லாம் பார்ப்பதல்ல. இதோ இந்த ஐயர் இண்டி மாமாவாய் இருக்கிறார். மிராசுதார் நின்று விட்டால் இவரும் பாரயி மாமாவாய் விடுவார்' என்றாள்.

கல்கி, செட்டியாரைப் பார்த்து சொல்லுகின்றார்:—'உங்கள் வீட்டில் மனைவிமார்கள் நாயகன்மார்கள் கோரியபடி செய்வதில்லை. புருடன் பாடச்சொன்னால், மாமியிருக்கா, இன்னும் மற்றவர்களெல்லாம் இருக்கா. லச்சையில்லாமல் பாடச் சொல்ரயளே?' என்று கூறிப் பாட மறுத்து விடுகின்றனர். புருடன் விரும்பும் காரியங்களை மனைவி செய்வதில்லை. இதனால்தான் புருடன்மார்கள் தங்கள் மனைவிகளை உதறித் தள்ளி, கடவுளின் மனைவிகளை நாடிப் பணத்தை வாரி யிறைக்கின்றனர். ஐயோ உலகமே! இந்து தர்மம் இப்படியுமா இருக்கும்?'

பருப்பு செட்டியார் கல்கியை நோக்கி, 'லஞ்சலேனிகூடு பிண்டாகூடு அனி நா பெள்ளா செப்புதாதி யையா' என்றார்.

தேசிய நலனைக் கருதியும், மானிடர்களின் துர்நடவடிக்கைகளைச் சீர்திருத்தக் கருதியும் பாடுபட்டு வரும் என் நண்பர் கல்கி சத்தியாக்கிரகி யாகையால், பருப்பு செட்டியின் வார்த்தைகளைக் கேட்டு சிவனே யென்று வீடு போய்ச் சேர்ந்தார்.

# கேலிக் கூத்து




முஸ்லீம் பண்டிகைகள் தொடங்கவேண்டியதுதான் தாமதம்! தமிழர்களுக்குக் குஷி பிறந்துவிடுகிறது. தமிழர்கள், புலி வேஷம், நரி வேஷம், கரடி வேஷம், கள்ள வேஷம் இன்னும் என்னென்னமோ வேஷமெல்லாம் போட்டுக்கொண்டு வீதிகளில் ஆடத்தொடங்கி விடுகிறார்கள். பலன் என்ன? முஸ்லீம்களும் இன்னும் இதர மதத்தினரும் இவர்களது பேதமையைக் கண்டு பல்லிளித்து பரிகசிக்கின்றனர். இத்திருக் கூத்துகள் நாடோடிப் பெண்களான மேயோ, கெண்டால் முதலியவர்களுக்கும், சாக்கடைப் பரிசோதகர்களான டூபாய்ஸ், மின்னே முதலிய பேர்வழிகளுக்கும் ருசிகரமான உணவுகளாக இருக்கின்றன. ‘இந்தியாவில் எல்லாம் மடையர்கள். நிர்வாணமாகக் கரியைப் பூசிக்கொண்டும், வர்ணத்தைப் பூசிக்கொண்டும் ஆடுகின்றனர்’ என்று மேனாட்டுப் புத்தகங்களில் எழுதி விடுகின்றனர். இதில் வருந்துவதில் பயனொன்றில்லை.

இம்மாதிரிக் கேலிக் கூத்துகள் இந்தியாவிலிருந்து ஆண்டவனே! என்று மறையும்?

# தர்ம துரைகள்



'கஞ்சி! ஐயோ கஞ்சி! கஞ்சி' என்று இந்தியாவில் எங்குநோக்கினும் ஏழை மக்கள் கத்துகின்றனர். இக்கதறல் கன்னெஞ்சப் பணக்காரர்கள் காதில் மாத்திரம் விழமாட்டேனென்கிறது. 'போடா மடையா! கொட்டாப்புளி தடியன் மாதிரி இருக்கிறாயே. போய் ரிக்ஷா இழுத்து சம்பாதி யேண்டா?' என்று சொல்லிப் பணக்காரர்கள் ஏழைகளை விரட்டி யடிக்கிறார்கள். கண்ணீருடன் ஏழைகள் வீதியில் செல்லும் காட்சி கன்மனதுடையவர்களையும் உருக வைத்து விடும். ஆனால் பணக்காரர்களை மாத்திரம்..............முடியாது.

பணக்காரர்களின் ஆதிக்கமும் அதிகாரமும் தற்போது இந்தியாவில் தாண்டவமாடுகின்றது. ஏழைப் பஞ்சை மக்கள் இவர்கள் வலையில் சிக்கி ஏங்கி நிற்கின்றனர். கொடுமை! கொடுமை!!

ஆனால் இன்று இந்தியாவில் தேவாலய உற்சவாதிகளில் தேவடியாள்களின் வான்கோழி நடனங்களுக்காக இப்பணக்காரர்கள் தமது பணத்தை வாரி வாரி இறைக்கின்றனர். இத்தர்மதுரைகளின் மதியை நாம் என்னவென்று வர்ணிப்பது ?

# தன்னைப் பலியிடல்

—:o:—

[கனகம்]

ஒருவரது முகப் பொலிவும், நல்லொழுக்கமும், பிறர் துன்பந் தொலைக்குங் குணமும், புகழுமே மற்றவர் மனத்தில் அன்பை உதிக்கச் செய்யும். ஏழைப் பெண்ணாகிய சாரதா எவன்மீது அன்பு வைத்திருந்தாளோ அவனது நன்மைக்காகவே தன் உயிரைப் பலி யிட்டாள்.

அவள் எவன் மீது அன்பு கொண்டிருந்தா ளென்பது அவனுக்குத் தெரியாது. அவள், டில்லிப் பட்டணத்தின் எல்லைப் புறத்தில் ஓர் குடிசையில் தன் பாட்டியாரோடு வசித்து வந்தாள். தன் பாட்டியார் தைத்துக் கொடுக்கும் குழந்தைச் சட்டைகளைத் தினந்தோறும் விற்று, அதனால் வரும் ஊதியத் தைக் கொண்டு இருவரும் சீவித்து வந்தார்கள்.

ஒரு நாள் சில துட்டச் சிறுவர்கள், சாரதா தனிமையாய்ப் போவதைக் கண்டு அவளைப் பரிகசித் தார்கள். சிலர் அவளது ஆடையைப் பற்றி ஈர்த்த னர். அவள், அவர்கள் செய்யும் இன்னல்களைப் பொறுக்க முடியாமல் ஓ வென்று அழுதாள். அவளை 'ஏன் அழுகிறாய்' என்று கேட்பதற்கு ஒருவரும் அவளிடம் வர வில்லை. அத் துட்டப் பயல்களெல்லாரும் பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளாதலால், அவளிடம் வந்து, அவர்களைத் துரத்துவதற்கு எவருந் துணியவில்லை.



அச் சமயத்தில், அவள் அழுகுரலைக் கேட்ட இராச புத்திர வாலிப னொருவன் அவளிடம் ஓடி வந்தான். அவன் ஓடி வருவதைக் கண்டதும் அத் துடுக்கர்கள் அவளை விட்டு ஓடி மறைந்தார்கள்.

இராச புத்திர வாலிபன், தெருவில் சிதறிக் கிடக்கும் எல்லாச் சட்டைகளையும் பொறுக்கித் தூசு துடைத்து முன் போலச் சீர்ப்படுத்தி, அச்சிறுமிக்குக் கொடுத்தான். பிறகு, அவன் அவளை 'உன் வீடு எங்கே' என்று கேட்டு, அவள் பின்னோடு சென்று, அவளை அவளது குடிசையில் சேர்த்தான்.

இச் சம்பவத்திற்கு முன் அவள் அந்த இராச புத்திர வாலிபனைச் சந்தித்ததே யில்லை. இராச புத்திர வீரன், அவளைச் சந்தித்த அன்று முதல், அவளை நாடோறும் பார்த்துப் போவான். அவன் வருகை அவளுக்குப் பெரு மகிழ்ச்சியை யுண்டாக்கியது. ஆனால், அம்மகிழ்ச்சி ஏன் உண்டாகிறதென்பது அவளுக்குத் தெரியாது.

அவன், அவளுடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றி அவளை விசாரித்தான். அதற்கு அவள் 'என் தந்தை யின்னாரென்பது எனக்குத் தெரியாது. என் தாய் எப்போது இறந்தாளென்பதும் எனக்கு ஞாபகமில்லை. என் பாட்டியைத்தான் எனக்குத் தெரியும். வேறு சிநேகிதர்களுந் தெரியாது. உறவினருந் தெரியாது. நாங்கள் மிக்க ஏழைகள். வறுமைப் பிணியால் வருந்துகிறோம்' என்று சொன்னாள்.

அதனைக் கேட்டதும் இராச புத்திரன் அவளை விட்டு விலகினான்.

மறுநாட் காலையில் மூன்று வேலைக்காரர்கள் சாரதாவின் குடிசைக்குப் பல வகைத் தின்பண்டங்களையும் பழங்களையும் கொண்டு வந்தார்கள். அவற்றைச் சாரதாவின் பாட்டியார் வாங்கிக்கொள்ள மறுத்தாள். ஆனால், அவர்கள் அவள் பேச்சைக் கேளாது, அவற்றை அங்கேயே வைத்துப் போயினர். உடனே அம்முதியவள் தன் பேர்த்தியை நோக்கி இப்பண்டங்களை யார் அனுப்பியதென்று உனக்குத் தெரியுமா என்று பயமுறுத்திக் கேட்டாள். எனக்கு அவர்கள் யாரென்பதும் தெரியாதென்றாள் பேர்த்தி.



மேலே சொன்ன பொருள்கள் இராச புத்திரனால் அனுப்பப்பட்டனவென்று சாரதாவுக்குத் தெரியும். ஆனால், அவன் மறுநாள் தன்னிடம் வந்தபோது 'அப்பண்டங்களை யார் அனுப்பியது?' என்று அவனைக் கேட்டாள் சாரதா. அதற்கு அவ்வாலிபன் புன்னகை செய்து 'சாரதா! அவற்றை நான் அனுப்பவில்லை. அவற்றை யார் அனுப்பியதென்றும் எனக்குத் தெரியாது' என்றான்.

அதுமுதல் வேலை ஆட்கள் வாரந் தோறும் பல வகைத் தீம்பண்டங்களைக் கொணர்ந்து குடிசைக்குள் வைத்துப் போவார்கள். சாரதாவின் பாட்டியார் அவற்றை வேண்டா மென்று மறுத்து அவர்களை வையினும், அவர்கள் அதனைச் சிறிதுங் கேளாதவர் போலச் சிரித்துக் கொண்டே செல்லுவார்கள். அவர்கள் காலந் தவறாமல் கிரமமாகப் பல வகைப் பண்டங்களைக் கொணர்ந்து குடிசையில் வைத்துப் போவார்கள்.

இவ்விதமாக ஓராண்டு கழிந்தது. சாரதா கவலையற்றிருந்தாள். வெளியே போய்ச் சட்டைகளை விற்று வரும் வேலை யிராது போயிற்று. அதனால் அவளுக்கு அதிக ஓய்வு நேரம் இருந்தது. அவ் வாலிபன் தன்னிடம் வரும் போது அவனுக்கு வந்தனங் கூறி, அவனுடன் சம்பாஷித்துக் காலங் கழித்து வந்தாள்.

தினந்தோறும் வரும் வாலிபன், ஒரு நாள் சாரதாவைப் பார்க்க வர வில்லை. மறுநாளும் வரவில்லை. அவன் 'நான் இனி வர மாட்டேன்' என்றும் அவளிடம் சொல்லவில்லை. இப்படிப் பல பகல் கழிந்தன. இராச புத்திரன் வரவில்லை. சாரதா மெலிவுற்றாள்.

வேலைக்காரர்கள், தின்பண்டங்களை இரண்டு மூன்று மாதம் கிரமமாகக் கொண்டு வந்தார்கள். பிறகு, அவர்களையும் அவள் காணவில்லை.

## II

சாரதா அவனது பெயரையும் இருப்பிடத்தையுங் கேட்டாளில்லை. அவள் பேராவலோடு அவனது வருகையைப் பார்த்திருந்தாள். அவன் வர வில்லை. அவனை எங்கே தேடுவதென்றும் அவளுக்குத் தெரியவில்லை.

இவ்விதமாக ஓராண்டு சென்றது. பாட்டி அம்மை நோயும் படுக்கையு மானாள். அவர்கள் பட்டினியால் வருந்தினார்கள். சாரதா ஒன்றுந் தோன்றா திருந்தாள். எந்த வீட்டிலாகிலும் வேலை செய்து பிழைக்கலாமென்று நினைத் தாள். ஆனால், அவளுக்கு ஒருவருந் தெரியாது. துட்டப் பயல்கள் செய்யும் பரிகாசத்திற்கும் குறும்புத் தனத்திற்கும் பயந்து ஊருக்குள் தனியே போவதற்கு அவள் மனந் துணியவில்லை.

முதல் முதல் சாரதா வீட்டிற்குப் பல வகைத் தின்பண்டங்களையும் மற்றப் பண்டங்களையுங் கொண்டு வந்த மகமதியன், ஓர் நாள் அவர்கள் குடிசையின் பக்கமாகப் போய்க்கொண் டிருந்தான். அவன், குடிசைக்குள் நுழைந்து, சாரதாவைக் கண்டு 'நீங்கள் சௌக்கியமா யிருக்கிறீர்களா' என்று விசாரித்தான்.

அவள், தங்கள் வறுமைப் பாட்டைக் கூறித் தனக்கு ஒரு வேலை கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று அவனைப் பெரிதும் வேண்டிக் கொண்டாள்.

அதனைக் கேட்ட மகமதியன் மனமிரங்கி 'இப்போது இராச புத்திரனும் வருகிறதில்லை. வேலைக்காரரும் பண்டங்களைக் கொண்டு வருகிறதில்லை. அம்மா! இப்படித்தா னிருக்கிறது உலகப் போக்கு. நல்லது, நீ வருத்தப் படாதே. நான் உனக்கு பேகம் மஹாலில் ஒரு வேலை சம்பாதிக்கக் கூடும். அது உனக்குச் சம்மதமா?' என்றான்.

சாரதா மிக்க ஆவலுடன் 'ஐய! எந்த வேலையானாலும் சரி, எனக்குச் சம்மதமே. எனக்கு வேலை கிடைக்காமற் போகுமாயின் என் பாட்டியம்மாள் பட்டினியால் இறந்து போவாள்' என்றாள்.

'நாள் நாளையதினம் வருவேன். உன்னோடு உன் பாட்டியையும் அழைத்துக்கொண்டு வா' என்றாள்.

மறுநாள் மகமதியன் வந்து, இருவரையும் அழைத்துக்கொண்டு போனான். அவர்களை பேகம் மஹாலுக்கருகில் சிறிய அறையொன்றில் குடியிருக்க ஏற்பாடு செய்தான். சாரதா சீலிம் இளவரசனுக்குப் பிரியமான பேகம் பெருமாட்டிக்கு வேலைக்காரியாக அமர்ந்தாள். அவளைப் பார்த்த ஒவ்வொருவரும் அவளது ஒழுக்கத்திற்கும், அடக்கத்திற்கும் அவளிடத்தில் அன்பு பாராட்டி வந்தார்கள்.

ஈராண்டு கடந்தன. ஓர் நாள் சாரதா, தன் பாட்டியாரைப் பார்க்கப் போய்க்கொண் டிருந்தாள். அப்போது இராஜ மாளிகையை நோக்கி மிக்க ஆடம்பரமாக ஓர் பெரிய ஊர் கோலம் தெருவில் வந்து கொண்டிருந்தது. அதனைப் பார்க்கத் திரளான சனங்கள் கூடினார்கள்.



அவ்வூர் கோலத்தில் அநேக யுத்த வீரர்கள் அணிவகுத்து நின்றனர். அநேக குதிரைப் படைகளும் யானைப் படைகளும் வரிசை வரிசையாக வந்தன. பலவித கொடிகள் காற்றில் அசைந்தாடின. பலவகை வாத்தியங்கள் முழங்கின. அவ்வித ஊர் கோலத்தைச் சாரதா எப்போதும் பார்த்ததேயில்லை. அவள் சனக் கூட்டத்திற் போகப் பயந்து, ஓர் சிறிய கடைக்குப் பக்கத்தில் நின்று அதனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஊர் கோலம் மெதுவாகவும் கம்பீரமாகவும் சென்றது. அதன் நடுவே ஓர் உயர்ந்த யானையின் மீது பொற்குடை நிழலில் ஓர் வீர புருஷன் உட்கார்ந்திருந்தான். அவன் யார்!

அவனைப் பார்த்ததும் சாரதா உடல் சிலிர்த்தாள்; நடுங்கினாள்; பெருமூச் செறிந்தாள்; பதுமைபோல் அசைவற்று நின்றாள். அவன் யார்! ஈராண்டாக அவள் எவனை நினைந்து வருந்தினளோ அவன்தான். அவன்தான் இராச புத்திர வாலிபன். ஆகவே, அவன் ஒரு பெரிய இளவரசனாவான்.

அவள் கற்சிலை போல் அசையாது நின்றாள். அவள் அங்கே எவ்வளவு நேரம் நின்றிருந்தா ளென்பது அவளுக்குத் தெரியாது. ஊர்கோலம் முடிந்தது. சனக் கூட்டங் கலைந்தது. அவள் அங்கேயே பைத்தியம் பிடித் தவள் போல் நின்றிருந்தாள்.

கடைக்காரி, சாரதா வெகு நேரமாக நிற்பதைக் கண்டு, அவள் மீது இரக்கமுற்று 'மகளே! உனக்கு உடம்பு சுகமில்லைபோல் காண்கிறது. நீ சற்று நேரம் உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொள்' என்று வேண்டினாள்.

கடைக்காரி சொன்னது சாரதாவின் காதில் விழுந்ததும், அவள் மனப் பைத்தியம் தெளிந்தது. உடனே திடுக்கிட்டு, 'தாயே! என் உடம்புக்கு ஒன்றுமில்லை, நான் சுகமே யிருக்கின்றேன். இதோ நான் போகின்றேன்' என்றாள்.

அதனைக் கேட்டும் கடைக்காரி 'குழந்தாய்! உனக்கு உடம்பு சுகமில்லை போல் காண்கின்றது, நீ போக வேண்டாம்' என்று வற்புறுத்தினாள்.

இல்லை, இல்லை. வெயிலினால் உடம்பு கொஞ்சம் அசௌக்கியமா யிருந்தது. வேறொன்றுமில்லை. அம்மா! இப்போது ஊர் கோலத்திற் சென்ற வாலிபர் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?' என்றாள் சாரதா.

'குழந்தாய்! நீ இந்த டில்லிப் பட்டணத்திற்குப் புதியவள் போல் காண்கின்றது. இதற்கு முன் அவ்விள அரசரை நீ பார்த்ததில்லையா? அவர் பெயர் கீர்த்தி நாதர். அவரே அடுத்த முறையில் நமது சக்கரவர்த்தியாக வரக் கூடியவர்' என்றாள்.

'அம்மா! நான் அவரைப் பார்த்ததே யில்லை' என்று சொல்லி அக் கடையை விட்டு வேடர்களால் துரத்தப்பட்ட மானைப் போல் ஓடிப் போனாள்.

## III

சில மாதங்களுக்குப் பிறகு, இளவரசன் தூக்கத்தி லிருக்கும்போது, யாரோ வொருவன் அவனை எழுப்பி, சக்கரவர்த்தி இறந்து போனாரென்று தெரிவித்தான். இளவரசன் துடிதுடித் தெழுந்து வெளியே வந்தான். பட்டணமெங்கும் பெருங் குழப்பமா யிருந்தது. சனங்கள் பைத்தியம் பிடித்தவர்போல் ஓடி அரண்மனையைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் சக்கரவர்த்தி இறந்தாரென்ற சங்கதி மெய்யோ பொய்யோ வென்று தெரிந்து கொள்ள ஆவலா யிருந்தார்கள்.

இளவரசன் தந்தையின் அரண்மனையை நோக்கி ஓடினான். அவன் ஓடி வருகையில் யாரோ வொருவர் அவனை இருட்டில் போக வொட்டாமல் வழி மறித்தனர்.

'இளவரசே! கடவுள் பொருட்டு நீர் போக வேண்டா. சீலிம் மனிதர்கள் உம்மைச் சிறைப்படுத்தக் காத்துக்கொண் டிருக்கிறார்கள்' என்று அழுகுர லோடு சொல்லும் ஓர் பெண் குரலைக் கேட்டான்.

அவன் 'ஆ, என்னையா? அது வீண் பேச்சு' என்று சொல்லி ஓடுவதற்கு யத்தனித்தான். ஆனால் அவன் ஒரு சிறு பெண்ணின் இளங் கைகள் அவனது

இரண்டு கால்களையுங் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, போக வேண்டா, போக வேண்டா' என்று கெஞ்சுவதைக் கேட்டான்.

'ஏ! பிசாசே! நீ யார்? சலிம் சிம்மாசன மேறும்படி, என்னைப் போக வொட்டாமல் தாமதப் படுத்துகிறாய். என் காலை விடு, என்னை வழி மறிக்காதே, தூரப்போ' என்று கடுகடுத்துச் சொன்னான் இளவரசன்.

அப்போதும் அவள் அவன் காலை விடாமல் பற்றிக்கொண் டிருந்தாள். அவன், இன்னுங் கால தாமதஞ் செய்வது கூடாதென்று நினைத்து, அந்தப் பெண்ணைக் காலால் தூக்கி எறிந்து விரைவா யோடினான். அவள், பளுவான பொருள் கல் தரையில் வீழ்வதைப் போல் தொப்பென்று வீழ்ந்தாள். அதனால் அவள் தலையில் கல்லடிக்கப்பட்டு காய முண்டாகி இரத்தம் வடிந்தது.

சலிம் மனிதர்கள் ஓடிவந்த இளவரசன் மேல் வீழ்ந்து தாக்கி அவனைச் சிறைப்படுத்தினார்கள்.

பிறகு, அவன் சலிம் கையினின்றுந் தப்புவதற்குத் தன்னைப் போகவொட்டாமல் வழிமறித்தது யாரென்று நினைத்தான். அது தெரியவில்லை. மேலும் மேலும் நினைத்தான். அது ஒரு பெண்ணின் குரலென்று அவன் ஞாபகத்திற்கு வந்தது.

உடனே மின்னொளிபோல் சாரதாவின் முகம் அவன் மனத்தில் பளிச்சென்த் தோன்றியது, 'அவள்தான், அவள்தான் சந்தேகமில்லை' என்றான்.

அவனோ சிறையி லிருக்கிறான். அவன் என்ன செய்யக்கூடும்? சாரதா பேகம்மஹாலுக்கு எப்படி வந்தாள்? இளவரசன் சக்கரவர்த்தியால் காஷ்மீர நகரத்தை வெற்றி கொள்ளும்படி அனுப்பப்பட்டான். அவன் அங்கே ஈராண்டு தங்கும்படி நேர்ந்தது. அதனாற்றான், அவன் சாரதாவை ஈராண்டு பார்ப்பதற்கு இல்லாமற் போயிற்று. அவனில்லாதபோது அவனுடைய ஆட்கள் சாரதா வீட்டிற்குத் தின்பண்டங்களைக் கொண்டுபோவதை நிறுத்தி விட்டார்கள். அது அவனுக்குத் தெரியாது.

கீர்த்திநாதன் காஷ்மீர நகரத்தை விட்டுத் திரும்பிவந்த மறுநாள் சாரதாவைப் பார்க்கப் போனான். அவள் அங்கில்லை. அயலாரை விசாரித்தான். 'அவள் எங்கு போனதுந் தெரியாது' என்றார்கள். அவளைக் கண்டுபிடிக்கப் பட்டண மெங்குஞ் சுற்றினான். அவளைக் காணவில்லை. அவள் பேகம் மஹாலில் இருப்பது அவனுக்குத் தெரியாது.

அவன் சிறைக்கூடத்தி னின்றுந் தப்பி யோடிப்போவதற்கு எண்ணங் கொண்டான். அதற்கு நல்ல சமயம் வாய்த்தது. அவனுடைய சிற்றப்பன் இராஜாமான்சிங்கு, அவனைச் சிறைக்கூடத்தி னின்றும் வெளிப்படுத்த ஏற்பாடு செய்து, அவனை இராஜபுதனத்திற்கு ஓடிப்போகும்படி சொன்னான்.

ஆனால் கீர்த்திநாதன் ஓடிப்போகவில்லை. சாரதாவைத் தேடினான். அவள் பேகம் மஹாலில் பேகம் இடத்தில் வேலைக்காரியாக இருப்பதை அறிந்தான்.

அவர்களிருவரும் இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்தார்கள்.

இளவரசன், 'நீ என்னை மணஞ் செய்துகொள். நாமிருவரும் இராஜபுதனம் ஓடிப் போகலாம்' என்று அவளை வற்புறுத்தினான்.

அதனைக் கேட்டதும் சாரதா கண்களில் நீர் ததும்பியது. 'மாட்சிமை தங்கிய அரசே! அடியாள் அக் காரியத்திற் கிணங்க ஈனபுத்தி யுடையவளு



மல்ல; தன்னயங் கருதுபவளு மல்ல. தங்கள் மகிமையைப் பற்றி எல்லாந் தெரிந்து கொண்டேன். மேன்மை பொருந்திய தாங்கள் அற்பப் பிராணியாகிய என்னை மண முடிப்பீர்களாயின் நீங்கள் சிங்காதன மேறும் பாக்கியத்தை யிழப்பீர்கள். தாங்கள் இவ் வேழையைக் காதலித்ததே அடியாள் செய்த புண்ணியம். ஆயிர மடங்கு செல்வம் பெற்றவளானேன். இதைவிட இவ் வெளியாள் விரும்பக் கூடியது என்ன விருக்கிறது? பெருமை வாய்ந்த தங்கள் மனத்தில் அடியாளுக்குச் சிறிது இடங் கிடைத்ததற்கு உண்மையில் நான் பேரானந்தங் கொண்டேன்' என்றாள். பின்னர் இளவரசன் அவளை எவ்வளவு வற்புறுத்தியும் அவள் மணஞ் செய்துகொள்ள சம்மதிக்கவில்லை.

இளவரசனாகிய கீர்த்திநாதன் இராஜபுதனம் போகவில்லை யாதலால், அவன் சிற்றப்பன் அவனைக் கண்டிக்க, அவன் அதனைப் பொறுக்காதவனாய், சீலிம் இளவரசன் முன் சென்று கீழ்ப்படிந்தான்.



பின்னர் அவன் வாலியர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டான். பிறகு அவனைச் சிரச்சேதம்பண்ணும்படி கட்டளை யிடப்பட்டது. அவனைக் கிடத்தி சிரச்சேதஞ் செய்ய வாளைத் தூக்கித் தாழ்த்தும் நேரத்திற்குள் ஓர் பெண் அதி விரைவாக வோடி அவன் கழுத்தின் மேல் தன் கழுத்தை வைத்தாள். அதை ஒருவரும் பார்க்க வில்லை. இச் சம்பவம் பிறர் கண்ணுக்குப் புலப்படுமுன், இமைப்போதில் இருவர் தலைகளும் வேறாயின.

# ஓரிரவில் மூன்று கொலை

[ஜீவா]

அச்சம் பெரிதால் அதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்சம் நினையுங்காற் கோக்கொலையாம்—நிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்தாரம்
நம்பற்க நாணுடை யார்.

—நாலடியார்

இந்தியர்கள் பொருள் ஈட்டும் பொருட்டுத் தங்கள் நாடு விட்டுக் குடியேறி வசித்து வரும் நாடுகளில் பர்மா தலை சிறந்த தொன்றாகும். அந் நாட்டில் இந்தியர்கள் பர்மியர்களின் நட்பைப் பெற்று பல இலாகாக்களிலும் உத்தியோகங்களை வகித்து, தாங்களும் நன்மை பெற்றதோடு, அவர்கள் முன்னேற்றத்திலும் கருத்தைச் செலுத்தி யுழைத்து வந்தனர். இவர்கள் கூட்டுறவைப் பெற்ற பின்னரே பர்மியர்கள் கல்வி முதலிய பல துறைகளிலும் முன்னேற்ற மடைந்தனர். இஞ்ஞான்று பர்மியர்கள் கல்வியிலும், அரசியல் ஞானத்திலும், பொருளாதார முதலிய பிற துறைகளிலும் மேம்பட்டு விளங்குகிறார்க ளென்றால், அதற்கு இந்தியர்களின் உண்மையான பேருழைப்பே காரணமென்று கூறின் அது மிகையாகாது. அவ்வா றிருந்தும் துரதிர்ஷ்ட வசமாக, சமீபத்தில் பிரித்தாளும் அரசியல் தந்திரத்தில் வல்ல ஒரு வகுப்பாரின் சூழ்ச்சியால், பர்மியர் இந்தியரை வெறுத்து, அவர்களை நாட்டை விட்டு ஓட்டுகின்றனர். எனவே, இச்சமயம் பர்மாவில் இந்தியர்கள் வாழ்வது மிகவும் கடினமாக இருக்கிறது. அது நிற்க,

பர்மாவில் இந்தியர் ஆட்சி பெற்றிருந்த நாளில், கமலநாதன் என்னும் ஒரு வாலிபன், அங்குள்ள கம்பெனிகளில் ஒன்றில் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தான். அங்கு அவனுக்கு வேதவல்லி என்னுமொரு மாது சிநேகமானாள். அவளுக்கு முப்பது வயதிருக்கு மெனினும், இருபது வயதுடைய இளமங்கை போலக் காணப்பட்டாள். கமலநாதனுக்கு இருபத்திரண்டு வயதிருக்கும். நாளாக ஆக, இவர்களிடையே ஏற்பட்ட நட்பு 'காத'லாக மாறியது. அக்'காத'லின் பயனாக, கணவனைப் பிரிந்து தனித்து வாழும் அம்மங்கையும், விவாகமின்றிக் காலங் கழிக்கும் அவ்வாலிபனும் கணவன்

மனைவியர் முறைப்படி அநுபவிக்கும் உலக இன்பங்களை யெல்லாம் ஒன்று விடாது தங்கு தடையின்றி அநுபவித்து வந்தனர்.

ஆனால் இவர்கள் 'காதல்' நீடித்து நிற்கவில்லை. கமலநாதனுக்கு அவன் தந்தையிட மிருந்து கடித மொன்று வந்தது. அதில் அவனைப் பிரிந்து முதியவர்களான தங்களால் இனி சிறிது காலமும் இருக்க முடியாதென்றும், கடிதம் கண்டவுடனே தவறாது வந்து சேரவேண்டுமென்றும், வந்தவுடன் அமருவதற்கு ஒரு உத்தியோகத்திற்கும் ஏற்பாடு செய்திருப்பதாகவும் அவனது பெற்றோர் குறிப்பிட்டிருந்தனர். குறித்துள்ள வண்ணம் அவன் உடனே பர்மாவை விட்டுத் தன் சொந்த ஊருக்குப் போக வேண்டியவனானான். எனவே, அவன் தன் ஆசை நாயகியாகிய வேதவல்லியிடம் பிரியா விடை பெற்று சென்னைக்குப் புறப்பட்டான். அவ்வாறு அவன் பிரியுஞ் சமயம், வேதவல்லி, தன் தங்கை யொருத்தி சென்னையில் வாழ்வதாகவும், அவளிடம் தான் கொடுக்குங் கடிதத்தை யளிக்கும்படியும் கூறிக் கமலநாதனிடம் கடித மொன்றைக் கொடுத்தாள்.




கமலநாதன் தன் பெற்றோரிடம் வந்து ஒரு வாரம் ஆயிற்று. அவன் தந்தை இங்கு அவனுக்கு ஒரு உத்தியோகமும் பார்த்து அதில் அவனை யமர்த்தி விட்டார். ஆகவே, அவன் மீண்டும் பர்மா செல்ல முடியாதவனானான். இவ்வாறிருக்க, ஒரு நாள் அவனுக்கு வேதவல்லி கொடுத்த கடிதத்தின் ஞாபகம் வரவே, அதை அவன் எடுத்துக்கொண்டு, அவள் தங்கை வசிக்கும் இடத்தைத் தேடிக் கண்டு பிடித்து, அப் பெண்மணியிடம் தான் யார் என்பதையும் அறிவித்தான்.

குமுதவல்லி என்னும் பெயருடைய அப்பெண் கமலநாதன் தன் தமக்கையால் அனுப்பப்பட்டவன் என்பதை அறிந்தவுடன் அவனைப் பிரிய வசனங் கூறி யுபசரித்தாள். குமுதவல்லி பதினெட்டு வயது நிரம்பிய பேரழகி. கள்ளங் கபடறியாத காரிகை. வேதவல்லியைப் போல் அவள் தீய வழிகளில் சென்றறியாதவள். அவள் கணவன் வீரபத்திரன் என்பான் போலீஸ் இலாகாவில் கான்ஸ்டேபிலாக வேலை பார்த்து வருகிறான்.

வேதவல்லியைக் காட்டிலும் குமுதவல்லி அழகு மிக்கவளாகவும், இளம் பருவத்தவளாகவு மிருப்பதை யறிந்த கமலநாதன் மனம் எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி யெண்ணி யேங்கியது. கண்டால் கிறுக்க வைக்கும் ஒப்புயர்வற்ற அவள் கட்டழகுகள் கண்ணுற் பருகிய கமலநாதனைக் காமவெறி யூட்டித் தலை கிறுக்கியது. அவனது வஞ்சக எண்ணத்தை வெளிக்குக் காட்டாது மறைக்க அவன் பெரிதும் பாடுபட்டான்; வேதவல்லி அளித்த கடிதத்தை அவளிடம் அளித்தான். குமுதவல்லி அக் கடிதத்தைக் கண்டு அகமகிழ்ந்து அதைப் படித்துப் பார்த்து தனது தமக்கையின் நிலைமையை நன்கு அறிந்து கொண்டதோடு கமலநாதனிடம் விசாரித்தும் தெரிந்த பின், அவனைக் காண நேர்ந்ததற்காகத் தான் மகிழ்வதாகத் தெரிவித்துக் கொண்டாள். கமலநாதனும் குமுதவல்லியைப் பார்த்ததற்காக மகிழ்ச்சி யடைந்ததாகக் கூறினன். இத்தோடு அவர்கள் முதல் நாள் சந்திப்பு முடிந்தது.




அன்று குமுதவல்லியின் இளநலச் செவ்வியைக் கண்டு காம வெறி கொண்டு பிரிந்த கமலநாதன், அவளை எவ்வாறாயினும் கூடாமல் போவதில்லை என்று தன் மனதில் உறுதி கொண்டான். அவன் அதற்கான சூழ்ச்சிகளைக் கடைப் பிடித்து, குமுதவல்லியின் வீட்டுக்குக் காரண மில்லாமலே அடிக்கடி சென்று அவளோடு வார்த்தை யாடிவிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டான். கமலநாதனின் வஞ்சக நினைவைத் தேர்ந் தறியாத குமுதவல்லி அவனோடு அளவளாவிப் பேசி மகிழ்ந்து வந்தாள்.

இவ்வாறு ஒரு மாதங் கடந்தது. கமலநாதனின் சாகச வார்த்தையும், கள்ள நடிப்பும் குமுதவல்லியைப் படிப்படியாக மயக்கி வந்தது. அவளது மனக் கண்ணில் கமலநாதனது வசீகர வடிவம் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. குமுதவல்லியின் மனச் சலனத்தால் அவள் செயலும் மாறுத லடைந்தது. தன் உள்ளம் அவனிடத்து வயப்பட்டு வருவதை யறிந்த அவள் கமலநாதனைக் காணுங் காலத்து நடுக்கங் கொண்டாள். அவளுக்கு அவனைக் காண்பதில் ஒரு விதத்தில் மகிழ்ச்சியும், மற்றொரு புறத்தில் அச்சமும் உண்டாயிற்று. முன்னெல்லாம், கமலநாதன் வருவதைத் தொலைவில்

காணும் போதே முக மலர்ந்து வரவேற்று அளவளாவும் குமுதவல்லி, இப்போது நாணிக் கோணி அச்சந் தோன்ற சிறிது நேரமே உரையாடி அனுப்பலானாள்.

குமுதவல்லியின் மாறுபட்ட நிலையைக் கள்ள உள்ளத்தனுகிய கமலநாதன் எளிதில் அறிந்து கொண்டான். தன் சூழ்ச்சி கூடிய சீக்கிரம் பலிக்கக் கூடும் என்று நினைந்து அவன் அப்போதே குதூகல மடைந்தான். குமுதவல்லியின் மன வேதனையோ அளவு கடந்து பெருகியது. அவள் கமலநாதன் அடிக்கடி தன்னிடம் வருவதன் நோக்கம் யாதா யிருக்கு மென்பதை யறிய ஆவல் கொண்டாள். அது குறித்துத் தன்னைத்தானே பல முறை கேட்டுக்கொண்டு கடைசியில் ஒரு வித முடிவுக்கும் வராது தவிக்கலானாள்.

வழக்கம் போல் ஒரு நாள் மாலை கமலநாதன் குமுதவல்லியிடம் வந்து பேசிக்கொண் டிருக்கும்போது, அவள் தடுமாற்றத்தோடு அவனை நோக்கி, 'அன்பரே! உம்மை ஒன்று கேட்க விரும்புகிறேன். தயவு செய்து ஒளியாது பதில் கூறுவீரா?' என்று கேட்டாள்.

கமலநாதன் இதைக் கேட்டதும் சிறிது திகைப்புக் கொண்டானெனினும் ஒருவாறு துணிபடைந்து, 'என்ன அது? நீ கேட்கும் வினுவுக்கும் பதில் சொல்லாது போவேனு! உன்னிடமும் ஒளித்துப் பேசக்கூடியதொன் றிருக்கிறதா?' என்று சாதுர்யமாகப் பேசினன்.

குமுதவல்லி, 'ஒன்று மில்லை. நீர் இங்கு அடிக்கடி வந்து செல்வதற்குக் காரணம் என்ன? ஏதோ ஒரு நோக்கத்துடனேயே நீர் இங்கு வந்து அளவளாவிச் செல்வதாக எனக்குத் தெரிவதால், அதை யறிய என் மனம் மிகவும் ஆவலுடன் விழைகிறது' என்று கூறினள். அச்சமயம் அவள் உடம்பு மாந்தளிர் காற்றில் அசைவது போல் நடுங்கியது.

இதுதான் தக்க சமயம் என்று அறிந்த கமலநாதன், 'குமுதா! யான் இங்கு அடிக்கடி வருவதன் காரணத்தைச் சொல்லவும் வேண்டுமோ! அழகு நிலயமாகிய உன்னைக் கண்டு களிக்கவே யான் நாடோறும் வந்து கொண் டிருக்கிறேன். உன் புன்னகை தவழ்ந்த இனிய முகத்தைப் பாராமல் என்னல் இருக்க முடியவில்லை. என் செய்வேன்' என்று கெஞ்சலோடு கொஞ்சிக் கொஞ்சிக் கூறினன்.

அவன் பேசிய மொழியின் உட் பொருளை யெளிதில் உணர்ந்த குமுதவல்லி மனந் திடுக்கிட்டாள். அவள் இவ்வித பதிலை யெதிர் பார்க்கவே யில்லை. அவள் உண்மையிலேயே பேரச்சங் கொண்டாள். பாம்பின் வாயி லகப்பட்ட தேரை போல அவள் ஒரு கணத்தில் பல பல எண்ணினள். அவள் மனம் பேதலித்து வந்ததற்குக் காரணத்தை யப்போதே யுணர்ந்தாள். தீய நினைவு கொண்டு தன்னுடன் உரையாடி வந்த கமலநாதனை அக்கணமே அவ்விடத்தை விட்டுப் போய் விடும்படி கட்டளை யிடலாமா என்று அவள் கருதினள். இதற்குள் அவன் தன் தமக்கையின் சிநேகித னுயிற்றே என்ற எண்ணம் அவள் மனத்தில் தோன்றவும், கண்ணேட்டமின்றி அவனை யெவ்வாறு கடிந்து பேசி

விரட்டுவது என்று நினைந்து ஏங்கினள். கமலநாதன் தன்னிடம் வரும் நோக்கத்தைத் தன் கணவன் அறிந்தால் என்னாகும் என்று எண்ணும்போதே அவள் தேகம் நடுக்கங் கொண்டது. இந் நிலையில் அவள் என்ன செய்வ தென்று தெரியாது பதுமைபோல் அசைவற்று நின்றாள்.

அவள் தன் மனதோடு போராடி அயர்வுற் றிருப்பதை யுணர்ந்த வஞ்சக வடிவினனான கமல நாதன் அவளிடம் மெல்ல நெருங்கி, 'குமுதா! கண்ணே! ஏன் மௌனமுற்றிருக்கிறாய்? உன் குமுத வாய் மலர்ந்து ஒரு வார்த்தை யுரையாயா? நான் உன்னிடங் கொண்டுள்ள காதலின் தன்மையை உணர்ந்தால், நீ இவ்வாறு என்னைத் துன்பக் கடலில் ஆழ்த்திப் பார்த்துக் கொண் டிருப்பாயா? இரக்க நெஞ்சமுள்ள உனக்கு இது அழகா! இது தகுமா! இது முறையோ? இது தருமந்தானோ!' என்று சாகச மொழிகள் பல இயம்பி அவளை மெல்லத் தழுவ லானான்.




தூர்த்த நினைவு கொண்ட கமலநாதன் குமுதவல்லியை அணைக்கத் தொடங்கியதும், அவள் மின்சார சக்தியினால் தாக்குண்டவள் போன்ற ஒருவித உணர்ச்சியை அடைந்தாள். எனினும் அவள் தேகம் பதறியது. அவள் வாய் குழற, 'ஐயோ! என் கணவன்..................' என்று கூறியவள் மேல் பேச நா வெழாது தத்தளித்தாள்.

குமுதவல்லியின் மன நிலையை அறிந்தபின் மாயங்களில் வல்ல கள்வனாகிய கமலநாதன், 'என் ஆருயிர்க் காதலி! அஞ்சாதே! உன் கணவனால் உனக்கு யாதும் துன்பம் நேராதவாறு நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்று அவளுக்குத் தேற்று மொழிகள் கூறியவாறே, அவளை யிறுகப் பிடித்து மார்புறத் தழுவி அவளது கனி வாயிதழ்களில் முத்தமிட்டான். அடுத்த கணமே அம்முத்தம் இரட்டிப்பாகக் கொடுக்கப்பட்டது. குமுதவல்லி தன் நிலை குலைந்து அறிவை யிழந்து கமலநாதன் விரித் திருந்த வஞ்சக வலைக்குள் சிக்கினாள். அவள் அந்நிலையில் தான் இது வரை கண்டிராத பேரின்பப் பெருங் கடலில் திளைத்திருப்பதாக உணர்ந்து உடல் பூரித்தாள்.

* * *

திங்கட்கிழமை இரவு 9-30 மணி யிருக்கும். திருவல்லிக்கேணி புலிபோன் மார்க்கெட்டை யடுத்த ஒரு சிறு தெரு வழியாக ஒரு உருவம் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் மெல்ல நடந்து வந்துகொண் டிருந்தது. இருளையே துணையாகக் கொண்டு வந்துகொண் டிருந்த அவ்வுருவம் ஒரு வீட்டின் பின் புறத்தை யடைந்தது. அங்கு நின்றதும் அது இரு பக்கங்களிலும் பார்க்கலாயிற்று. பின்னர் அவ்வுருவம் அங்குள்ள ஒரு சிறு கதவை மூன்று தடவை மெல்ல தட்டியது. சிறிது நேரத்திற்கெல்லாம் அக்கதவு திறக்கப்பட்டது. அவ்வுருவம் உள் நுழைந்ததும் கதவு மூடப்பட்ட ஓசை கேட்டது. உள்ளே சென்ற உருவம் தன்னை வரவேற்ற உருவத்தை ஆவலோடு கட்டி யணைத்து முத்தமிட்டு, 'குமுதா! உன் பொருட்டாக யான் எவ்வளவு சிரமப்பட்டு இக் காரிருளில் பம்மிப் பதுங்கி வருகிறேன். பார்த்தாயா?' என்றது. அவ்வாறு பேசிய அவ்வுருவம் கமலநாதன் என்பதை வாசகர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ!

குமுதவல்லி, 'ஆசை நேசரே! துன்பப்பட்டன்றோ இன்பமுற வேண்டும்! இல்லையேல் அவ்வின்பம் இனிது சுவைக்காது; அதன் அருமையும் புலப்படாது. அது கிடக்கட்டும். என்ன! இன்று உம்மைப் பார்த்தால் சொகுசாகக் காணப்படுகிறீரே! அழகிய உடுப்புக்களென்ன! வசீகர முகமென்ன! மூக்குக் கண்ணாடி என்ன! கையில் தடி என்ன? பலே பேஷ்! மன்மதன் என்றால் உமக்குத்தான் தகும்' என்று நகைத்துக்கொண்டே பகடி யடித்தாள்.

குமுதவல்லியின் பரிகாச வார்த்தையைக் கேட்டு களிகொண்ட கமலநாதன், 'கட்டிக் கரும்பே! கனிரசமே! அழகு ரதிக்கேற்ற மன்மதனாக அன்றோ யானிருக்க வேண்டும்? என்னை இவ்வாறு குறும்புத்தனமாகப் பரிகசிப்பது தகுமா? அதிருக்கட்டும். உன் கணவன் இன்றிரவு வரமாட்டானே? இவ்விரவை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்வதில் தடையில்லையே?' என்று கேட்டான்.

கட்டிளங் குமரனான கமலநாதனின் இதழ் அமுதுண்டு காம வெறி கொண்டிருக்கும் குமுதவல்லி, 'யானே உனக்குச் சொந்தமாய் விட்டபோது இந்த இரவு சொந்தமாகாது போய்விடுமோ! அந்தச் சனியன் சிறிது நேரத்துக்கு முன்புதான் இவ்விடத்தை விட்டுத் தொலைந்தது. விடியற் காலையில் தான் அவன் வருவான்' என்றாள்.

பின்னர் கள்ளக் காதலர்களின் களியாட்டத்தைச் சொல்லவும் வேண்டுமோ! கமலநாதன் குமுதவல்லியின் இள நலத்தைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அமர்ந் திருந்தான்.

* * *

[தொடர்ச்சியை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.]

# மெய்த் தொண்டு

[திரு. அ. மாதவையர், B. A.,]

எவனே இதர மனிதர் மா, பறவைகள்
அவனிவாழ் உயிர்க்கெலாம் அகங்கனிந்(து) உருகி
அன்பு பெருகுவோன் அவனே தொண்டன்;
பெரியன சிறியன என்று பேணுமல்
உரியன உதவிக்கு உயிரெலாம் எனநினைந்து
அருள்பழுத் தவனே ஆன்ற தொண்டனும்;
என்னெனில் இனியநம் ஈசனே படைத்து
மன்னுயிர் அனைத்தையும் மகிழ்ந்(து) அளிப்பவனே.

(From the Ancient Mariner)

மேல் நாட்டு நாகரிகமும் ரெயில் வண்டிகளும் இந் நாட்டுக்கு வருமுன் மதுரைமா நகரத்திலே, சுந்தர சாஸ்திரி, நரசிம்ம தீக்ஷிதர் என்று இருவர் சிநேகிதர் இருந்தனர். அவர்களுள் தீக்ஷிதர் அரண்மனைப் புரோகிதர்; கனத்த பணக்காரர்; ஈவிரக்கம் என்பதே இல்லாதவர்; தயை தாக்ஷிணியம் என்பன அவருடைய அடியை மிதித்தவர்களையும் பாதிக்க மாட்டா; சமயோசிதம்போல் தர்ம சாஸ்திரம் எடுத்து ஓதிப் பணம் பிடுங்குவதில் அதி சமர்த்தர். பெருத்த குடும்பியானதால், தாம் செய்வதொன்றிலும் பாவம் இல்லை என்று நினைத்தார் போலும். சாஸ்திரியாரை இவருக்கு நேர் எதிராகச் சொல்லலாம்; அங்கம் எலாம் அருள்மயம்; ஜன்மமே பரோபகாரத்துக்காக எடுத்தவர்போல் ஒழுகுபவர். அவருடைய அளப்பரிய மன உதாரமும் அன்புமே தீக்ஷிதரைப் போன்ற ஒரு மகா லோபியிடத்திலும் நட்புப் பாராட்டும்படி அவரைச் செய்தன. இவ்விரு நண்பர்களுக்கும் அடிநாள் தொட்டுக் காசியாத்திரை செய்யவேண்டும் என்ற பேரவா இருந்தது. அந்த நாளிலே காசி யாத்திரை செல்வது சுலபமான காரியம் அன்று; சிரம சாத்தியமானது; அபாயகரமானது; ஆகவே, பலர் கூடித் திரள் திரளாக ஒருவர்க் கொருவர் துணையாகச் செல்வதே வழக்கம். பணத்துடன் நாளடைவில் வயதும் மரண பயமும் அதிகரிக்கவே, தீக்ஷிதர், சீக்கிரமாகக் கங்கை ஆடிக் காசி விசுவநாதரைத் தரிசித்துத் தமது மோக்ஷ சாம்பிராச்சியத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொள்ள விரும்பினவராய்த் தம்முடன் காசிக்கு வரும்படி சாஸ்திரியாரை நெருக்கத் தொடங்கினர். சுந்தர சாஸ்திரியாருக்கோ ஓய்வு ஒழிவு கிடையாது. வேலையின்மேல் வேலை; மதுரைமா நகரத்திலும் அக்கம் பக்கங்களிலும் உள்ள அகதிகளுக்கு எல்லாம் அவரே ஒரு தஞ்சம். 'ஊர்ச்சனியன்கள் எல்லாம் உனக்கு ஏன் அடா,

சுந்தாம்? என்ன சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறாயே? யார் எக்கேடு கெட்டால் உனக்கு என்ன?' என்று தீக்ஷிதர் எவ்வளவோ தர்மோபதேசம் செய்தாலும் அவர் கேட்பது இல்லை. கடைசியாக, தீக்ஷிதருடைய நிர்ப்பந்தத்தைப் பொறுக்க மாட்டாமலும், தமது நெடு நாளைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டும், தமது பல வேலைகளையும் ஒருவாறு ஒதுக்கிக் கொண்டு சாஸ்திரியாரும் காசி யாத்திரைக்குச் சித்தமானார். ஆகவே நல்லதோர் தினத்தில், தம்முடன் புறப்பட்ட தமது உறவினர் சிலரோடும், வேண்டிய பரிசனங்களோடும், நண்பர் இருவரும் காசியம்பதியை நோக்கிப் பிரயாணமாயினர்.

சாஸ்திரியாரின் அருள்வெள்ளம் செல்லும்வழி எல்லாம் பெருக்கெடுப்பதால், பிரயாணம் மந்தமாய் நிகழ்ந்தது. தீக்ஷிதர் கூடிய மட்டும் துரிதப் படுத்திக் கொண்டே சென்றார். ஆனால், பாதிவழியில் ஒரு பட்டணத்தை அவர்கள் அடைந்தவுடன், தேரின் அச்சு முறிந்ததுபோலப் பிரயாணம் நின்று விட்டது. இரண்டு மூன்று வருஷங்களாக மழை விளைவு இல்லாமல் அவ்வூரில் பஞ்சமும் பஞ்சத்தைத் தொடர்ந்து வரும் நோய்களும், மாடுகளையும் மனிதரையும் கொடுமையாய் வருத்திக்கொண் டிருந்தன. எலும்பும் தோலுமாய் இளைத்துக் குடியானவர்கள் தங்கள் கால் நடைகளையும் குடும்பங்களையும் காப்பாற்ற மாட்டாமல் படும் கஷ்டங்களைக் கண்டவுடன், சாஸ்திரியார் பெருமூச்சு எறிந்து கண்ணீர் விடலானார்; தனிகர்களாய் உள்ள சிலர், ஏழைகளுக்கு இரங்காமல் தாம் மட்டும் சுக ஜீவனஞ் செய்வதைப் பார்த்து, அவர், அடங்காக் கோபம் அடைந்தார். தம்மையும் அவ்வூரில் உள்ள நோய்கள் ஏதேனும் தொத்திக் கொள்ளாதபடி, மறுநாளே அங்குவிட்டுப் புறப்படவேண்டும் என்று தீக்ஷிதர் என்ன முடுக்கியும், சாஸ்திரியார் அசையவில்லை. 'என் பிராணன் போனாலுஞ் சரி, இந்த ஜனங்களுக்கு என்னால் இயன்றமட்டும் உதவி செய்யாமல், இவ்வூரை விட்டு நான் கிளம்ப மாட்டேன்' என்று, அவர் ஒரே பிடிவாதமாய்ச் சொன்னார்.

'உன் பணத்தை எல்லாம் இங்கே, பாழுக்கு இறைப்பது போல், செலவிட்டு விட்டால், அப்புறம் காசியாத்திரை, குறையும் எப்படி?' என்று தீக்ஷிதர் கேட்ட வினாவுக்கு அவர் உரைத்த பதில், நாகரிகமானது அன்று! அதனால் இங்கே கூறமுடிய வில்லை. பஞ்ச நிவர்த்தியிலும் வியாதி நிவர்த்தியிலும் தமது பணத்தை வாரி இறைத்ததும் அன்றிச் சாஸ்திரியார் தாமே உடல் வருந்திப் பல விதங்களில் பாடுபட்டு உயிர்களைக் காப்பாற்ற முயன்றார். ஒரு வேளை அவரைத் திருப்பிவிடலாம் என்று நினைத்துத் தீக்ஷிதர், இரண்டு வாரம்வரை இருந்து பார்த்தார். அவர் பணங் குறைந்து போய்விட்டாலும் தாம் சிறிது கடன் கொடுத்தாவது அவரையும் தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால் ஒரு நாள், சாஸ்திரியார், மூர்ச்சை

போய் விட்ட தாழ்ந்த சாதி நோயாளி ஒருவனைத் தமது மடியின் மேல் கிடத்திக் கொண்டு, அவனை ஆசுவாசப் படுத்த முயலுவதை நேரில் பார்த்தவுடன், தீக்ஷிதர், மிக்க வெறுப்புற்று, 'இனி நீ எக்கேடு கெட்டாலும் சரி! நான் போகிறேன். உனக்கும் சேர்த்துக் கங்கையில் ஒரு முங்கு போட்டு விடுகிறேன். நீ வந்தாலே காசி விசுவநாதர் கோயிலும் திட்டாய் விடும்' என்று மனங் கசந்து தமது நண்பரை வைதுவிட்டு மற்றவர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு காசியை நோக்கிப் போய்விட்டார்.

உலோபியான தீக்ஷிதர் ஆயுள் முழுதும் திரட்டிய பாவத்தை அரை நாழிகையில் துடைத்து விடலாம் என்று எண்ணினவராய்க் காசியில் பணத்தை வாரி இறைத்துப் பல தான தர்மங்களைச் செய்தார். முதல் நாள், கங்கையில் ஸ்நானம் செய்து விட்டு, விசுவேசுரர் கோயிலில் அவர் நுழையும் பொழுது பக்தர்களின் கூட்டம் பலமா யிருந்தது. கூட்டத்துள் இடித்துப் புகுந்து மூலலிங்கம் இருக்கும் இடத்தை ஒருவாறு நோக்க, அவர் திகைத்து மலைத்து விட்டார். 'கனவோ, கனவோ இது? என்ன ஆச்சரியம்! வேறு யாராயினுமோ ? எப்படி எனக்கு முன் இங்கே வந்தான்?' என்று வியப்புற்றார். ஏனெனின் பக்தர் கோஷத்தின் நடுவே, மூல லிங்கத்தின் முன்பு வீற்றிருந்து தமது நண்பர் சுந்தர சாஸ்திரியார், விசுவேசுரப் பெருமானைப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்துப் பூஜை செய்வதை அவர் கண்டார். கூட்ட நெருக்கத்தால் அருகே செல்ல முடியவில்லை. 'அடா சுந்தரம்!' என்று இரண்டு முறை அவர் கூப்பிட்டதும் பக்தர்களின் ஸ்தோத்திர முழக்கத்தில் கேட்கவில்லை. பின் வாங்கி மற்றொரு வழியாக மூல லிங்கத்தை அணுகிய போது சாஸ்திரியாரைக் காணவில்லை; விசாரித்ததில் அவர் பூஜையை முடித்துக் கொண்டு போய்விட்டதாகத் தெரியவந்தது. கங்கையாடிக் கடவுளைத் தொழுவதைவிடச் சாஸ்திரியாரைத் தேடுவதே தீக்ஷிதருக்கு முக்கிய வேலையாகிவிட்டது. மடங்கள் தோறும், நீர்க்கட்டங்கள் தோறும் அலைந்து திரிந்து பார்த்தார்! சாஸ்திரியார் அகப்படவில்லை. காயா யாத்திரையும் முடிந்து ஊருக்குத் திரும்பி வருகையில் தமது ஆச்சரியத்தை அடக்கமாட்டாதவராய், தீக்ஷிதர் மீண்டும் தம் சாஸ்திரியாரைப் பிரிந்த பஞ்சப்பட்டணத்துக்கு வந்தார். பஞ்சத்தின் கொடுமை தணிந்து, மழையும் பெய்து, ஊர் ஆரோக்கியமாய் இருந்தது. ஜனங்கள் எல்லாம் 'மதுரையார் புண்ணியம்! மதுரையார் புண்ணியம் !' என்று புகழ்ந்துகொண் டிருந்தனர். 'அவர் எப்பொழுது இங்கிருந்து போனார்?' என்று தீக்ஷிதர் ஒருவனை வினவினார். அவர் எங்கே போனார் ? இங்கேதான் இருக்கிறார். வடக்கு வீதிச் சத்திரத்தில் நோயினால் வருந்திக்கொண் டிருக்கிறார்' என்று அவன் விடை யளித்தான்.

[library stamp]

# இலந்தைப் பழமும் ஸங்கீதமும்

[இலைமறை]

இலந்தையூர் என்பது ஒரு சிறிய ஊர். இலந்தை மரங்கள் மிகுந் திருந்ததால் அது இலந்தையூர் என்ற காரணப் பெயருடன் திகழ்ந்தது. அவ் வூருக்குச் சர்வாதிகாரி ஈசுவர தீக்ஷிதர். அவர் சுமார் நூறு வேலிக்குச் சொந்தக்காரர்.

ஈசுவர தீக்ஷிதருக்கு அதிக இஷ்டமானவை இரண்டே. அவை இலந்தைப் பழமும் ஸங்கீதமும்.

உலகத்தில் மிக மதுரமான பலா, மா, ஆரஞ்சு, ஆப்பிள் முதலிய பல வகைக் கனிகள் இருக்கும்போது தீக்ஷிதருக்கு எவ்வித மாக அந்த அற்பமான இலந்தைக் கனியின் பேரில் ஆசை உண்டாயிற் றென்று வாசகர்கள் வினவலாம். இலந்தையூரில் அம்மரங்கள் மலிந் திருந்ததே அதற்குக் காரணம். ஒரு சிறு தட்டு நிறைய நல்ல செழுமையுடன் கொழுத்துச் சிறிதும் துவளாது, நல்ல உயர்ந்த பவள நிறத்தை யுடைய இலந்தைக் கனிகளைத் தீக்ஷிதருக்குக் காணிக்கையாகக் கொடுத்தால் அவருடைய பிரியத்தைச் சம்பா திப்பது மிக எளிது. இதுபற்றி இவரை எல்லோரும் 'இலந்தை தீக்ஷிதர்' என்று பெயரிட்டுக் குறிப்பிடுவதுண்டு.

இலந்தைப் பழத்திற் கடுத்தபடியாக ஸங்கீதத்தில் அவருக்குப் பிரீதி மிகுதி. தற்கால கிராமபோன்களில் அவருக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. பாம்புப் பிடாரன் பாம்புகளைப் பெட்டியி லடைத்து ஒரு முறை, இரு முறை, பல முறை எனினும் சிறிதும் சலிக்காது ஆட்டுவது போல, மஹா பெரிய வித்வான்களை ஒரு ப்ளேட்டில் ஏற்றி, ஒருவர் இஷ்டம்போல், நினைத்த மாத்திரத்தில், ஒரு முறையோ, இரு முறையோ, பல முறையோ சிறிதும் சலிப்புறாது, பாடச் சொல்லுவது அவ் வித்வான்களையும், அச் சங்கீத நூலையும், நூலின் தேவதையையும் அவமதிப்பதாக அவர் கொள்கை. ஆதலின் அவர் வித்வான்கள் நேரேயே பாடிக் கேட்டு ஆனந்திப்பதிலேயே கருத்துடையவர்.

தீக்ஷிதரின் வஸந்த பங்களாவில் மாதத்திற் கொருமுறை தவறாது, சிறந்த பாட்டுக் கச்சேரி இல்லாம லிராது.

* * *

ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை. பொழுது புலரும் வேளை. காற்று வெகு ரமணீயமாய் வீசிக்கொண் டிருந்தது.

தீக்ஷிதர் வழக்கம்போல அதிகாலையில் எழுந்து ஊருக்கு வெளியே வெகுதூரம் சென்று திரும்பி வந்துகொண் டிருந்தார். வரும் வழியில் இலந்தை மரம் ஒன்று தனியே இருந்ததைக் கண்டார். அவர் அதை மிகச் சமீபித்து வரும்பொழுது, நல்ல முதிர்ந்த பழமொன்று காற்றில் அலைந்து, தானாகவே கீழே தரை நோக்கி விழுவதைத் தற்செயலாய்ப் பார்த்தார் தீக்ஷிதர். அது விழும் போது அதன் செழுமையும் பவள நிறமும் அவருக்கு நன்றாய்ப் புலப்பட்டன. இலந்தைப் பழத்தில் இயற்கையின் இயல்பாகவே யுள்ள அவா வினால் உந்தினவராய், அக் கனியைக் கையிலேயே ஏந்துமாறு நினைத்து விரைந்து பாய்ந்தார்.



ஐயோ! பாவம்! தீக்ஷிதர் அதிர்ஷ்டஹீனர். பழம், எதிர்பாரா வண்ணமாய்க் கீழே, காய்ந்த நாகலின் பேரில் விழுந்தது.

தீக்ஷிதருக்கு அளவில்லாத கோபமும் வருத்தமும் எழுந்தன. எனினும் என் செய்வது? அதிகாலையில் வலுவிலே, தானாகவே கண்ணிற் புலப்பட்டு, எடுக்கக் கூடாத அசுசியான இடத்தில் அது விழுந்ததை நினைக்க நினைக்க அவர் ஹிருதயம் விம்மி விம்மிப் பதறியது. தீக்ஷிதருக்கு இலந்தைப் பழத்தில் அளவற்ற ஆசை யல்லவா? அதைக் கடந்து அப்பால் போக அவருக்கு மனமே எழவில்லை. தீக்ஷிதர் சிறிது நேரம் ஒன்றும் தோன்றாது திகைத்தார்.

பிறகு அவர் இடம் காலம் இவைகளைப் பற்றி ஆலோசிக்கலானார். 'வேளையோ அதிகாலை. இடமோ, ஊருக்குச் சற்றுத் தொலைவிலுள்ளது. ஒருவரும் கண்ணிற் காணப்படவுமில்லை. நான் இதையெடுத்துச் செவ்வையாகத் துடைத்து நீரில் அலம்பித் தின்றுவிட்டால் நான் செய்த காரியத்தை யார் காணப் போகிறார்கள்?' என்று தீக்ஷிதர் தமக்குள் ஆலோசிக்கலானார்.

இவ்வண்ணம் முடிவுக்கு வந்தவராய்த் தீக்ஷதர், யாராவது அருகில் இருக்கிறார்களா என்று பார்க்குமாறு நன்றாய்க் கவனித்தார். திருடும் தொழிலில் இருக்கும்போது திருடனுக்கு இருக்கும் குற்றமுள்ள நெஞ்சின் துடிதுடிப்பும் அவனது மனோநிலையும் அந்நிலையில் தீக்ஷதருக்கும் ஏற்பட்டன. சிறிதும் மனம் தளராதவராய், அவ் விலங்கைப் பழத்தில் சற்றுங் குறையாத ஆசையுடையவராய், சுற்று முற்றும் பார்த்துத் தம் ஏகாந்தத்தை உறுதி செய்துகொண்டவராய், தீக்ஷதர் சரேலெனப் பாய்ந்து பழத்தை எடுத்து மறுபடியும் நாற்புறமும் பார்த்த வண்ணம் உத்தரியத்தால் துடைத்து, அருகி லிருந்த ஓடை நீரில் கழுவி, சட்டென்று வாயில் போட்டுக்கொண்டார்.




தீக்ஷதர் உண்ணும் நிலையில் அவரை ஒருவரும் பார்க்கவேயில்லை. எனினும் அப்பொழுதுதான் கீழ்த் திசையில் தலையைத் தூக்கிக்கொண்டு கிளம்பும் சூரியனும், கண்ணுக்குப் புலப்படாமல் தான் இருத்தலை அனுமானத்தினால் மட்டும் அறிவுறுத்திக் கொண்டிருக்கும் வாயு பகவானும் முறையே நேராகவும், மறைந்தும் பார்த்துக்கொண் டிருந்தனர்.

பழம் இயற்கையிலேயே நன்றாய் இருந்ததென்று சொன்னோம். மேலும் தீக்ஷதர் அதை எடுத்துண்ட விதத்தால், அவருக்கு அது பத்து மடங்கு இனிப்பு வாய்ந்ததாகக் காணப்பட்டது. கொட்டையைத் துப்பிவிட்டு, வழி நடக்கலானார் தீக்ஷதர்.

சிறிது தூரம் செல்லும்வரை தீக்ஷதர் அடைந்த மகிழ்ச்சிக்கு வரம்பில்லை. கிட்டாதது கிட்டினவாறுபோல் மனம் மகிழ்ச்சி பொங்கியவராய், களிவெறி கொண்டு, தம்மை மறந்து சென்றுகொண் டிருந்தார். எனினும் அந்நிலை நீண்டு நிற்கவில்லை. ஊர் நெருங்க, நெருங்க, அங்கும், இங்கும் வெளி வந்துகொண் டிருக்கும் பலரைக் காணவும் அவர் மனம் யாதொரு காரணமுமின்றி தளர்வுற்று பிரமைகொண்டு கலங்கிவிட்டது. தாம் செய்த செய்கையை எல்லோரும் பார்த்து விட்டதாக எண்ணி, தீக்ஷதர் வருந்தலானார். மரம், பழம் கீழே விழுந்தது, தாம் அதை யெடுத்துத் துடைத்து

அலம்பி உண்டது, இவை போன்ற காக்ஷிகள் அவரது மனக் கண்முன் தோன்றி நிற்கலாயின. தீக்ஷிதர் தம்மை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, ஒருவர் கண்ணிலும் படாது குற்றவாளி போல நடந்து வீடு சேர்ந்தார். அவரைப் பிடித்து ஆட்டி உலுப்பிய மனோ பிரமை மட்டும் மாறவே இல்லை.

*　　　　*　　　　*

அதேமாலை. சுமார் 4 மணி. இலந்தையூர் வஸந்த பங்களாவில் பெருத்த பாட்டுக்கச்சேரி. கொட்டையூர் கோபாலஸ்வாமி ஐயர் வாள் கச்சேரி. அவர் சங்கீதத்தில் மஹாவித்வான். சுற்றுப் புறத்தி லுள்ள பல சிற்றூர்களி லிருந்து அநேகர் வந்து குழுமி இருந்தனர்.

என்று மில்லாமல் அன்று தீக்ஷிதர் தனியாக உட் கார்ந்திருந்தார். எப்பொழுதும் உள்ள குதூகலமும், உத்ஸாகமும், அவர் முகத்தில் அப்பொழுது தோன்றவில்லை. எனினும் அதைச் சிறிதும் புறத்தே காட்டாது கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு, கச்சேரிக்கு வந்த தம் சிநேகிதர்களைச் சற்று சிரமத்துடனேயே வரவேற்றுக்கொண் டிருந்தார்.

ராகுகாலத்திற்கு முன்பே கச்சேரி தொடங்கிவிட்டது. கோபாலையர் பாடத் தொடங்கி இரண்டு மூன்று பாட்டுக்களை முடிந்து விட்டார். பாட்டுக்களின் இனிமை, ஐயர்வாளின் இனிய குரலோடு இழைந்து மிக ரசிகமாக இருந்தது. அதுவரை அத்தகைய ஸங்கீதம் கேட்டதே இல்லை என்று எல்லோரும் முணு முணுத்துக் கொண்ட வண்ணமே, பாடகரைச் சமீபிக்க முன்னால் சிறிது சிறிதாக நகரலாயினர். இடை விடாத கரகோஷமும், 'சபாஷ், சபாஷ்' என்ற கோஷ்டமும் கொஞ்சமும் ஓயவில்லை.

அத்தகைய அருமையான இனிய சங்கீத ரஸத்தைத் தீக்ஷிதர் பருகி ஆனந்திக்கக் கொடுத்து வைக்கவில்லை. பதுமைபோல் வீற் றிருந்த அவர் பாட்டின் சுவையை உணர்ந்ததற்கு அறிகுறியாக 'சபாஷ்' என்றாவது 'மற்றொருமுறை' என்றாவது சொல்லவில்லை; கை கொட்டவுமில்லை. சங்கீதத்தில் அபார ஞானம் கொண்ட தீக்ஷி தரின் செய்கையை அனைவரும் வியந்தனர். பாடகரும் வியந்து சபா நாயகரான தீக்ஷிதரைத் திருப்தி செய்யுமாறு சங்காபரண ராகத்தை யெடுத்து ஆலாபனம் செய்யலானார்.

தீக்ஷிதர் சிறிதும் அசைவில்லை. பிரமையில் மயங்கி லயித்திருந்த அவருக்குச் சங்கீதம் சுவை யளிக்காது வெறுப்பா யிருந்தது. தீக்ஷிதர் வாளாவிருந்ததைக் கண்டு ஐயர்வாள் தம் முழுத் திறத்தையும் காட்டிப் பாடலானார்.

பாடகர் தம் இடது கை கட்டை விரலைமட்டும் நீட்டி, மற்ற வைகளை மூடிக்கொண்டு ஆலாபனம் செய்தார்.



'த...ர...ந...... த......
ர......ன ...... ந.........
ர......ந...' மூடிய கையை நாலாபக்கமும் வலமாகச் சுற்றிக் காட்டினர். பிறகு அவ்வட்டத்தின் மத்தியி லிருந்து நேராகக் கையை இறக்கி,

'தா.........ர.........
ந...............தா.........
ர.........ந....என்று குரலை இறக்கிப் பாடலானர். இலந்தைப்பழ பிரமையி லேயே மயங்கி யிருந்த தீக்ஷதருக்குப் பாடகரது அபிநயங்கள் ஒரு விருக்ஷத்தையும் அடிமரத்தையும் காட்டுவதாகப்பட்டது.

மறுபடியும் பாடகர் தொடங்கித் தம் கையை நேராகச் சரே லென்று கீழே கொணர்ந்தும் மேலே மெள்ள உயர்த்தியும் மறுபடி யும் கீழே கொணர்ந்தும் ஆலாபனம் செய்தார். இந்தச் செய்கையைத் தீக்ஷதர் இலந்தைப் பழம் கீழே திடீரென விழுந்ததற்கு உவமித்துக் கொண்டார்.

தீக்ஷதருக்குக் கோபம் மிகுந்தது. பாடகரைப் பார்த்துப் பல்லை நெறித்தார்; தம் செய்கை ஒவ்வொன்றையும் பாடகர் நன்கறிந் துள்ளார் என்று பயமடைந்தார். ஸங்கீதச் சுவையில் முழுகி யிருந்த சபையோர் தீக்ஷதரின் முகத் தோற்ற மாறுதல்களைக் கவனிக்கவே யில்லை.

வித்வான் மட்டும் தீக்ஷதரைக் கவனியாம லில்லை. தற்செய லாய் அவாது மோதிரம் நழுவி விழலும், அதை எடுத்துத் தம் ஜரிகை உத்தரீயத்தால் துடைத்துக் கையில் போட்டுக்கொண்டார்.

வித்வானின் செய்கைகள் எல்லாம் மிகக் கூர்மையாக நோக்கி வந்த தீக்ஷதருக்குத் தாம் இலந்தைக் கனியைத் துடைத்ததை ஞாபக மூட்டியது. அடங்கொணுக் கோபத்தால் தீக்ஷதர் திணறலானர்.

கோபாலஸ்வாமி ஐயர்வாள் கடைசியாகச் செய்த அபி நயம், தீக்ஷதருக்குத் தாம் கனியை உண்டதைப் பற்றிக் குறிப்ப தாகப்பட்டது. இவ்வாறு ஐயர்வாள் செய்த அபிநயங்கள் எல் லாம், தீக்ஷதருக்கு நேர்மாறுதலாகப்பட்டது. சபையோருக்குத் தம் அவசரச் செய்கையை ஐயர்வாள் பூடகமாக அறிவுறுத்தித்

தம்மை சிநேகிதர்கள் முன் அவமானப்படுத்துவதாக எண்ணிப் பொறுமலானார்.

கண்கள் சிவந்தன. உடல் நடுங்கத் தொடங்கி வியர்த்தது. தம் சினத்தை அடக்கியவராய் 'நிறுத்தும்' என்றார் தழுதழுத்த குரலில்.

அதைக் கேட்ட எல்லோரும் திடுக்கிட்டனர். அமுதத்தைப் பருகும்போது எவர்தாம் அதைத் தடுப்பதை ஆற்றுவர்? எனினும் வித்வான் சபா நாயகரைத் திருப்தி செய்வதிலேயே நோக்க முள்ளவராய் ராக மாலிகை ஒன்று பாடலானார்.

அது ஒரு தமிழ் விருத்தம்; சிருங்காரச் சுவை மிளிர்ந்தது. பொழுது புலரும் வேளையில் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் தன் காதல் நாயகியின் வரவை எதிர்பார்த்து மருளும் தலைவனது செய்கையைக் குறிப்பது;

'இருளது பிரியவில்லை இரவியு மெழவுமில்லை
சுருளுறு கூந்தற் கனிதனை நினைந்து நைந்து
அருளது வேண்டி நின்று யாவருங் காண்கிலானாய்
மருளுறு மனத்தனாகி நோக்கினன் றிசைகளெல்லாம்'

என்று பாடி முடிந்ததோ இல்லையோ ஐயரவர்களின் முகத்தில் 'பளேர்,' 'பளேர்' என்று அறைகள் விழலாயின. பாடகர் பிரமித்துக் கதறலானார். சபையோரும் திகைத்து, வெருண்டு, இன்னது செய்வது என்று தெரியாது ஓட ஆரம்பித்தனர்.



பாடகரின் அழுகைக் குரலிலும் ஜனங்களின் கோஷ்டத்திலும் மிஞ்சியதாய்க் 'கணீர்' என்ற ஒரு குரல் கேட்டது. துடிதுடித்து நின்ற தீக்ஷதரின் குரல் அது.

'நான்தான் போதும், நிறுத்தும் என்று சொன்னேனே. ஸ்வாமின், ஏதோ அவசரமாய் ஒரு காரியம் செய்து விட்டேன். அதைப் பஹிரங்கப்படுத்துவதில் இவருக்கு (பாடகரைச் சுட்டிக் காட்டி) என்ன விருப்பு. நான் அசுசியான ஒரு இடத்திலிருந்து ஒரு இலந்தைக் கனியை எடுத்து துடைத்து தின்றுவிட்டேன் என்றால் அதைப் பார்த்துக்கொண்டிருந்த இப்பாடகருக்கு அவ்விஷயத்தை

நால்வருக்கு முன்னிலையில் வெளிப்படுத்தி, அவமானப்படுத்துவதில் என்ன களி வெறி? கேவலம் பிச்சைக்காரன் இவன் ! கூலிக்குப் பாடுபவன். இவனுக்கு இவ்வளவு மமதையா ? விட்டேனு இவனை?' என்ற வண்ணம் "கோவிந்தா" என்று தம் அந்தரங்க வேலையாளைக் கூப்பிட்டவராய் ஓர் உதை உதைத்தார் பாடகரை.

அவ்வளவுதான், அநேகம் கைகளும் கால்களும் ஐயர்வாளைத் தாக்கின. அடியும், மிதியும் தாளாது தவிக்கலானர் அவர். சிறிது நேரத்தில் பாட்டுக் கச்சேரி அடிதடிக் கச்சேரி யாகிவிட்டது.

சிறிது நேரஞ் சென்று அடிதடி நின்றுவிட்டது. ஐயர்வாள் தம் நிரபராதித்தனத்தை நிலைநிறுத்த என்ன வாது புரிந்தும் பயனில்லை. தாம்பாட எண்ணியிருந்த இரண்டு விருத்தங்களையும் பாடிக்காட்டினர்.

இருளது பிரியவில்லை இரவியு மெழவுமில்லை
சுருளுறு கூந்தற் காதற் கனிதனை நினைந்துநைந்து
அருளது வேண்டிநின்று யாவருங் காண்கிலானய்
மருளுறு மனத்தனுகி நோக்கினன் திசைகளெல்லாம்.
கண்டனன் காதற்கன்னி காற்றெடு விரைந்து நண்ண
விண்டனன் உவகைபூத்து களிவெறி மிகவுங்கொண்டு
உண்டனன் அவள்தன்நோக்கை ஒருப்பெற்ற மனத்தனுகி
தண்புனல் ஓடை அண்மி தனித்தினி தமர்ந்திருந்தாள்.

பாட்டிலுள்ள வார்த்தைகளிலும் கருத்திலும் தீக்ஷதர் தம் செய்கைகளையே காணலானர். 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று எண்ணி பாடகர் வெகுமதி விரும்பாது தம் ஊர்போய்ச் சேர்ந்தார்.

* * *

நாழிகை செல்லச் செல்ல தீக்ஷதருக்குச் சிறிது சிறிதாகப் பிரமை நீங்கிற்று; சித்தம் தெளிந்தது. தம் செயல்களை எல்லாம் ஞாபக மூட்டிக்கொண்டார்; பாடகரின் பாட்டுக்களையும் அபிநயங்களையும் ஆராய்ந்து பார்த்தார். தம் முட்டாள்தனம், முரட்டுத்தனம், ஆத்திரம் இவைகளெல்லாம் குளிர்ந்திருந்த அவர் மனத்திற்கு செவ்வையாய்ப் புலப்பட்டன. தாமாகவே தம் அவமானத்தை வெளியிட்டுக் கொண்டதை நினைக்க நினைக்க அவருக்கு எழுந்த துக்கம் தாங்கவில்லை. 'மணலுக்குள் இருக்கும் நுணலும் தன் வாயால் கெடும்' என்ற பழமொழி என் விஷயத்தில் உண்மையாயிற்றே' என்று சொல்லிப் பிரலாபித்துக்கொண்டே படுக்கையில் புரண்டு புரண்டு அழலானர்.

தீக்ஷதர், மறுநாட் காலை முதல் காணப்படவில்லை. இவ்விஷயம் சிறிது மறக்கும்வரை ஊர்ப்பிரயாணம் செய்யப் புறப்பட்டுவிட்டார் என்று கேள்வி.

# புத்தரும் சமணரும்

[திரு. இ. பு. தருமலிங்கம்]

முப்பத்து முக்கோடி மாந்தரைத் தன்பால் கொண்ட நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழி லொழுகுஞ் சீராருந் திகழ் பரத கண்டமிதில் மக்கள் தம்முள் மாறுபட்ட கொள்கையினராய் - சமயத்தினராய் விளங்குவது வியப்பன்று. அத்தகைச் சமயங்களுள் ஜீவ காருண்யத்தை அடிப்படையாகக் கொண்டவை ஒரு சில. அவற்றுள் புத்தமதமும் சமண சமயமும் பெறக் கிடக்கின்றன.



புத்தர் போதி விருட்சத்தினடியில் சிந்தனை செய்தல்

புத்தர்தம் பொன் மொழிகளையும் பௌத்தக் கொள்கைகளையும் அறிவதன் முன் அதனை ஆய்ந்தறிந்த சாத்தன்தன் சரிதையில் சிறிதறிவோம்.

கபில வஸ்துவைத் தம் தலை நகரெனக் கொண்டு சாக்கியரைச் சிறப்பொடு புரந்த வலிமை சார்ந்த சுத்தோதனர்தம் செல்வச் சுதனாய்ச் சற்றேறக் குறைய கி. பி. 567-இல் சித்தார்த்தர் அவதரித்தார்; பெருமான் பெருமகனாய்த் தோன்றி பெரு வாழ்வு வாழ்ந்தார் ; இளமையிலேயே ஒரு கன்னிகையை மணந்து செல்வச் சிறுவன் ஒருவனை நல்கினார்.

எனினும் அவர் மனம் சாந்த மடையவில்லை. அரண்மனையின் ஆடம்பரமான வாழ்க்கையில் அவர் உள்ளம் செல்லவில்லை. மாளிகையின் புறத்தே மக்கள் தம் மாத்துயரத்தையும் மீளா வாழ்க்கையையும் நீர்க்குமிழி யாக்கையையும் கண்ணுற்ற காலை அவர் மனம் மானிடரை வாழ்க்கையெனும் நீர்ச்சுழலி னின்றும் ஈடேற்ற வேட்கை கொண்டது.

எனவே அவர் தம் முப்பதாம் ஆண்டில் இராஜ சின்னத்தைத் துறந்து தம் அளகபாரத்தை அறுத்தெரிந்து துறவியின் ஆடை புனைந்தார்; கடுந் தவம் மேற்கொண்டார். இன்னே ஆறு வருடங்கள் கழிந்தன. ஒரு நாள் காயைக் கடுத்ததொரு போதி விருக்ஷத்தடியில் மெய்ம்மறந்து சிந்தனையில் வீற்றிருக்கும்பொழுது அவர் மனத்திடை ஒரு புத்துணர்ச்சி மின்னென மிளிர்ந்தது. அஃதே அவர் மனத்தைக் கொள்ளை கொண்ட, மாயை வயப்பட்ட மாந்தரை உய்விக்கக் கொண்ட நோய்க்கு அமுதமன்ன மருந்தாகத் துலங்கியது.

முதன்மையாக, புத்தர் தம் கொள்கையைக் காசியம்பதிக்கடுத்த மான் வனத்தி (Deer Park) ல் உபதேசித்தார். அவர்தம் கூற்று சிறந்த நான்கு தத்துவங்கள் கொண்டது. மனிதர், அரசன் மைந்தனுயினும் எளியதொரு அநாதைத் தாயின் சேயேயாயினும் துன்பம் துய்க்க வேண்டுவதே. அத்துன்பத்திற்கு வித்து சித்த விகாரமும் சிற்றின்ப எண்ணமுமே. எனவே மாந்தர் நிர்வாணம் அல்லது முத்தியடைவதையே தம் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாக்க வேண்டும். நிர்வாணம் பாந்த நோக்கமும், நேர்மையான வாக்கும், தகுந்த முயற்சியும், சிறந்த வாழ்க்கையும், மறதியற்ற ஞாபகமும், பரிசுத்தமான சிந்தனையும், நடுநின்ற நீதியும், மனதை நீதி வயப்பட்ட விதிக்கு நேர்மையான வழியில் ஊக்குவதுமாகிய எண்வகை குணம் கொண்டவிடத்து எளிதில் பெறலாம்.

தம்மைச் சிறப்பித்து தாம் தேவகணத்தைச் சேர்ந்தவர் என்று பாவனை செய்யும் பிராமணத்துவத்தைக் கண்டித்து நீதி நூற்பட்ட கொள்கையைச் சாக்கிய பெருமான் உபதேசித்தமையின் அவரை எண்ணிறந்தோர் தேனை மொய்க்கும் ஈ யெனக் குழுமினர்.

பிடகமென்னும் புத்த நூல்கள் திரிபீடக மெனப்படும். சூத்திரமல்லது புத்த பிரசங்கம், விநயம் அல்லது ஒழுக்கம், அஹ்பிதர்மா அல்லது தத்துவ நூல் ஆகிய மூன்றே திரிபீடகமாம். ஈண்டு புத்தரியற்றிய நூலொன்றில்லை என்பது மனதிற் வைக்கற்பாலது. இவைகளை அவர்தம் குழாம் முக்கூட்டம் கூடி தம் மதக் கொள்கைகளை இவையென வகுத்தனர். அவைகளை ஆனந்தர், உபலை, காஸியபர் ஆகிய மூவர் முறையே வகுத்தனர். ஹிந்து மத வேதங்களைப்

போன்று சமஸ்கிருதத்தில் இயற்றப்படாது அவை பாளி பாஷையில் பதிப்பிக்கப் பெற்றுள.

கி. பி. 478-இல் புத்தர் நிர்வாணம் அடைந்த பின்னர் பல கோளாறுகள் தோன்றின. பிராமணத்துவம் தலையெடுத்தது. அஃது எங்கும் தன் கொள்கைகளைப் புகுத்தியது. சிறிது காலத்தில் தவ நேர்மை வாய்ந்து துறவிகளாய் விளங்கிய பௌத்தர்களும் போத சாத்தவர்களும் தமக்கென விசுவ தேவ கணங்களையும், நவி தரு சிறிய தெய்வங்களையும், பேயையும் ஏற்படுத்தி, அவைகளை உருவப்படுத்தி, ஆலயங்கள் சமைத்து வந்தனை வழிபாடுகள் செய்வாராயினர். முன்னது ஹீனயானம். பின்னது மஹாயானம். மஹாயானம் நேபாளத்திலும் சைனாவிலும், ஹீனயானம் இலங்கையிலும் பர்மியத்திலும் சிறப்புற்றோங்கி வளர்கின்றன.



பௌத்த சந்நியாசிகள் பிட்சா பாண்டத்தோடு செல்லும் காட்சி

இப்போது இந்தியாவின் கண்ணுள்ள பௌத்தர் பதினோராயிரவர். அவர்தம் ஆலயங்கள் தோறும் புத்தருடைய ஞாபகச் சின்னம் நிலவுகின்றது. புத்தர் பிறப்பிடத்திற்கும், அவர் உண்மை தெளிந்த போதி விருக்ஷத்திற்கும், மான் வனத்திற் (DeerPark)கும், இறுதியில் அவர் நிர்வாணம் அடைந்த ஸால்கிரோவுக் (Salgrove)கும் பௌத்தர்கள் யாத்திரை செய்கின்றனர்.

புலால் வெறுத்த இவர்பால் ஜாதி வேற்றுமை கிடையாது. சிக்கிம், பூதான் என்ற இரண்டு நாட்டிடைப் பௌத்தர்கள் எண்ணிக்கை கணக்கற்றது. நேபாளத்தில் வதிபவர்தம்முள் இருபது லக்ஷம் மாந்தர் பௌத்தரே. இவர்கள் திபேத்திய தேசியம் உரையாடுகின்றனர். இவர்கள் அணியும் ஆலயங்களும் சீனர்களுடைய பரந்த செல்வாக்கைப் புலப்படுத்துகின்றன.

இத்தலத்து புத்தரிடை ஒப்புயர்வற்றதும் சிறந்ததுமான குருதிசயம் ஒன்று மிப்போது இல்லை. உயிர் விடும் ஒருவனை அவனுடைய நண்பர் புடை சூழ்ந்து அவனுக்குத் தாம் பூஜை செய்யப் போவதால் தம் ஆத்துமாவைச் சாந்தப்படுத்த வேண்டுகின்றனர். பிறப்பிறப்பென்னும் சகடத்தில் அவர்கள் நம்பிக்கை யளவற்றது; பிறவற்றிலெல்லாம் ஹிந்துவைப் போன்றே நடக்கின்றனர்.

சன்மார்க்கத்திற்கும் அறநெறிக்கும் எத்தகைத் தொண்டு புத்தமதம் ஆற்றி யிருப்பினும் அஃது கடவுளைப் பற்றி எதுவும் கூறுதொழிந்தது. 'புத்த மத முற்றிலும் கடவுளைப் பற்றிய குறிப்பில்லை. எனினும் அது ஆஸ்திகத்தை யேனும் நாஸ்திகத்தை யேனும் போதிக்க வில்லை' என்று ஒரு பிக்ஷுணராகிய ஹிலேயர் (Hilaire) கூறுகின்றார்.

## சமணர்கள்

வர்த்தமான மஹாவீரரும் புத்தரும் ஒரு காலத்தவராவர். மஹாவீரர் ஜைன சமயத்தை நிறுவினர் என்று ஒருவாறு துணியலாம். 'அவர்க்கு முன்னரே இச்சமயம் கண்டு பிடிக்கப்பட்டது' என்பது ஒரு சாரார் கூற்று.

பாட்னா நகரத்திற்கு முப்பது மைல் வடபாலுள்ள தற்போது பேஸரா எனப்படும் வைஸாலி கிராமத்தில் குடியேறிய க்ஷத்திரிய குலத்தில் நய அல்லது நட வகுப்பைச் சார்ந்தவர்களுடைய தலைவரது தனயர் மஹாவீரர் என்று அறியக் கிடக்கின்றது. பிறி தொன்றும் குறிப்பதற்கில்லை.

முப்பதாமாண்டில் அவர் இல்வாழ்க்கையை வெறுத்து நெடிது நாளலைந்த பின்னர் தம் மதத்தைப் போதித்தார். வர்த்தமானர் தம்மை ஜீன, ஆத்தும விஜயன் என்று அறிவித்தார். ஆகவே அவருடைய மதத்தினர் ஜைனர்கள் என்று அழைக்கப்படலாயினர்.

ஜைனர்கள் முதன்மையில் திகம்பரர், ஸ்வேதம்பர் என்ற இரு பிரிவினரா யிருந்தனர். திகம்பரர்கள் நிர்வாணமே விமலத்துவத்திற்கு இன்றியமையாதது எனக் கருதினர். பின்னோர் ஆடையணிவதால் முத்தி சித்தி பெறுவது தடைபெறா தென்றெண்ணி வெண்கலை யுடுத்தினர். தற்போதும் இருதிறப்பட்ட கொள்கையினர் நீரூர்த்து வருகின்றனராயினும் நாகரிக வளர்ச்சிக்கேற்ப திகம்பரர்தம்

நிர்வாணம் அனுசரிக்கப்படவில்லை. ஆடை யணிவதிலே யன்றி அவர்பால் வேற்றுமை மிக்குளது. ஸ்வேதம்பர் ஆணும் பெண்ணும் முத்தி பெறலாம் என்று பெண்களை தம்மினத்துச் சேர்த்துக் கொள்கின்றனர். திகம்பரர் பெண்பால் முத்தியடைய வொண்ணாது என்றாற்றினர்; சூத்திரர் சாதுக்களை வழிபடுவது அடாது என்றெண்ணினர். அவர்களில் கொள்வினை கொடுப்பினையாவது, சமபந்தி போஜனமாவது கிடையாது.

அஹிம்ஸையே அவர்தம் சீரிய கொள்கை. அவர்கள் கொடுங் குரூரமான பலிகளை வெறுக்கின்றனர்; உயிர் வதை படாம லிருப்பதே சமயத்திற்குச் செய்யும் பெருந் தொண்டென மதிக்கின்றனர். ஹிந்துக்களைப் போன்று ஜைனர் பசுக்களை ஆராதிக்கின்றனர்.

அவர்கள் கொழுத்துப் பணக்காரராயிருக்கின்றார்கள். அவர்கள் ஸௌகார்களாகவாவது வியாபாரிகளாகவாவதிருக்கின்றார்கள். ஜீவ காருண்யம், முக்கியமாக பசுக்களைக் காப்பாற்றுவதிலுள்ள ஊக்கம் அவர்கள்பால் தலைப்பட்டது என்பதை அவர்கள் பிஞ்சாரபோல் என்ற பிராணிகள் தங்குவதற்கான விடமும், நோயுற்றபோது மருத்துவம் செய்ய வைத்தியசாலைகளும் நியமித்த விடத்து நன்கு புலனாகின்றது. மீண்டும் அதற்காகவே அவர்கள் இருள் புகுமுன்னே ஆகாரம் அருந்துகின்றனர்.

ஜைனர்களுடைய கோயில்கள் பெரிதானவை ; அழகானவை. அவர்களது புராதனக் கதைகள் சித்தரிக்கப் பெற்றுள்ளன. ஜீனர்கள் அல்லது ஜைன சாதுக்கள் தீர்த்தங்கர் என்றழைக்கப்படுகின்றனர். அவ்வகைப்பட்டோர் இருபத்து நால்வரின் சித்திரம் சலவைக் கற்களால் சித்தரிக்கப் பெற்றுள்ளன. அவர்களுக்கே தம் ஆராதனையை ஜைனர்களளிக்கின்றனர்; சில உற்சவ நாட்களில் அச்சிலைகளைப் பக்தியோடு ஊர்வலமாகச் சுமந்து செல்கின்றனர்.

யதீஸ அல்லது சாதுக்கள் என்போர் ஜைன சமயத்துக் குருக்களாவர். எவரேனும் குருகுலத்தைச் சேரவேண்டின் முதன்மையில் பிரதிஷ்டை செய்யுமிடத்து தலைமயிர் கத்திரிக்கப் படுகின்றனர். பின்னர் யதி என்பவர் ஐந்து பிரமாணங் கொண்ட மஹா வர்த்தத்தை மேற்கொளல் வேண்டும். அவ்வைந்து பிரமாணங்கள்:— (1) எவ்வுயிர்க்கும் தீங்கிழைக்காமை (2) உண்மை விளம்புதல் (3) தனக்கென்று தானே ஒன்றை நியமக்காமை (4) கற்பை பாதுகாத்தல் (5) ஆத்ம பரித்யாகப் பிரயத்தனம்.

ஜைன மதம் இவ்வகையாகப் பல்விடத்தும் புத்த மதத்தை ஒத்திருக்கின்றது. அதனால் நாம் ஜைன மதம் புத்த மதத்தினின்றும் தோன்றியது என்று பிழைபட அறியலாகாது. இரண்டும் தனிப்பட்ட சமயங்களாகும்.

# நகைச்  சுவை

விமலா:—உன் பிள்ளை யாரைப்போ லிருக்கிறான்.

யசோதா:—கண்கள் என்னுடையன போல இருக்கின்றன. மூக்கு என் நாயகனுடையதைப்போ லிருக்கிறது. குரல் எங்கள் வீட்டு மோட்டார் கார் ஹாரனுடையதைப்போ லிருக்கிறது.

* * *



ஒரு கிழவர் ஒரு கம்பெனிக்குச் சென்று அக் கம்பெனி மானேஜரைப் பார்த்து, ஐயா, இந்தக் கம்பெனியில் வேலைபார்க்கும் கோபாலன் எனது பேரன். அவனை நான் பார்க்க வேண்டும். தயவு செய்து சிறிது நேரம் அனுமதியுங்கள்.

கம்பெனி மானேஜர்:- அவர் இன்றுதான் நீங்கள் இறந்துவிட்டதாகக் கூறி லீவு வாங்கிக் கொண்டு போய் விட்டாரே.

* * *

உபாத்தியாயர் சுந்தரத்தைப் பார்த்து 'சுந்தரா? கால்சட்டை ஒருமையா, பன்மையா?' என்றார்.

சுந்தரம்:—ஐயா! கால்சட்டையில் மேல் பாகம் ஒருமை; கீழ்ப் பாகம் பன்மை.

உபாத்:—சரி, சுந்தரம் நீ கெட்டிக்காரன்.

* * *

ஒரு நாள் பாடசாலை ஆசிரியர் ஒருவர் தம் வகுப்பு மாணவர்களை ஒரு விஷயத்தைப்பற்றி வியாசம் எழுதச் சொன்னார்; பிறகு ஒவ்வொருவருடைய வியாசத்தையும் படித்துப் பார்த்தார். கந்தனுடைய வியாசத்தைப் படித்ததும், அவர் தமக்குள்ளாகவே சிரித்துக்கொண்டு, அவனை அழைத்து 'உன் வியாசம் நன்றாகயிருக்கிறது. ஆனால் கணபதியின் வியாசமும், உன் வியாசமும் ஒரே விதமாக இருக்கின்றனவே? நான் இதைப்பற்றி என்ன நினைப்பது?' என்று கேட்டார்.

கந்தன்:—(சற்று யோசித்து விட்டு) கணபதியும் நன்றாக எழுதியிருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள்.

* * *

சரித்திர ஆசிரியர்:—(சில தினங்களாகப் பாடசாலைக்கு வராத 'பாலன்' என்ற மாணவனைப் பார்த்து) பாலா, நீ எத்தனை நாளாகப் பாடசாலைக்கு வரவில்லை?



பாலன்:—பேபர் இந்தியாவில் முகலாய ராஜ்யத்தை ஸ்தாபித்தது முதல் நான் வரவில்லை.

* * *

தகப்பன்:—பையா! நீ என்னைப் போல ஒழுங்காய் நடந்து வருவாயானால் நீ நல்ல நகரத்தானவாய்.

குமாரன்:—மெய்தான் அப்பா. நான் உங்களைப் போலத்தான் ஒழுங்காய் நடந்து வருகிறேன். போன மாத முதற்கொண்டு நீங்கள் சுருட்டு பிடிக்கும் கஷ்டமான வித்தையை இரகசியமாக அப்பியாசஞ் செய்து வந்தேன். ஆயினும், உங்களைப் போலச் சுருட்டுப் புகையை வாயில் இழுத்து விழுங்கக் கூடாமலிருந்தது. ஆனால், இப்போது உங்களைப் போல விழுங்குவதற்குச் சுலபமாயிருக்கிறது.

உபாத்தியாயர்:—இராமா! பூமி உருண்டையா யிருக்கிறதென் பதற்கு மூன்று திருஷ்டாந்தஞ் சொல்.

இராமன்:—ஐயா! நீங்களும் அப்படித்தான் சொல்லுகிறீர்கள். எங்கள் அப்பாவும் அப்படித்தான் சொல்லுகிறார். எங்கள் அம்மா ளும் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

* * *

பிச்சைக்காரன்:—ஐயா, ஏதேனும் கிழிந்த துணிகள் கொடுங்கள்.

வீட்டுக்காரன்:—(கோபத்தோடு) அடே, நான் எத்தனை முறை இல்லை போ என்று சொல்லுவேன். நீ மறுபடியும் கத்தினால் உனக்கு ஜோடு தான் கிடைக்கும்.

பிச்சைக்காரன்:—ஐயா, அதையாவது தயை செய்து கொடுங்கள். இந்த வெயிலுக்கு உதவும்.



* * *

வேடன்:—அடே கெங்கா! திருவண்ணாமலை காட்டிலிருந்த புலிகளை யெல்லாம் நானே கொன்று விட்டேன்.

கெங்கன்:—அடே சிங்கா, ஏண்டா புளுகுகிறாய். அந்தக் காட்டில் புலியே யில்லையே.

சிங்கன்:—இப்போது இல்லை மெய்தான். அவற்றை யெல்லாம் நானே கொன்று அங்கில்லாமற் செய்து விட்டேன்.

# வெளி விகடம்

எஜமானன்:—ஏண்டா தடியா! உன்னே யாரடா இதை யெல்லாம் வாங்கிவரச் சொன்னது?

வேலைக்காரன்:—நீங்கள் தானே சொல்லி யனுப்பினீர்கள்.

எஜமானன்:—நான் இவைகளையாடா வாங்கி வரச் சொன்னேன். $\frac{1}{4}$ படி உப்பு கடலை யல்லவோ வாங்கி வரச் சொன்னேன்.

வேலைக்காரன்:—அதான் சாமி வாங்கி வந்தேன். $\frac{1}{4}$ படி உப்பும், $\frac{1}{4}$ படி கடலையும்.

*　　*　　*

நோயாளி:—சார்! எனக்கு நேற்றைவிட இன்றைக்குக் கால்வலி அதிகமா யிருக்கிறது.

வைத்தியர்:—நான் நேற்று கொடுத்த தைலத்தை உமது வேலைக்காரனிடம் கொடுத்து காலின் மீது நன்றாகத் தேய்க்கச் சொல்லும் என்று சொன்னேனே. அதன்படி செய்தீரா?

நோயாளி:—இல்லை சார்.

வைத்தியர்:—ஏன்?

நோயாளி:—எனக்கு வேலைக்காரன் இல்லையே.

*　　*　　*

காவலாள்:—யாரையா அது?

முருகன்:—என்னப்பா.

காவலாள்:—இங்கே யாரும் குளிக்கக்கூடாது.

முருகன்:—நான் குளிக்கவில்லை, மூழ்கிவிடப் போகிறேன்.

*　　*　　*

டெலிபோனில்:—நீங்களா பேசுகிறது?

பதில்:—ஆமாம். நீங்கள் யார்?

*　　*　　*

மாமியார்:—அடி சக்களத்தி! நீ எங்கே யிருந்தடி வந்து சேர்ந்தே?

மருமகள்:—நீ என் கணவனுக்கு முதல் பெண்டாட்டியா?

மே. ஜானகிராமன்

ஒருவர் சைகிளில் அதிவேகமாகப் போய்க்கொண் டிருக்கையில் ஒரு பட்டிக் காட்டான், 'சாமி, சாமி! பின் சக்கரம்! பின் சக்கரம்!!' என்று கத்தினன். சைகிள் சவாரி செய்பவர் திடுக்கிட்டுக் கீழே யிறங்கி, 'பின் சக்கரத்தி லென்ன பஞ்சரா?' என்று வினவிக் கொண்டே சக்கரத்தைப் பார்த்தார். ஒன்றும் விளங்காது பட்டிக் காட்டானையே மறுபடியும் வினவ, 'வேகமாகச் சுத்துதுங்க சாமி!' என்ருன்.

* * *

கல்லானே யானாலும் கைம்பெண்ணென் றுண்டாயின்,
காலிகள் அங்(கு)ச் சென் றெதிர்கொள்வர்,—நல்லானை
இல்லாளும் வேண்டாள், நடன மேடை நாரி வேண்டாள்,
பொல்லாற்கே யிவ்வுலகு காண்!

* * *

ஒரு குடிகாரன் 'சாந்த முலேகா' வென்னும் பாட்டை அருமையாகக் கவனம் செய்து கொண்டு போனன். உண்மையில் அதை நீங்களே கேட்டால் மிகவும் புகழ்வீர்கள். அவன் பாடியதாவது:

சாந்தமு லேகா சௌக்யமு கஞ்சா,
ஸ்வாரஸ்ய பளபள நயனம்!

கே. வி. எஸ். வாஸ்

* * *

இருபது வயதுடைய பெண்ணெருத்தி பிரசவ வேதனையிலிருக்கும்போது 'அம்மா! அம்மா!' வென்று கூவினள். 'என்டி மகளே' யென்று அவளருகே சென்ருள் தாய். 'அம்மா! எனக்கு ஆம்படையான் வேண்டாம்' என்ருள் மகள். அதனைக் கேட்டுத் தாய் சிறிது நேரம் பேசா திருந்தாள். பிறகு பிரசவ வேதனையி லிருக்கும் மகள் சற்று யோசித்து ஐயோ! ஆம்படையான் வேண்டாமென்று சொல்லி விட்டோமே, எங்கே நமது புருஷனை நம்மோடு சேர வொட்டாமல் செய்து விடுவார்களோ வென்று சந்தேகங் கொண்டு 'அம்மா! பெற்றுப் பிழைத்தால் பின்னும் பார்க்கலாம்' என்ருள் பெண்.

—ஏ. சோ

# பந்தோபஸ்து

[இறுதியி லின்பன்]

சில நாடகங்களுக்கு ஒப்பந்தம் செய்யும் பொருட்டு ஒரு கனவான் ஒரு நடிக மாதின் வீட்டிற்குச் சென்றார்.

நடிகமாது:—ஐயா! நான் நடிப்பதில் எத்துணைத் திறமை வாய்ந்தவ ளென்று தங்களுக்குத் தெரிந்திருக்கும்.

ஒப்பந்தக்காரர்:—நன்றாய்த் தெரியும். அதனால்தான் தேடி இங்கு வந்தேன்.



நடிகமாது:—நான் பெண் பாலானதனால் எனக்குப் போதுமான பந்தோபஸ்து வேண்டும்.

ஒப்பந்தக்காரர்:—கேட்பானேன். நானே வேண்டுமானாலும் பந்தோபஸ்து செய்கிறேன்.

நடிகமாது:—நான் தங்களுக்கு அத்துணைக் கஷ்டங் கொடுப்பது சரியாகுமா?

ஒப்பந்தக்காரர்:—அதை விட மகிழ்ச்சி தரத் தக்கது எனக்கு வேறென்ன இருக்கிறது.

நடிகமாது:—எத்தனை நாடகங்களில் நான் நடிக்க வேண்டி வரும்.

ஒப்பந்தக்காரர்:—உனது இஷ்டம்போல்—

நடிகமாது:—ஒப்பந்தமென்றால், இத்தனை நாடகங்கள் நடிக்க வேண்டுமென்ற நியதி வேண்டாமா?

ஒப்பந்தக்காரர்:—உனக்கு எத்தனை நாடகம் நடிக்கத் தெரியுமோ அத்தனையும் நடத்த ஏற்பாடு செய்கிறேன்.

நடிகமாது:—நாடகம் ஒன்றிற்கு ரூபா இருநூறு விகிதம் கொடுத்து விடவேண்டும்.

ஒப்பந்தக்காரர்:—நிதானமாகக் கேள். எனக்கும் கட்ட வேண்டாமா?

நடிகமாது:—வாரம் மும்முறை விகிதம் இருபது நாடகங்கள் தொடர்ச்சியாக நடத்துவதாக இருந்தால் ரூபா 150 விகிதம் ஒத்துக் கொள்கிறேன்.

ஒப்பந்தக்காரர்:—சம்மதம்.

* * *

ஒப்பந்தம் முடிந்தது. அச்சாரமாக நான்கு நாடகச் சம்பளம் ரூபா 600 நடிகமாது பெற்றுக் கொண்டாள். முதல் நாடகம் பார்ஸி சகுந்தலா என்று படாடோபமான விளம்பரங்கள் செய்யப் பட்டன. நாடக தினத்தில் பகலி லிருந்தே டிக்கெட் ஏராளமாக விற்கலாயின. இரவு 9 மணிக்கு முன்பே ஜனங்கள் எள் விழ இட மின்றி கொட்டகைக்குள் நிறைந்து விட்டனர். சகுந்தலா வேடம் பூண்ந்த நம் நாடகமாது துஷ்யந்தனைக் காதலிப்பதையும், துஷ்யந்த னும் சகுந்தலையைக் காதலிப்பதையும் கண்டார் ஒப்பந்தக்காரர்; தம் பந்தோபஸ்தி லிருந்த நடிகமாதைக் கொடியனுன துஷ் யந்தன் காதலிக்கிறு னெனக் கருதி, மேடைமீது பாய்ந் தார்; துஷ்யந்த னேடு சண்டைக்குப் போனுர். நாடகம் நடக்கையில் திடீ ரென்று மேடையில் ஒருவர் ஏறியதைக் கண்டு கூட்டத்தில் குழப்பம் ஏற்பட் டது. இக் குழப்பத் தில் துஷ்யந்தனேடு நடித்துக்கொண் டிருந்த நடிகமாது சற்று நகர்ந்து நின்றுள். பிறகு அவள் மறைந்த மாயம் விளங்கவில்லை. போலீஸார் வெகுவாகப் புலன் விசாரித்தும் இன்னும் துலங்கவில்லை.



ஒரு சிறுவன் தன் பாட்டனைப் பார்த்து, 'தாத்தா! நீங்கள் எனக்குக் கால் ரூபாய் கொடுத்ததாக நேற்று இராத்திரி ஒரு கனுக் கண்டேன்.'

தாத்தா:—மெய்தான். நீ சில நாளாக நல்ல பிள்ளையாக நடந்து வந்ததினுல் நான் கொடுத்தேன். நீ அதைப் பத்திரமாய் வைத்துக்கொள்.

—ஏ. சோ

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

## ஒரு விநோத நாடகம்

(திரு. ஏ. சோக்கலிங்கப் பிள்ளை)

(பதிப்புரிமை ஆசிரிய ருடையது)

சென்ற வெளியீட்டின் தொடர்ச்சி

### காட்சி 6

வெள்ளை முதலியார் பிரவேசம்: கதவைத் தட்டுகிறார்.

மாதவி:—(கதவண்டைபோய் மெள்ள) யாரது?

வே-முதலியார்:—நான்தான். ஐயர் போய் விட்டாரா?

மாதவி:—(பரிகாசமாக) இன்றைக்கு ஐயருக்குக் கோர்ட்டில் வேலை யில்லையாம்.

வே-முதலியார்:—(மெள்ள) ஆனால், நான் போகிறேன். உன் அக்காளிடஞ் சொல்லு.

மாதவி:—நான் கேட்டதை வாங்கி வந்தீர்களா?

வே-முதலியார்:—ஆமாம்.

மாதவி:—நீங்கள் சும்மா வாருங்கள். (கதவைத் திறந்து சிரிக்கின்றாள்.)

வே-முதலியார்:—அடீ! என்னை ஏமாந்தவனென் றெண்ணிப் பரிகாசஞ் செய்கிறாயோ? நல்லது உன் அக்காளிடஞ் சொல்லுகிறேன். சிங்காரம்! பார்த்தாயா? இவள் எனக்குப் பார்ப்பானிருக்கிறானென்று சொல்லிப் பரிகாசஞ் செய்கிறாள்.

சிங்கார:—(சிரித்துக் கொண்டு) அவள் கெட்டாள். பார்ப்பானிருந்தாலும் உங்களுக்கென்ன பயம்? ஆனால், அவன் கொஞ்சம் முறட்டாசாமி. அப்படி மிஞ்சி வந்தாலும், உன்னுடைய தயவு வேண்டியதில்லை யென்று சொல்லி விடுவேன். ஆனால், உங்களுடைய கௌரவத்துக்குப் பார்க்கிறேன். உங்களுக்கும் அவனுக்கும் விரோதமுண்டாகி, சங்கதி நடுத்தெருவில் வரப் போகிறதென்று கொஞ்சம் பார்க்கிறேன். எப்பொழுதும் இலை மறைவு காய் மறைவா யிருப்பதி

னுலே நம்முடைய சிநேகம் நீடித்திருக்கும். நேற்றெல்லாம் இந்தப் பாப்பானேடு கோவிலுக்கு நடந்ததால் என் கால் நோகிறது. சாப்பிடுகிறதற்குக்கூடப் பிரியமில்லை. நீங்களென்ன நல்ல வெயிலில் வந்தீர்கள்?




வே-முதலியார்: — கால் பிடிக்கட்டுமா ? (பிடிக்கப் போகின்ருர்.)

சிங்கார:— ஐயையோ ! அந்த பாவத்திற்கு நான் ஆளாக மாட்டேன். வேண்டாம், வேண்டாம். அது கொண்டு வந்தீர்களா ? கிழவிக்கும் எனக்கும் நல்ல சண்டை.

வே-முதலியார்:—அவளோடு நீயேன் சண்டை பிடிக்கின்ருய்? நீ யிதைக் கொடுத்துவிடு. (நான்கு 10 ரூபா நோட்டுகளும், இரண்டு பெரிய சவரன்களும் கொடுக்கிருர்.)

சிங்கார:—(அதை வாங்கிக்கொண்டு) அப்பா! இந்தக் கிழமுண்டை உபத்திரவந் தீர்ந்தது. நீங்க ளெப்போது வருவீர்களோ வென்று யோசித்துக் கொண்டே படுத்திருந்தேன். என் எண்ணம் போல வந்தீர்கள். வாருங்கள் மேலே போகலாம். நாமிருவரும் கொஞ்சம் சாவகாசமா யிருந்து பேசுவதற்கு எப்போதும் சமயம் வாய்க்கிறதில்லை. கிழ முண்டை யெப்போதுதான் தொலைவாளோ? அடி மாதவி! பிஸ்கட்டும், டீயுங் கொண்டுவாடி. நீங்கள் சாப்பிட்டுப் போனுல்தான் எனக்குத் திருப்தி யாகும்.

வே-முதலியார்:—சரி, உன்னிஷ்டம் போலவே, சிங்காரம் ! மணி யென்ன வாயிற்று? நான் போய் வருகிறேன்.

சிங்கார:—நாலடிக்கப் பத்து நிமிஷம். சரி, பார்ப்பான் வருகிற நேரம்.

வே-முதலியார்:—சிங்காரம்! நம்முடைய தோட்டத்தில் மல்லிகைப்பூ விசேஷம். இன்றைய சாயங்காலம் உனக்கு அனுப்பப் பிரியப்படுகிறேன். ஆனு லெப்படி யனுப்புகிறதென்று தெரியவில்லை.

சிங்கார:—இது தானு தெரியாது? புஷ்பம் விற்கிறவனைப்போல ஒருவனைத் தயார் செய்து, அவனிடங் கொடுத்துத் தீபம் வைக்கிற

நேரத்தில் இந்த வீட்டிற்கு நாலாவது வீட்டண்டை யிருந்து கூவிக் கொண்டு வரச் சொல்லுங்கள். அந்தச் சமயம் நானும் பார்ப்பானும் வீதித் திண்ணையி லுட்கார்ந்து பேசிக்கொண் டிருப்போம். பிறகு நானெப்படியாவது வாங்கிக் கொள்ளுகிறேன்.

வெ-முதலியார்:—நான் போய் வருகின்றேன். எதோ இப்படித் திரும்பு. (முத்தமிடுகிருர்) தீபம் வைக்கிற நேரத்தில் புஷ்பக்காரன் வருவதைப் பார்ப்பாய். (போகின்ருர்)

(சிங்கார மஞ்சரியை வைத்துக்கொண் டிருக்கிற ஐயர் கதவைத் தட்டுகிருர்.)

மாதவி:—யாரங்கே?

ஐயர்:—கதவைத் திறடி.

மாதவி:—சுவாமி! நீங்கள் போனவுடன் சோபாவின் மேல் படுத்தவள், மத்தியானங்கூடச் செவ்வையாகச் சாப்பிடவில்லை. உடம்பெங்கும் நோகிற தாம். (மாதவி சிங்கார மஞ்சரியை யெழுப்பப் போகிருள்) அக்காள்! ஐயர் வந்தார்கள்.



ஐயர்:—அடி! தூங்கட்டும். எழுப்ப வேண்டாம். பக்கத்தில் உட்காரு கிருர்.)

சிங்கார:—(திடுக்கென்று பயந்தவள் போல) யாரது உட்கார்ந்தது? (எழுந்திருக்கிருள்) சுவாமி! நீங்களா. ஏனடி ஐயர் வந்ததும் எழுப்பவில்லை. முட்டாள் சிறுக்கி. ஐயருக்கு டீ கொண்டுவாடி.

ஐயர்:—டீ வேண்டாம், சேகோ கஞ்சி கொண்டு வாடி.

சிங்கார:—சீக்கிரங் கொண்டு வாடி. சுவாமி! இன்றைக்கென்ன இவ்வளவு தாமசம்? ஆபீசை விட்டதும் நேராக என்னிடம் வருவதற்குப் பிரியமில்லைபோ லிருக்கிறது?

ஐயர்:—இல்லை. என் கண்ணே! ஆபீசிலேயே கொஞ்சம் நேரமாய் விட்டது.

சிங்கார:—சுவாமி! நீங்கள் இன்றிரவு வீட்டிற்குப் போவீர்களோ?

ஐயர்:—இல்லே. வீட்டில் யாருமில்லே. எல்லோரும் மாயவரும் போயிருக்கிருர்கள்.

சிங்கார:—ஆனுல், உங்களுக்குச் சாப்பாடு எங்கே?

ஐயர்:—எனக்குச் சாப்பாடு, இராப்பாடு எல்லாம் இங்கேதான்.

சிங்கார:—மெத்த சந்தோஷம். சுவாமி! இன்றைய தினம் மல்லிகைப் பூ முடித்துக் கொண்டு, நிலா வெளிச்சத்தில் இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண் டிருக்கப் பிரியப்படுகிறேன். உங்களிஷ்டமெப்படி?

ஐயர்:—உன் இஷ்டம் போலவே செய். உன் சொல்லுக்கு இரண்டாஞ் சொல் கிடையாது.

சிங்கார:—அடி மாதவி! தீபம் வைக்கிற வேளேயாயிற்று. எவனுகிலும் மல்லிகைப் பூவென்று கூவிக்கொண்டு போனுல் கூப்பிடு.

மாதவி:—ஆகட்டும், அக்கா.

(வெள்ளே முதலியார் அனுப்பிய பூக்காரன் பிரவேசம்)

பூ விற்பவன்:—மல்லியப்பூ, கொடமல்லியப்பூ, ஊசிமல்லியப்பூ.

(தொடரும்)

---

இரண்டு கிராமங்களுக்கும் பொதுவாக ஓர் ஏரி யிருந்தது. அதினின்றும் தண்ணீர் பாய்வதற்கு ஓர் மதகு இருந்தது. அவ்வொவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு தமிழ்ப் பண்டித ரிருந்தனர். ஓர் நாள் காலேயில் அவ்விரு பண்டிதர்களும் அம்மதகின் பக்கத்தில் சந்தித்தார்கள். ஒருவரை யொருவர் மோடனம் பண்ண (மூடனுக்க) எண்ணி, ஒரு பண்டிதர் மற்றொரு பண்டிதரைப் பார்த்து 'பண்டிதரே! என்னே விழுந்தூம்பு?' என்ருர். உடனே மற்றவர் 'பண்டிதரே! நீர் விழுந்தூம்பு' என்ருர்.

என்னே - என்ன, விழும் - விழுகின்ற, தூம்பு - மதகு

* * *

ஓர் நாள் இராம னென்பான் தன் உபாத்தியாயரைக் கண்டு 'சுவாமி! அரங்கன் எப்படிப் பட்டவன்' என்ருன். 'அப்பா! அவனு, வித்தையி லே கர்வமில்லே' என்ருர் உபாத்தியாயர். 'சுவாமி! திருஞானம் எப்படிப்பட்டவன்?' என்ருன் இராமன். 'அப்பா! அவனு, வித்தை யில்லே கர்வத்தி லே' என்ருர் உபாத்தியாயர்.

ஐ - அரசன்

—ஏ. சோ

# காணாத தெய்வங்கள் கழுத்தறுக்கச் சொல்லினவா?

[திரு. டி. எஸ். ஸ்ரீபால்]

(சூரியன் எவ்வுயிர்க்கும் பொதுவாய் ஒளியை வீசுகின்றது.)




(பூமி எவ்வுயிரையுந் தாங்கி, புல் பூண்டுகளால் ஆகார மளிக்கின்றது.)

எவ்வுயிருக்கும் இறைவனும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைப் பகவான் என்று எவ்வாறு போற்றுகின்றோமோ அவ்வாறே பூமி, சூரியன், சந்திரன், வாயு, வருணன், அக்னி முதலியவைகளையும் முறையே பூமாதேவி, சூரியபகவான், சந்திரபகவான், வாயுபகவான், வருணபகவான், அக்னிபகவான் என்று தெய்வங்களாகப் போற்றுகின்றோம். ஏனெனில் தெய்வமானது எவ்வாறு உலகிலுள்ள ஆன்மகோடிகளுக் கெல்லாம் தாய் தந்தையைப்போல் விளங்குகின்றதோ அவ்வாறே தெய்வாம்ஸம் பொருந்திய இவ் வாறும் தங்களுக்குரிய இயற்கை சக்தியால் தங்கள் கடமைகளைத் தவறாது தினந்தோறும் உலகிலுள்ள சகல ஆன்ம கோடிகளுக்கும்

சமமாகவே புரிந்து வரும் அதிசயமே நமக்கு ஆச்சரியத்தையும் பக்தியையும் உண்டாக்குகின்றது. இதனையே கபிலர்,

‘மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ
மானிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ’

என்று கூறிப் போற்றியுள்ளார். பூமியானது ஒரு தாயைப் போன்றது. ஒரு தாயானவள் தன் குழந்தைகளை மடிமீது வைத்துப் பாலூட்டிப் பாதுகாப்பதுபோல, பூமாதேவியும் மானிடர் முதல் எறும்பீராகவுள்ள எண்பத்து நான்கு லக்ஷபேத உயிர்களையுந் தாங்கி, புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலியவைகளால் நடமாடும்

வாயு.



(வாயு காற்றை எவ்வுயிர்க்கும் பொதுவாய் வீசுகின்றது.)

எல்லா உயிர்களும் தங்கள் பசியை யாற்றிக்கொள்ள ஆகார மளித்துக் காத்து வருகின்றாள். அதனா லன்றோ நம் மூதாதையர்களான முதிர்ந்த ஞானிகள் பூமியைப் பூமாதேவி யென்று பெண் தெய்வ மாகப் போற்றினார்கள்.

அவ்வாறே சூரியன், சந்திரன், வாயு, வருணன், அக்னி முதலிய தெய்வங்களும் ஒளியினாலும், காற்றினாலும், மழையினாலும், நெருப்பினாலும் மானிடர், ஆடு, மாடு, கோழி முதலிய எல்லா உயிர்களுக்கும்

பொதுவாகவே தங்கள் கடமையை ஆற்றி வருகின்றனவே யன்றி நடுநிலைமையின்றி பூமியானது மானிடர் தவிர மற்ற ஜீவன்களைத் தாங்கே னென்கின்றதா? சூரியனுஞ் சந்திரனும் மற்ற ஜீவன்களைக் காயோ மென்கின்றனவா? காற்று வீசே னென்கின்றதா? இல்லை! இல்லை!! மானிடரா யிருந்தா லென்ன, மற்றெவ்வுயிரா யிருந்தா லென்ன! தெய்வத்திற்கு யாவருஞ் சமமே. பாவம்! நம்மைப்போல அந்த ஊமைப் பிராணிகளும் பூமிமேல் வாழ்ந்து சூரியன், சந்திரன், வாயு, வருணன், அக்னி முதலியவைகளின் நன்மைகளைச் சுதந்தரமாகவும் சமமாகவும் பெற்று, குட்டிகளை ஈன்று பிணி, மூப்பு, சாக்காடு அடைந்து கடைசியில் மானிடரைப்போல் எமன் வாய்ப்படுகின்றன.




(வருணன் மழையை எவ்வுயிர்க்கும் பொதுவாய்ப் பொழிகின்றது.)

இவ்வாறு கடவுளின் நீதி பிரத்யக்ஷமாய் விளங்கி வர காட்டேரி, பூட்டேரி, பெரியாண்டவன், சின்னாண்டவன், மன்னார் சாமி, பொன்னார்சாமி, மதுரைவீரன், குதிரைவீரன், கருப்பன், சங்கிலிக் கருப்பன், மாடன், கூடன், சின்னமொட்டை, பெரிய மொட்டை, செல்லி, செல்லாத்தா, சொக்கி, சொக்காத்தா, சின்னக் கண்ணி, முண்டக்கண்ணி, மாரியம்மா, கோரியம்மா, பத்ரகாளி, பித்ரகாளி, கங்கம்மா, புங்கம்மா, எல்லம்மா, நொள்ளம்மா என்று கணக்கற்ற ஆண் பெயர்களையும் பெண் பெயர்களையுங் கொண்டவை

005526

தெய்வம், தெய்வ மென்று உலகில் சிலரால் போற்றப்பட்டு வருகின்றன. இவை மானிடர்களை மாத்திரம் காப்பாற்றுந் தெய்வங்களென்றும் மானிடர்களின் உயிர்களுக்காக ஆடு, கோழி, பன்றி, எருமைக்கடா முதலிய உயிர்களைக் கேட்கின்றனவென்றுங் கூறிக் கண்கண்ட தெய்வங்களால் காப்பாற்றப்பட்டு வரும் திக்கற்ற ஊமைப் பிராணிகளைக் கண்ணிற் காணாத இப்போலித் தெய்வங்களின்முன் மானிட உருவந் தாங்கி மிருக சுபாவம் நிறைந்த சிலர் இரக்கமின்றி கால்வேறு தலை வேறாய்த் துடிக்கத் துடிக்க வெட்டிப் பலியிடுகின்றனர். அந்தோ! அந்தோ! மனம் பதைக்கின்றதே! உடல் நடுங்குகின்றதே! உயிர் துடிக்கின்றதே! இத்தெய்வங்கள் உயிருக்குயிர் கேட்ட தென்பதற் கென்ன ஆதாரமோ? இவை தெய்வங்க ளென்பதற்கு என்ன சரித்திரமோ? இந்தத் தெய்வங்களால் உலகுக்கு என்ன நன்மையோ? இந்தத் தெய்வங்களைப்பற்றிக் கூறும் கதைகளும் சக்திகளும் வெறும் மூட்டையே.

இவை நம் நாட்டில் பரவிய வரலாற்றைக் கவனியுங்கள். இத்தெய்வங்களில் சில காட்டு ஜனங்களால் தொழப்பட்டு நாட்டில் வந்தவை. மற்றவைகளில் சில நம்மைப்போல மானிடராகப் பிறந்து கொடுஞ் செயல்களைச் செய்து அரசனாலும் பிறராலுந் தண்டிக்கப்பட்டுப் பருவம் முதிரா முன்னே இறந் தொழிந்தவை. இப்பாவிகளால் பலனடைந்த இவர்களின் நண்பர்களும் பந்துக்களும் இப்பாவிகளுக்குச் சமாதிகள் கட்டி இவர்களை வணங்க ஆரம்பித்தார்கள். மற்றுஞ் சிலர் பணக்காரர்களாகவோ, பெரிய தனக்காரர்களாகவோ யிருந்து இறந்தவர்கள். இவர்களும் அவ்வாறே சமாதி கட்டப் பெற்று சில நாள் சென்று தெய்வமென்று போற்றப்பட்டவர்கள். மற்றும் சில ஆங்காங்கு வசிக்கும் மக்களால் தங்களுக்கிஷ்டமான தெய்வங்களாகக் கும்பிடப்பட்டவை. இன்னுஞ் சில கற்பனையாக ஐந்துதலை நாகம் வந்ததென்றும், புத்து கிளம்பிற்றென்றும், கனவில் வந்து சொல்லிற்றென்றும், பூமியிலிருந்து கிளம்பிற்றென்றும் பிதற்றித் திடீரென்று ஒரு கதையைப் பரவச் செய்து எல்லாரையும் பக்தி கொள்ளும்படி வசியப்படுத்தி இதனால் வரும் வரும்படிகளைக் கள்ளுக்கடைக்கும் மற்ற அநீதிகளுக்கும் போகும்படிச் செய்ய முளைத்தவை. இத்தகையக் கட்டுக்கதைகளாலுண்டான சமாதிகளே, கோயில்களாகி, தெய்வங்களாகி, புராணங்களாகி, ஸ்தல புராணங்களாகி, ஈஸ்வர சம்பந்தமாகி, பேயாகி, பிசாசாகி, ஆவேசமாகி, ஆடு கோழிகளுக்கு ஆபத்தாகி, சன்மார்க்கங்கள் துன்மார்க்கமாகி, மனிதத்தன்மை மிருகத்தன்மையாகி, பாமரர்களுக்குப் பாரம்பர்யமாகிப் படித்து நாகரிகமுள்ள சிலருக்கும் பற்றுண்டாகி, உடனே வெறுப்புண்டாகி, இவ்வாறு உலகம் பல விதமாகி இயற்கைக்கும், தருமத்திற்கும், நியாயத்திற்கும் விரோதமாகிச் சிலரைக்

கொலையாளிகளாக அலையச் செய்து வருகின்றன. அந்தோ! பகுத்தறிவைப் படைத்த மானிடர்களே! கண்கண்ட தெய்வங்களையுங் காணாத தெய்வங்களையும், நியாய அநியாயங்களையும், தரும அதருமங்களையும் பகுத்தறிந்து எவற்றைப் பின்பற்ற வேண்டுமென்பதை ஊகித்தறிந்து உண்மை வழியில் நடுநிலைமையாக நின்று நல்வழி திருந்துங்கள். குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டதைப் போல மேற்சொன்ன சிறு தெய்வங்களெனுங் கோயில்களாகிய கொலைக்களத்துக்குச் சென்று உங்கள் அன்பு நிறைந்த




(சந்திரன் எவ்வுயிர்க்கும் பொதுவாய் வெளிச்சத்தையும் குளிர்ச்சியையும் தருகின்றது.)

மனதில், அருள் நிறைந்த அகத்தில், பக்ஷமான உள்ளத்தில், கொடூரமான கோர எண்ணத்தைப் புகுத்தி, ஆடு, கோழி, பன்றி எருமைக்கடா முதலியவைகளைத் துன்புறுத்தித் துடிக்குமாறு கழுத்தறுக்கும் பாவச் செய்கையில் ஈடுபட்டுப் பாவிகளாகாதீர்கள். திக்கற்ற ஜீவன்களென்ற யெண்ணத்தால் நீங்கள் அந்த எளிய ஜீவன்களைக் கொலை செய்ததற்காக மனித அரசு விசாரியாவிட்டாலும் தெய்வ அரசு உங்களைச் சும்மா விடாது. 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்றபடி நீங்கள் அவயவக் குறைவின்றி அழகான புத்ர பௌத்ராதிகளைப் பெற்று சந்ததி

விளங்கவேண்டுமானுல், குஷ்டரோகம் முதலிய கொடிய வியாதிகள் அண்டாம லிருக்க வேண்டுமானுல், பொரு ளிழந்து வறுமையாகிப் பிச்சையெடா வாழ்வு வாழ வேண்டுமானுல், கொலை களவு குற்றத் தால் சிறையி லகப்படாம லிருக்க வேண்டுமானுல் பிற சீவன்களை எந்தக் காரணத்தினுனும் கொலை செய்யாதிருங்கள். பலியிடுவதென் பது பாழான, படிப்பில்லாத, நாகரிகமற்ற, கொடிய காட்டு ஜனங் களின் வழக்கமே யன்றி வேறில்லை. நீங்கள் நன்ருக ஆராய்ந்து காணுத கற்பனைத் தெய்வங்களின்பேரில் பாரத்தைப்போட்டு, கண்




(அக்னி எவ்வுயிர்க்கும் பொதுவாய்த் தீயை உதவுகின்றது.)

கண்ட தெய்வங்களான பூமி, சூரியன், சந்திரன், வாயு, வருணன், அக்னி முதலிய தெய்வங்களா லன்புடன் காப்பாற்றப்பட்டு வரும் ஊமைச்சகோதரர்களாய், நமக்குப் பலவித உபகாரம் புரிந்துவரு பவைகளாய், திக்கற்றவைகளாயுள்ள எளிய பிராணிகள் துடிக்கத் துடிக்க அவற்றின் கழுத்தை யறுக்காதீர்கள்! கழுத்தை யறுக்காதீர் கள்!! மன்னுயி ரெல்லாம் தன்னுயிரென நினைத்து பலியிடும் பாவ வழியை விட்டு, கொலையிலா நல்வழியை நாடி மனிதத் தன்மையை நிலைநாட்டிப் பாவத்தை யொழித்துப் புண்ணியத்தைப் பெற்று எல்லாம் வல்ல இறைவனை அடையும் வழியை நாடுங்கள்.

# பாரதியார்

[இளங்கோவன்]

மதுரத் தமிழ் மொழியில் இன்று ஒருவித புதுமணம் கமழ்கின்றது—புது ஒளி வீசுகின்றது—இன்பம் ஊற்றெடுத்துப் பாய்கின்றது—புரட்சித் தாண்டவமாடுகின்றது. இவ்வளவுக்கும் மூலபுருஷன் யாவன்? என் தலைவன்—என் ஆசிரியன்—சுப்பிரமணிய பாரதிதான் தமிழ் மொழியின் புரட்சிக்குக் காரண கர்த்தன். இளைஞர்களின் பேனா முனைகளில் அவனது ஜீவ சக்தியைக் காணலாம்.

அருளும், அழகும், அமுதமும் கலந்தொழுகும் 'அருட்பா' ஆசிரியரும், நெஞ்சை அள்ளும் 'மனோன்மணீய' ஆசிரியரும் தமிழகத்தில் மின்னலெனத் தொடர்ந்து தோன்றி மறைந்தனர். அவ்வளவுதான் தாமதம்! மீண்டும் தமிழ் வான வீதியைப் பண்டிதர்களின் எதுகை மோனைக் கவிகள் கவ்வின. தனித் தமிழர்களின் இடி முழக்கங்கள் தமிழ்த் தாயின் ஹிருதயத்தை நடுங்கச் செய்தன. எங்கும் ஒரே அந்தகாரம்—எல்லையில்லாத இருட் படலம். நம் தாயின் தாமரைக் கண்களினின்று கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடிக்கொண்டிருந்தது. அத்தருணத்தில்தான் பரிதியெனத் தோன்றினான் நம் சுப்பிரமணிய பாரதி.

பாரதியார் தோன்றினார். பேய்க் கூட்டங்கள் மாய்ந்தே போயின. வஞ்சனையாளர் அஞ்சி யொளிந்தனர். அன்னைக்கு வந்துற்ற இன்னல் மின்னலென மறைந்தது. வாடிக் கிடந்த அவள் வதனம் வனசமென மலர்ந்தது. அவள் வாழ்க!

தமிழன்னையை வாழ்விக்க வந்த பாரதியாரின் திருமிகு முகத்தைக் கண்டு கைகூப்பி வணங்கிக் களிக்கும் பாக்கியத்தை யான் பெற்றேனில்லை. ஆனால் இன்று அவரது புகைப்படத்தைக் காண்கின்றேன்! ஆ என்ன கோரம்! என்ன கொடுமை! ஒட்டிப் போன கன்னங்களையும், குழி விழுந்த கண்களையும், மங்கிச் சோபை யிழந்த முகத்தையும் காணும்போது என் நெஞ்சம் குமுறுகின்றது. 'தமிழகம் பூராவையும் ஏன் கடல் கொண்டு போகவில்லை?' என

அப்படம் என்னை எண்ணச் செய்கிறது. அப்பரைக் கல்லைக் கட்டிக் கடலில் போட்டது இத்தமிழ் நாடு—மாணிக்க வாசகரைக் கொடுஞ் சிறையி லிட்டது இத்தமிழ் நாடு—பாரதியாரைப் பட்டினி போட்டுக் கொன்றுவிட்டது இத்தமிழ் நாடு. பாரதியாரை நாம்தாம் கொன்றோம். தமிழர்கள்தாம் பாரதியாரைக் கொன்றனர். இதை மறைக்கவோ மறுக்கவோமுயல்வதில் பயனில்லை. 'தமிழ் நாடு ஒரு கொலைக்களம்' என்றார் ஓர் அறிஞர். அதில் அணுவளவும் சந்தேகமேயில்லை. இத்தகைய கொலைக் களமாம் தமிழ் நாட்டில் தோன்றி, தமிழர்களோடு அளவளாவி, அன்பு செலுத்தி விடை பெற்றுக் கொண்ட பாரதியாரின் புகைப் படத்தை நோக்கும் உண்மைத் தமிழ் மகன் ஒவ்வொருவன் நெஞ்சமும் பகிரென்றெரியும் என்பதில் ஐயமென்ன? தமிழ் நாட்டின் கொடுமையைக் குறிக்கும் அப்படத்தை யான் அடிக்கடி பார்ப்பதில்லை.



கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்

பாரதியாரைப்பற்றி எழுதுகின்ற நான் — இம்மடையன் — ஒரு காலத்தில் பாரதியாரை வெறுத்தே வந்தேன். இதைக் கூறப் புகுங் காலையில் என் நண்பரைப் பற்றிச் சற்றுக் கூற வேண்டியது அவசியமென்றே எனக்குத் தோன்றுகிறது. பாரதியாரை முதன் முதலாக எனக்கு அறிமுகம் செய்தவர் திரு. அளகேசன் அவர்களே யாவர். இவரைப்பற்றி வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது எனது கடமையாகும். 'நம்முள் நாம் உபசாரம் செய்வது' தகுமோ? ஆதலின், 'தமிழ் நாட்டில் நான் கண்ட உண்மைத் தேச பக்தர்களில்—ஊழியர்களில்—எனது நண்பர் திரு. அளகேசனும் ஒருவர்' என்று கூறி நிறுத்திக் கொள்கிறேன். 'பாரதி எதுகை மோனை யில்லாமல் பாடி விட்டான்; இலக்கணமே தெரியாதவன்; ' அச்சமில்லை யென்று பாடிய இவன் ஏன் அரசாங்கத்திற்குப் பயந்து புதுச்சேரிக்கு ஓடிப் போய் விட்டான் ?' என்ற மடத்தனமான கேள்விகளை யெல்லாம் இந்

நண்பரை நான் கேட்டு எள்ளி நகையாடியதுண்டு. அப்போது இந்நண்பர் ஏதோ தக்க சமாதானம் கூறினர் என்றே நான் நினைக்கிறேன். ஆனல் இவர் சமாதானங்களினல் நான் திருப்தி யடையவில்லை என்பது நன்ருய் என் நினைவி லிருக்கிறது. ஆனல் என் நண்பர் அடிக்கடி மேலும் மேலும், விடாமல் தொடர்ந்து எனக்குப் பாரதியாரின் கவிதைகளைப் படித்துக் காட்டுவார். அதன் பயன் என்ன? பாரதியார் மேல் நான் மோகமானேன். பின்னர் நான் பாரதியார் அடிமையானேன். எத்தனையோ நண்பர்களுக்கு, திரு. அளகேசன் படித்துக் காட்டினர்? ஆனல் அவர்களில் எத்தனை பேர்கள் இப்போது பாரதியாரைப் போற்றுகிருர்கள் என்பது எனக்குத் தெரியாது. எனது நண்பர் நீடுழி வாழ்க!

பாரதியார் மேனட்டுக் கவிஞர்களிற் சிலரைப் போல காதல் ஒன்றினையே பாடிப்பாடி களித்துச் சென்ற கவிஞ ரல்லர். இயற்கை வனப் பொன்றினையே எண்ணி எண்ணி ஏங்கிய கவிஞ ரல்லர். இவ்வாறு கூறும்போது மேனட்டுக் கவிஞர்களை நான் தாழ்த்துவதாகக் கருதி விட வேண்டாம். அவர்களை நான் இன்றும் போற்றுகிறேன். பாரதியார் ஒரு வேதாந்தக் கவிஞர்; கடவுட் பித்தம் கொண்டவர்; அன்னையை அணைந்து முத்தமிட்டு மோஹம் தீர்த்துக் கொண்டவர்.

ஆனல் பாரதியார் தேசப் பற்றையே தமது முதல் தொழிலாகக்கொண் டிருந்தார்; தாய் நாட்டை வணங்கிய பின்னரே கடவுளை வணங்கும் பான்மை யுடையவர். பாரதியார் மகா தேசாபிமானி. அரசாங்க உத்தியோகங்களில் பெரு மோஹங் கொண்டு தேசாபிமானத்தை விற்றுவிட்ட, வோர்ட்ஸ் வோர்த், ராபர்ட் சதே முதலிய மேனட்டுக் கவிஞர்களைப் போன்றவ ரல்லர் நமது பாரதியார். அவர் வீரக் குன்றம்—ஆண்மையின் ஆலயம்—தேசாபிமானத்தின் ஜோதி. பாரதியார் ஒரு எரிமலையை யொத்தவர். அரசாங்கமும், அவரது தோழர்களான தமிழர்களும் செய்யும் கொடுமைகள் அவரால் சகிக்க முடியவில்லை. அவர் உடல் குலுங்கியது. உள்ளிருந்த உயிர் நெருப்பு எரியத் தொடங்கியது; உள்ளம் உருகியது; உணர்ச்சிகள் மேலெழுந்து நாற்புறமும் வீசினின்றன. இவ்வுணர்ச்சிகள் தாம் அவரது தீங்கவிதைகள். இக் கவிதைகளால் தமிழர் வீரம் பெற்றனர்; வெற்றி யுற்றனர்.

‘பொலிவுறு புதல்வர் தூக்கினி லிறந்தும்
புன்சிறைக் களத்திடை யழிந்தும்;
வேற்று நாடுகளில் அவர் துரத்துண்டும்
மெய்குலைந் திறந்துமே படுதல்
ஆற்ற கிலாராய் எம்மரு நாட்டின்
அன்னைமார் அழுங் கண்ணீரானே’

என்ற வரிகளைப் படிக்கும்போது பாரதியாரின் அழுகைக்குரல் என் காதில் கேட்கின்றது. நானும் அழுகின்றேன். இதை ஊன்றிப் படிக்கும் ஒவ்வொரு உண்மைத் தமிழனும் அழுவான்.

'இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால் வனவாசம்
இவ்வாறங்கே
செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித்
தீர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள்—அடிபரவி உண்மைசொலும்
அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடு நல்விழியாலே நோக்கினாள்;
முடிந்தான் காலன்—'

என்ற அடிகள், 'வீரத் தமிழா! நீ அஞ்சேல்! கொடுங்கோலர் விரைவில் வீழ்வர்; பாரத நாட்டின் விடுதலை வெகு தூரத்தி லில்லை" என்று ஆறுதல் அளித்து நம் ஊக்கத்தைத் தட்டி யெழுப்புகின்றன.

'தனி யொருவனுக்கு உணவில்லை யெனில்—ஜகத்தினை அழித் திடுவோம்' என்ற வரிகளை நாம் பார்க்கும்போது, கால் வயிறுகூட கஞ்சி குடித்தறியாத இந்தியப் பஞ்சை மக்களின் கண்ணீரால் துளைக் கப்பட்டு உதிர மொழுகும் பாரதியாரின் உள்ளம் நம் கண்முன் பளிச்சென்று தெரிகின்றது! மனித ஜாதி யிடத்தில் மாறா அன்பு செலுத்திய பாரதியாரை அந்தோ! நாம் இழந்து விட்டோம்.

இத்தகைய பாரதியாரை அரசாங்கம் அல்லும் பகலும் வருத்திக் கொண் டிருந்ததாகவே தெரிய வருகிறது. சி. ஐ. டி, பரம்பொருள்கள் அவரைப் புதுவையில் படாதபாடு படுத்தினதாகவும் நான் கேள்விப்பட்டதுண்டு. மக்களிடத்தில்—சிறப்பாகத் தமிழரிடத்தில் இடையறா அன்பு செலுத்திய பாரதியார் மிகுந்த வெறுப்புடன் 'நாயெனத் திரி ஒற்றர்' என்று கூறி அரசாங்க ஒற்றர்களை எள்ளி நகையாடுகின்றார்.

பாரதியாரின் வாழ் நாட்கள் வறுமையிலேயே கழிந்தன. வறுமை ஒரு புறம் அவரைப் பெரிதும் வாட்டியது. மற்றொருபுறம் அரசாங்கம் அவரைப் பெரிதும் ஆட்டியது. தமிழர்கள் அவரது பெருமையை அறியாமல் அவரைப் புறக்கணித்தனர். ஆகவே கவிஞரின் வாழ்நாளும் கடிதினில் முடிவடைந்தது. ஆனால் பாரதியார் இவைகளை யெல்லாம் சிறிதும் அஞ்சாது எதிர்த்து வந்தார் என்றே அவரது கவிதைகள் காட்டுகின்றன.

'மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக் கெலாம் மலைவுறேம்—சித்தம் கலைவுறேம்'—என்று வீர கர்ஜனை புரிந்த பாரதியார்—'யானும் ஓர் சித்தன்' என்று தோள் தட்டி ஆர்ப்பரித்த பாரதியார்—

சாவாமை யுபதேசித்த பாரதியார்—எல்லாரையும் போலவே தமிழகத்தி னின்று மறைந்தார். ஆ! தமிழ்த் தாய் அன்று எப்படி அழுதாள்!'

வீர வாழ்வு நடத்தி, கவிதைகளைப் பொழிந்து சென்ற பாரதி யார் தமிழ் நாட்டில் எவ்வாறு போற்றப்படுகின்றார்? அவரது நூல்கள் எவ்விதம் விளங்குகின்றன என்பதைப் பற்றிச் சிறிது கூறும விருக்க என்னால் முடியவில்லை. தற்போதுள்ள பத்திரிகைக ளெல்லாம் பாரதியாரைப் புகழ்ந்து பத்திப்பத்தியாக எழுதி வருகின்றன. ஆசிரியர்களின் பேனாமுனைகளில் பாரதியாரின் தமிழ்நடை சிறிது பிரதிபலிக்கின்றது. அவரது கவிதைகள் தமிழ் நாட்டில் பரவிவிட்டன. முழுவதும் என்று சொல்ல முடியாது; கால் பாகம் பரவிவிட்டது என்று கூறலாம். பாரதியாரின் புகழை இந்தியா வெங்கும், மேனா டெங்கும் பரவச் செய்ய வேண்டியது நமது கடமை. அதை யெவ்வாறு செய்வது?

பாரதியாரின் கவிதைகள், வசனங்க ளெல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இவ்வேலையை—திரு. வேங்கட ரமணி முதலிய ஆங்கில வல்லுநர்கள் செய்ய வேண்டியது மிக மிக அவசியம். பாரதியாரது கவிதைகள் எந்த உலகக் கவிஞர்களின் கவிதைகளுக்கும் தாழ்ந்தனவல்ல என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். 'தமிழிலக்கியம் தற்காலம்' என்ற புத்தகத்தை எழுதிய திரு. ஏ. வி. சுப்பிரமணிய ஐயர், 'பாரதியார் மகா கவிஞரல்லர்' என்று முடிவு கட்டுகிறார். இதை அடியேன் ஏற்றுக் கொள்ள முடி யாது. ஷேக்ஸ்பியர் 52 வயது வரையிலும் உயிரோடிருந்தார்; ஆயிரம் நாடகங்களை எழுதித் தள்ளினார். மஹாகவி என்ற பட்டம் அவருக்குக் கிடைத்தது. ஆனால் பாரதியார் சொற்ப ஆண்டுகளே வாழ்ந்தார். அதிலும் கவலை நிறைந்த வாழ்வு. அக்கால அளவில் சில கவிதைகளே வெளிவந்தன. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதந்தானே? ஆக, மஹாகவியின் இலட்சணத்தை—ஹிரு தயத்தைப் பாரதியாரின் தற்போதைய கவிகளில் நாம் காண்கின் றோம். அவர் ஒரு பாட்டு பாடினாலென்ன? ஓராயிரம் பாட்டு பாடினால் தானென்ன? அவர் மஹா கவிஞர்தான். அது மறுக்க முடியாத உண்மை. மேலே வேடிக்கையாகக் கூறப்புகின் தாகூர் முதலிய வர்கள் சிறுநீர் பெய்தால்கூட அது ஆங்கிலப் பத்திரிகைகளில் அடிபடுகிறது. தாகூர் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வங்க மொழியும் ஆங்கிலமாக மாறி புத்தக ரூபமாகவும் பத்திரிகை ரூபமாகவும் காட்சி யளிக்கின்றது! இத்தகைய சிறப்புகளை எம்பாரதியார் பெற அருகரல்ல ரோ? முழுதும் அருகதையுடையவர். பாரதியின் கவிதைகள் 'இந்து' 'மாடர்ன் ரேவியூ' முதலிய பத்திரிகைகளில் பரிமளிக்க வேண்டும்.

அடுத்தபடியாக தற்போதுள்ள 'பாரதி நூல்கள்' சரிவர பதிப் பிக்கப்படவில்லை என்று கூற நான் வருந்துகிறேன். சுருங்கக்கூறின்

'பதிப்புகள்' பார்வைக்கு அழகைத் தரவில்லை. உள்ளே பிரித்துப் பார்த்தால், பாரதியாரின் 'காவியங்கள்' கலம்பகங்களாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. அச்சுப்பிழைகள் அநேகம். மொக்கை எழுத்துக்களைப் பற்றிக் கூறமுடியாது. கொட்டை கொட்டையான தலைப்புகள் கொடுத்து கவிதைகளின் அழகைச் சிறிது மங்க வைத்துவிட்டனர். பாரதியார் ஒரு கவி. ஆனால் கவியின் ஜீவிய சரிதம் அவரது 'காவியங்களில்' காணப்படவில்லை. 'வசன பாகத்தில்' அது காணப்படுகின்றது. இது மிக மிகப் பெரியதொரு தவறாகும். பைரன் கவிதைகளையும், ஆபட் நெப்போலியனையும் நான் படித்தபோது மேற்கூறிய பிழைகளை நான் அப்புத்தகங்களிற் கண்டிலேன். அப்பதிப்புகளே ஒரு ரம்மியத்தைத் தருகின்றன. 660 பக்கங்க ளடங்கிய பைரன் கவிதைகளிலும் 606 பக்கங்க ளடங்கிய நெப்போலியனிலும் எழுத்துப் பிழைகள் எங்கோ ஓரிடத்தில் 'அற்புதமாகக் காணப்படுகின்றன. ஆனால் 595 பக்கங்க ளடங்கிய பாரதியார் 'காவியங்களில்' 999 அச்சுப் பிழைகள் காணப்படுகின்றன. சோம்பல் என்னைத் தடை செய்யா திருந்தால் பாரதியார் காவியங்களில் உள்ள அச்சுப் பிழைகளை அடுத்த இதழில் எடுத்துக் குறிக்கின்றேன். மறுப்பதிப்பிலாவது பிழைகளைத் திருத்தி பாரதி பிரசுராலயத்தார் வெளியிடுவார்களென்றே நம்புகின்றேன். பாரதியாரின் நூல்களைச் சிறுசிறு புத்தகங்களாகவும் விற்கின்றனர். அம்மம்ம! இதைக் காணும்போது என் அகம் பதறுகின்றது. பாரதியாரது உணர்ச்சிகளைத் துண்டம் துண்டமாக வெட்டிச் சின்ன பின்னப்படுத்தித் தமிழ் நாட்டில் விற்கின்றனர் என்ற முடிவுக்கே என் மனம் வருகின்றது. இப்பிழைகளை யெல்லாம் திருத்தி, சுத்தப் பதிப்புகளை வெளியிடுமாறு பாரதி பிரசுராலயத்தாரை நான் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

பாரதியார் பள்ளிச் சிறார்களின் கரங்களில் தவழ வேண்டும். பாவையரின் பாலமுத வாயில் அவரது பாடல்கள் இனிக்க வேண்டும். தனித் தமிழ்ப் பண்டிதர்களின் அகத்தில் பதிய வேண்டும். வீதி தோறும், வீடு தோறும் பாரதியாரின் பாடல்கள் நடனமிட வேண்டும். கிராமபோன் பிளேட்டுகளிலும், பாட்டுக் கச்சேரிகளிலும் அவரது பாடல்கள் ஒலிக்க வேண்டும். எங்கும், எதனிலும் பாரதியார் காட்சி யளிக்க வேண்டும். அப்போதுதான் தமிழ் நாடு பாரதியாரின் மரணத்திற்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டதாக முடியும்.

தமிழ் நாட்டுச் சகோதர, சகோதரிகளே! 'ஒற்றுமையால் மேன்மை யுண்டாம், ஒன்றை யொன்று துன்பிழைத்தல் குற்றமென்று கண்டால் குறை வுண்டோ வாழ்வினுக்கே?' என்ற கவிதையைப் பாடி பாரதியாரை வணங்குவோம் வாருங்கள்!

வந்தே மாதரம்

# நாடக மணிகள்

[கலா விநோதன்]

## மனமோகன - எம். அரங்கசாமி நாயுடு

**மனமோகன** - எம். அரங்கசாமி நாயுடு அவர்கள் 1886-ஆம் வருஷம், அக்டோபர் மாதம் சென்னைத் திருவல்லிக்கேணி, ஐஸ் அவுஸ் ரோட்டில் ஒரு சிறிய வீட்டில் பிறந்தார். இவரது குலம் யது குலம்.



'மனமோகன' எம். அரங்கசாமி நாயுடு

சிறு வயதில் பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கும் போதே இவர் நடிப்பதில் சிறந்தவராக விளங்கினார். பள்ளிக்கூடத்தில் பொங்கல் பண்டிகை விடுமுறையில் 'பாமா விஜயம்' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. அப்போது நமது அரங்கசாமி நாயுடு அவர்கள் 'ருக்குமணி' யாக வேடந் தாங்கி மிகவும் அருமையாக நடித்தார். அதிலிருந்தே நமது நாயுடு அவர்களுக்கு நாடகத்தின் மேல் பிரேமை யேற்பட்டதென்று தெரிகிறது.

இத் தருணத்தில் இவரது தந்தையார் காலமானார். பாடசாலைக்குச் சம்பளம் கொடுத்துதவுவார் யாருமில்லை. பின்னர் 'ஆலந்தூர் இந்து

பால விவேகதாயினி சபா' தலைவராகிய தியாகராய நாயக்கர் அவர்கள் நாயுடுவுக்கு மாதம் 5 ரூபா சம்பளம் அளிப்பதோடு படிச்செலவும் அவர்களே செய்வதாகக் கூறி இவரைத் தங்கள் கம்பெனியில் சேர்த்துக் கொண்டார். திரு. நாயுடு நாளடைவில் அக் கம்பெனியில் 20 ரூபா வரையிலும் சம்பளம் பெற்று முக்கிய பெண் வேடங்கள் தரிக்கும்படியான நிலைமையும், அதனால் கியாதியும் அடைந்தார். 'ருக்மாங்கதன்' என்னும் நாடகத்தில் நாயுடு அவர்கள் ஜெகன் மோகினியாக நடித்து மிகவும் கியாதி பெற்றார். இந் நாடகம் ஜனங்களது வேண்டுகோளுக் கிணங்கி பல முறை நடிக்கப் படும் ஜனத் திரள் சொல்ல முடியாது. இதைக்கண்ட திருவாளர் பார்த்தசாரதி நாயக்கர் (B. A.) அவர்கள் நாயுடு அவர்களுக்கு 'மனமோகன' என்னும் பட்டமும், அப் பட்டம் செதுக்கிய ஒரு தங்கப் பதக்கமும் பரிசளித்தார். அன்று தொட்டு இவருக்கு 'மனமோஹன' M. அரங்கசாமிநாயுடு என்று பெயர் வழங்க லாயிற்று. அப்போது இவருக்கு வயது 15.



பெண் வேடத்தில்

அதற்குப் பிறகுதான் ஆலந்தூர் ஒரிஜினல் இந்துடிராமாடிக் கம்பெனி புதியதாக எற்படுத்தப் பட்டது. அப்போது திருவாளர். C. வேங்கடாசல முதலியார், நாயுடு அவர்களை 40 ரூபா சம்பளத்தில் தலைமைப் பெண் வேடத்திற்கு அமர்த்தினர். அக் கம்பெனியை நாயுடு அவர்களே ஸ்டேஜ் மானேஜராகவும் இருந்து நடத்தி வந்தார்; தென்னிந்தியா முழுவதிலும், மற்றும் ஜலப்பிரதேசங்களிலும் சென்று அநேக ராஜாக்களாலும், ஜமீன்தாரர்களாலும், வக்கீல்களாலும் நன்கு மதிக்கப் பெற்று தங்கப்பதக்கங்களும், வீரச்சங்கிலி

தோடாக்களும் வழங்கப் பெற்ருர்; 14 வருடங்கள் அக் கம்பெனியி லேயே நடித்து வந்தார்.

பின்னர் சில காரணங்களால் இவரே சொந்தமாய் 'ஆலந்தூர் அரங்க விலாச சபா' என்னும் பெயரை யுடைய ஒரு நாடகக் கம் பெனியை ஆரம்பித்தார்; தென்னிந்தியா முழுவதிலும், கடல் கடந்த பிரதேசங்களிலும் சென்று 7 வருஷ காலம் அக் கம் பெனியை நடத்திய பின்னர் 1926-ஆம் வருடம் அக் கம் பெனியை நிறுத்தி விட்டார். அதன் பிறகு நாயுடு அவர்கள் தாம் மாத்திரம் தனியாகப் பிறரது அழைப்புக் கிணங்கி பல்வேறு இடங்களுக்கும் சென்று இன்று வரையில் திறமை யுடன் நடித்து வருகிருர்.



துரியோதனனுக

1932-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் ஈஸ்டு இந்தியா பிலிம் கம்பெனி (E. I. F. Co.,) யின் சொந்தக்காரரான ராவ் சாஹேப் மோதிலால் சாமரியா அவர்களின் பரஸ்பர அழைப்பிற் கிணங்கி, 'ராமாயணம்' என்னும் பேசும் படத்தில் இவர் நடிக்கச் சம் மதித்தார். நாயுடு அவர்களே மற்ற நடிகர்களேயும் தேர்ந்தெடுத்து கல்கத்தாவிற்கு அழைத்துச் சென்ருர். நாயுடு அவர்கள் தமக்குப்

பேசும் படத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கு மென்பதை அது வரையில் எதிர்பார்க்கவே இல்லை.

நாயுடு அவர்களுக்கு 25 நாட்களுக்கு ஈஸ்டு இந்தியா பிலிம் கம்பெனியார் ரூபா 1000 சம்பளம் அளித்தனர். இத் தமிழ்ப் பேசும் படக்காட்சியில் 'ராவண'னாக நமது நாயுடு அவர்கள் நடித்தார். இவரது நடிப்பைப்பற்றி நாம் இங்கு அதிகமாக எடுத்துக் கூற வேண்டிய அவசியமே இல்லை. நேரில் பார்த்தவர்களுக்கு நன்கு அது விளங்கும்.

இன்னும் கூடிய சீக்கிரத்தில் மஹா பாரதத்தில் (தமிழ்ப் பேசும் படக் காட்சி) திரு. நாயுடு நடிப்பார் எனத் தெரியவருகிறது. ஈஸ்டு இந்தியா பிலிம் கம்பெனியார்தாம் மஹா பாரதத்தையும் எடுக்கப் போவதாக அறியப்படுகிறது.

மஹா பாரதக் கதை ஸ்ரீமான் நாயுடு அவர்களைக்கொண்டு பேசும் படக்காட்சியாக எடுக்கப்படுமானால் பூரண வெற்றியுடன் முடியுமென் பதில் தடையில்லை. நாயுடு அவர்கள் வெற்றி பெறுக! நீடூழி வாழ்க!

## மதுர. பாஸ்கரதாஸ்

தற்காலத் தமிழ் நாடகாசிரியருள் சிறந்தவர் சிலரே யாவர். அவருள் முத்தமிழ் க்ஷேத்திர மதுர. பாஸ்கரதாஸ் அவர்களும் ஒருவரென்பதை எவரும் மறுக்க முடியாது.

மதுர பாஸ்கரதாஸ் அவர்கள் மதுரையில் சற்றேறக் குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் செந்தமிழ் வளர்க்கும் இரவி குல திலக சேதுபதி வம்சத் (மறவர்) தில் தோன்றினார். இவரது முன்னோர் பரம்பரையாகவே தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள். இவரது தந்தையார் கல்வியும், கௌரவமும் வாய்ந்த விவசாயி. திரு. பாஸ்கரதாஸ் அவர்கள் சிறுவாராய்ப் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே அதாவது தமது 12-வது வயதிலேயே கவி பாடும் திறம் வாய்க்கப் பெற்றார். உயர்தர ஆங்கிலக் கல்வி பெறுமாறு பெற்றோர் விரும்பியும் இவர் வெறுத்து செந்தமிழ்த் தாயின் சிந்தையே மேலிட்டுத் தமிழ் மொழியிலுள்ள அரிய நூல்களைக் கற்பதிலும், பாக்கள் இயற்றுவதிலுமே தமது காலத்தைக் கழித்து வந்தார்.

தமிழ்த் தெய்வமாகிய ஸ்ரீ முருகப் பெருமானையே தமது வழிபடு தெய்வமாகக் கொண்டு பக்தி ரசம் சொட்டும் இனிய பக்திரசப்

பாசுரங்களைப் பாடினர். இவரது பாடும் வன்மையைக் கண்டு இவருடைய பாட்டனராகிய திரு. வடிவேலு தாஸர் அவர்களும், சிறிய தந்தையாராகிய பொன்னுசாமிக் கவிராயரவர்களும் மன மகிழ்ந்து கொண்டாடுவாராயினர்.

திரு. பாஸ்கரதாஸ் அவர்கள் ஆரம்பத்தில் பக்திரசப் பாடல்களைத் தவிர இதர செய்யுட்கள் செய்ய விரும்பவில்லை. அப்பால் பல அன்பர்களுங் கோரியதற் கிணங்க நாடகப் பாக்கள் இயற்றலானர்; பின்னர் தேசாபிமானத்தால் 'இந்துதேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம்' என்ற பெயரையுடைய இரண்டு தேசியக் கீத நூல்களை இயற்றிக் காங்கிரஸ் இயக்கம் நமது தமிழ் நாட்டுக் கிராமங்களில் பரவுவதற்கு முன்னரே தேசாபிமானத்தை யூட்டினர். முதல் முதலாக மகாத்மா காந்தியடிகள் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது கோவிற்பட்டியி லிருந்து மதுரை வரையில் அவருடன் சென்று தமது இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகத்தைச் சமர்ப்பித்து, அப்பாடல்களையும் பாடிக் காட்ட, அவற்றைக் கேட்டருளிய அடிகள் மன மகிழ்ந்து இவருக்கு ஆசிகூறினர். ஒரு முறை இவர் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது அங்குத் தமிழ் வள்ளலாக விளங்கிய ஸர். பி. இராமநாதரவர்களால் பாராட்டப் பெற்றார்; மற்றும் யாழ்ப்பாணப் பிரமுகரும், இலங்கை உயர்தர நீதிபதியாயிருந்தவருமான ஹரி-சந்திர சேகரா என்பவரால் நற்சாட்சிப் பத்திரமும் வழங்கப் பெற்றார்.

இதுபோது சென்னை மாகாணத்திலுள்ள அனேக அமைச்சூர் நாடக சபையாரும் நாடகக் கம்பெனியாரும் பிரபல நடிகர்களும் இவரால் இயற்றப் பெற்ற பாடல்களையே பாடிவருகின்றனர். கிராமபோன் பிளேட்டுகளில் இவர் செய்த அரிய பாடல்கள் பல வெளி வந்திருக்கின்றன.

இவர் செய்த நாடக நூல்கள் அனேகம். பாஸ்கர ராமாயணமென்ற பெயருடைய இராமாயண நாடகமும் இவரால் எழுதப் பட்டு அச்சிடப்படாமல் இருப்பதாக அறியக்கிடக்கிறது. இவர் மதுரையில் 'தமிழ் நாடக நடிகர் சங்கம்' என்ற நாமத்தோடு நாடக நடிகரின் முன்னேற்றங் கருதி ஓர் கழகங் கண்டு, அதன் அபிவிருத்திக்காகப் பெரிதும் உழைத்து ஒரு நிதியும் சேர்த்திருப்பதாகத் தெரிகிறது. இவர் தற்பொழுது சென்னை, பாலகந்தர்வகான சபையில் தலைமை வகித்து நடத்தி வருகிறார். இவ்வாறு தமிழ் நாடக உலகிற்கே ஒரு திலகமாய் இருந்து அல்லும் பகலும் தமிழ் நாடகக் கலையின் அபிவிருத்திக்காகத் தொண்டாற்றி வரும் மதுர-பாஸ்கரதாஸ் அவர்கள் நீண்ட ஆயுளையும், பல்வகைச் செல்வங்களையும் பெற வேண்டுமென வாழ்த்துகிறோம்.

---

# என் பெண்டாட்டி

[திரு. கே. வி. எஸ். வாஸ்]

'ஆயில்ய நக்ஷத்திர மாமியார் ஆசந்திவே!' என்று கலியாணத்திற்குப் பெண்பிள்ளை தேடுகையில் கிழவர்கள் கூறுவதுண்டு. அதாவது ஆயில்ய நக்ஷத்திரத்தையுடைய மாப்பிள்ளையின் மாமி ஒரு வருடத்திற்குள் விதவையாய் விடுவாளாம். இதுவோர் பழைய காலத்துப் பழமொழி. என் தலைவிதி நான் பிறந்த நக்ஷத்திரம் அதுதான். எனக்குப் பெண் கொடுக்க வந்தவர்களெல்லாம் 'ஆயில்யம்! ஆயில்யம்!!' என்று சொல்லிக்கொண்டு பயந்து போய்விடுகிறார்கள். என் கலியாணத்திற்கு நான் பட்ட கஷ்டம் எனக்குத்தான் தெரியும். ஊர் முழுவதும் சல்லடை போட்டு சலித்து கடைசியில் மலையைக் கிளறி எலியைப் பிடித்தாற்போல் அஷ்டமத்தில் சனியோடு கூடிய மூலா நக்ஷத்திரப் பெண்ணை எனக்கு மணம் செய்வித்தனர். எங்கள் இரண்டு சுப நக்ஷத்திரங்களின் மங்களமான பொருத்தத்தைப் பற்றி கேட்க வேண்டுமோ?

இவ்வளவு கஷ்டப்பட்டு மணம் செய்து கொண்ட என் மனைவியுடன் தாராளமாகப் பேசுவதற்கு ஒரு நிமிடம்கூட சாவகாசம் கிடைக்கவில்லை. அவளுடைய தரிசனம் கிடைத்து ஆறுமாதங்களுக்கு மேலாய்விட்டன. லீவு எடுத்துக் கொண்டு வேட்டகத்திற்குச் செல்லலாமென்றாலோ பிரின்ஸ்பால் 'ஒன் ருபீ பர் டே பைன்' (One rupee per day fine) என்கிறார். ஹாஸ்டலில் உட்கார்ந்து புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தால் புத்தகத்தில் என் மனைவியின் முகம் தெரிகிறதே யன்றி எழுத்துக்கள் காணப்படவில்லை. பொருத்துப் பொருத்து முடிவில் பரிக்ஷையும் வந்தது. பரிக்ஷை கேள்விகளுக்கு என்ன விடை எழுதினேனோ எனக்கே தெரியாது. கிருஸ்துமஸ் பண்டிகைக்காக டிஸம்பர் மாதம் 10வ காலேஜ் மூடப்பட்டது. அன்றைய மாலை வண்டியிலேயே புறப்பட்டு கும்பகோணம் வந்து சேர்ந்தேன். ரெயில்வே ஸ்டேஷன் வெய்டிங் ரூமில் (Waiting Room) சிறிது நேரம் தங்கி என்னை நன்கு சிங்காரித்துக் கொண்டு ஓர் ஜட்கா வண்டியிலேறி என் மனைவி யிருக்கும் மேட்டுத் தெருவை யடைந்தேன். மாமனாரும் மாமியாரும் என்னை யன்புடன் தான்

வரவேற்றனர். ஆனால்...ஆனால்...என் மனைவி மட்டும் தஞ்சாவூரி லுள்ள தன் பாட்டி வீட்டிற்குப் போயிருக்கிறாளென்று கேள்விப் படவே என் மனம் என்ன பாடு பட்டிருக்குமென்று வாசகர்களே ஊகித்துக் கொள்வார்களென் றெண்ணுகிறேன். நானும் அவள் பாட்டி வீட்டிற்குப் போகலா மென்று முதலில் யோசித்தேன். ஆனால் கல்கத்தா இருட்டறையைப்போல பத்து ஆசாமிகள் வசிக் கும் இடத்தில் பதினொன்றாக நானும் போய்ச் சேர்ந்தால் அவர்கள் தான் என்ன நினைப்பார்கள். அப்படியே போனாலும் அந்தக் கூட் டத்தில் மனைவியுடன் பேச எங்குச் சந்தர்ப்பம் கிடைக்கப்போகிறது. அவளை இங்கு வந்து சேரும்படி மாமனாரைக் கடிதம் போடுமாறு தூண்டலா மென்றாலோ வெட்கமாக இருக்கிறது. எங்கள் ஜாதகப் பொருத்தத்திலேயே எல்லாப் பொருத்தங்களும் விளங்க வில்லையா?

ஒரு நாள் என் மாமனார் இரண்டு தினங்களில் என் மனைவி வருவ தாகக் கடிதம் போட்டிருக்கிறாள் என்றார். அப்பொழுதுதான் எனக்கு உயிர் வந்தது. ஒவ்வொரு நிமிடம் கழிவதும் ஒரு யுகம்போ



லிருந்தது. கடைசியில் குறிப்பிட்ட தேதியும் வந்தது. அதிகாலையி லெழுந்து ஸ்நானம் செய்து 'புல்ஸூட்' (Full Suit) அணிந்து கொண்டு சாளரத்தின் வழியே ஜன்னலை நோக் கியவாறாக விருந்தேன். காலை ஒன்பது மணிக்கு வீட்டு வாசலில் ஓர் வண்டி வந்து நின்றது. என் மனைவியும் வண் டியை விட்டு இறங்கி முகத்தைமூடிக்கொண்டு சரேலென்று ஒரே பாய் ச்சலில் சமயலறைக்கு ஓடினாள். எனக்கு வந்த கோபத்திற்கு அள வில்லை. காத்திருந்து காத்திருந்து முடிவில் முகதரிசனமும் கிடைக்கா விட்டால் ஏன்தான் கோபம் வராது? கட்டின புருஷன் முகத்தைப் பார்ப்பதற்கு இவ்வளவு வெட்கமா?

அவளுடன் பேசுவதற்கு நான் செய்த முயற்சிகள் ஒன்றல்ல, இரண்டல்ல. என்னைக் கண்டால் அம்மாவுடன் ஓடி விடுகிறாள். நான்

என்ன காடியா? புலியா? அப்படியே விழுங்கிவிடு! என்னிடமென்ன பயம்? ஒரு மாலை கிணற்றில் ஜலம் இழுத்துக்கொண் டிருக்கையில் நான் அங்கே போய்ச் சேர்ந்தேன். மறுநிமிடம் அப்படியே குடத்தைக் கிணற்றில் நழுவ விட்டுவிட்டு உள்ளே ஓடிவிட்டாள். இரவு படுத்து உறங்குகையில் எழுப்பிப் பேசலா மென்றாலோ அம்மாவைக் கட்டிக் கொண்டு படுத்துறங்கும் அவளை எழுப்புகையில் தவறுதலாக கை மாமியின் மீது பட்டு விட்டால் என்ன வாகு மென்று பயந்து அந்த யோசனை யையும் விட்டு விட்டேன். இப்படியே நாள் செல்வது தெரியாமல் தேதி 30-ம் ஆகிவிட்டது. காலேஜோ 28-ந் தேதியே திறக்கப் பட்டது. மறுநாட் காலை மாமனார் மாமியாரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு ஊருக்குத் திரும்ப வண்டியில் ஏறுகையில் சாளரத்திலோர் உருவம் தென்பட்டது. நான் சற்று அப்பக்கம் திரும்பவே புற்றினுள் பாம்பு தலையை யிழுத்துக் கொள்வதுபோல் அவ் வுருவம் சரே லென்று மறைந்தது. அது யார் என்று நினைக்கிறீர்கள். வெட்க மென்னும் தேவதையின் பரமாநந்த பக்தர்களில் ஒருத்தியான என் மனைவியே.



31வ தேதி காலை 10 மணிக்கு காலேஜை அடைந்தேன். வகுப்பிற்கு உடனே ஓர் நோட்டீஸ் வந்தது. அது பின் வருமாறு:

நம்பர் 103, 95, 625 வான்டட் பை தீ பிரின்ஸ்பால் (நெ. 103, 95, 625 இவர்களைப் பிரின்ஸ்பால் அழைக்கின்றார்.) 625 என்று என்னுடைய நெம்பரும் வாசிக்கப்படவே மூன்று நாட்கள் காலேஜிற்கு வராம லிருந்ததற்காக அபாராதம் போடவே யழைக்கிறாரென்பதை நன்குணர்ந்தேன். எங்கள் பிரின்ஸ்பால் ஓர் ஆங்கிலேய துரை. அவருக்கு இந்துக்களின் பழக்க வழக்கங்கள் முற்றிலும் தெரியாது. அவரிடம் லீவு வாங்குவது மிகவும் சிரமம். ஆனால் ஹாஸ்யமாகப் பேசினால் நிச்சயம் லீவு கிடைக்குமென்ற இரகசியம் என் ஒருவனுக்கு மட்டுமே தெரியும். அவர் மிகுந்த ஹாஸ்யப் பிரியர். முதன் முதலில் நெ. 103 முன் வந்தான்.

ப்ரின்ஸ்பால்:—வாட்டீஸ் வித் யூ! (What is with you)

நெ. 103:—ஸார்! என் தம்பி இறந்து விட்டான்.

ப்ரின்ஸ்பால்:—உண்மையான மரணமா? அல்லது லீவு மரணமா?

நெ. 103:—உண்மையாகவே, ஸார்!

ப்ரின்ஸ்பால்:—சரி! நெக்ஸ்ட்! (Next) நெ. 95 உனக்கென்ன? உங்கள் வீட்டில் ஒருவரும் இறந்து போகவில்லையா?

நெ. 95:—காலில் காயம்பட்டு மிகவும் கஷ்டமாக விருந்தது ஸார். அதனால்தான் வரவில்லை. காயம் இன்னமும் அப்படியே யிருக்கிறது.

ப்ரின்ஸ்பால்:—எங்கே! நானும் காயத்தைப் பார்க்கிறேன். கட்டை அவிழ்த்து விடு பார்ப்போம்.

ஹா! இப்பொழு தல்லவோ நெ. 95-ன் முகத்தைப் பார்க்க வேண்டும். இஞ்சி தின்ற குரங்கைப் போல் விழித்துக் கொண்டே நின்றான். ப்ரின்ஸ்பால் சரசர வென்று நெ. 95 காலில் கட்டப்பட்டிருந்த கட்டுகளை யெல்லாம் அவிழ்த்து விட்டார். காயம் ஒன்று மில்லை. லீவு வாங்குவதற்காகப் போடப்பட்ட பொய்க்கட்டே. அவன் தலையில் பத்து ரூபாய் அபாராதம் விழுந்தது. முடிவில் என் நெம்பர் வந்தது.

ப்ரின்ஸ்பால்:—ஒய் வர் யூ ஆப்ஸெண்ட்? (Why were you absent)

நான்:—தூங்கிப் போய் விட்டேன் ஸார்!

ப்ரின்ஸ்பால்:—என்ன? இரண்டு தினங்களாக விடாமல் தூங்கினாயா?

நான்:—ஆமாம், ஸார். 27-ஆம் தேதி படுத்து உறங்கியவன் நேற்றுமாலைதான் எழுந்திருந்தேன்?

ப்ரின்ஸ்பால்:—(சிரித்துக் கொண்டு) ஐந்து ரூபாய்!

நான்:—என்ன ஸார்! உண்மையின் விலை ஐந்து ரூபாயா? நானும் மற்றவர்களைப் போல் அம்மா இறந்து விட்டாள்? அப்பா இறந்து விட்டார் என்று கூறினால் நிச்சயம் லீவு கொடுத்து விடுவீர்கள். உண்மையைக் கூறினால் அபராதம். காலம் அப்படி ஆய்விட்டது என்று இடைவிடாது கால்மணி நேரம் அவர் சிரித்துச் சிரித்துக் குடல் புண்ணாய் விடும்படி வேடிக்கையாகப் பேசியதன் பயனாய் லீவு கிடைத்து விட்டது. அன்று மாலை பரிக்ஷை விடைகள் எழுதிய பேப்பர்க ளெல்லாம் திருத்தப்பட்டு திருப்பி யளிக்கப் பட்டன. என்னை மட்டும் ப்ரின்ஸ்பால் தனிமையில் வந்து தம்மைக் காணும்படி கூறிவிட்டு என் பேப்பர்களைத் திருப்பிக் கொடுக்கவில்லை. பிரின்ஸ்பாலை மறுநாட் காலை சந்தித்தேன்.

ப்ரின்ஸ்பால்:—'எனப்பா இம்போஸீஷடன் (Imposition) எழுதி யிருக்கிறாய்?' என்றார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என் பேப்பரை வாங்கிப் பார்த்தேன். அதில் என்ன எழுதியிருந்தே னென்று சொல்லவும் எனக்கு வெட்கமாயிருக்கிறது. நீங்கள் என்னைப் பரிகாசம் பண்ணாம லிருந்தால் சொல்கிறேன். 'பெண்டாட்டி! பெண்டாட்டி!' என்று இருபது பக்கங்களில் நெருக்கி நெருக்கி எழுதி யிருந்தேன். லக்ஷம் முறைக்கு மேலிருக்கும்! உம்! பரிகாசம் பண்ண வில்லை யென்று



சொல்லி விட்டு சிரிக்கிறீர்களே! அப்படியாயின் நான் போய் வருகிறேன். மேலே ஒன்றும் சொல்லத் தயாராய் இல்லை.

## ஆசிரியர் பயணம்

நமது ஆசிரியர் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் நாளது ஜூலை மாதம் 15 ஆந் தேதிக்குமேல் செட்டி நாட்டைச் சேர்ந்த கல்லலுக்குச் செல்லுவார்கள்.

# விகடக் 'கல்கி'

[தசாவதாரம்]

சென்னை மாகாணத்தில் — அதிலும் முக்கியமாகத் தமிழ் நாட்டில், வயிற்றுச் சோற்றுக்கும் வழியில்லாது, கஞ்சியோ கஞ்சி யென்று கலங்கிக் கண்ணீர் வடிக்கும் இக்காலத்தில் — விகட விருந்துகளும், நகைச் சுவைகளும் மிக அதிகமாகி மலிந்துவிட்டதை நோக்கும் போது நமது நாட்டிற்கு இன்னும் க்ஷேமகாலம் கிட்டி நெருங்கவில்லை யென்றே ஏற்படுகின்றது. அறுசுவையில் ஒரு சுவையும் அகப்படாவிடினும் நகைச்சுவையாவது ஏழைகளுக்குக் கிடைப்பது அதிர்ஷ்டம்தானே !

இந்த நகைச் சுவைக்குக் கையில் உள்ள மிச்சக் காசையும் மாதா மாதம் 6 அணாவுக்குக் குறையாமல் மூன்று தடவையாக வரி போட்டு வாங்கி விடுகிறார்கள். போதாக் குறைக்கு 1000, 10,000, பரிசு கொடுப்பதாக ஏழைகளுக்குப் பறை சாற்றுவித்து 'பழயது இருந்தால் போடு, பசியா திருக்க வரந் தருகிறேன்' என்ற பரதேசியைப் போன்ற சில போலி விகடப் பத்திரிகாசிரியர்கள் விளம்பரம் போட்டு ஏழை மக்களிடையுள்ள கடைசீ 2 அணா முதல் 8 அணா வரையில் பிரவேசக் கட்டணமாகப் பெற்றுக் கொள்கிறார்கள். இப்படியெல்லாம் கொடுத்து ஏமாந்த சோணகிரிகள் ஆயிரக் கணக்கில் ஏற்பட்டவுடன், இவர்கள் ஏனையவர்களிடம் சென்று தங்கள் நஷ்டத்தையும், தாங்கள் பரிசு வரும் வரும் என்று இலவு காத்த கிள்ளையே போன்று ஏமாந்ததையும், விகடப் பத்திரிகைகளின் அயோக்கிய, அநியாய, அக்கிரமமான திருட்டு மோசடிகளையும் தெள்ளிதில் எடுத்துக் காட்டி பிரசாரம் புரிய ஆரம்பித்தனர்.

இதனால் பத்திரிகைக்காரர்களுக்குக் கஷ்ட நஷ்டம் ஏற்படவே இதிலிருந்து தப்ப வழி தேட முயற்சி செய்தனர். பரிசுக்குப் பணமனுப்பி ஏமாந்தவர்களை யெல்லாம் புதிய முறையில் இயமலோகமனுப்பி விட்டால் தங்களுடைய ஏமாற்றங்களைப் பிறகு வெளியில் சொல்ல ஆட்கள் இருக்கமாட்டார்கள் என்று பூராவும் எதிர்பார்த்தனர். 'விகடன்' பத்திரிகை படிப்பவர்களெல்லாம் கையில் 'விகடனை'ப் பிடித்துக் கொண்டே ரயிலில் விழுந்து செத்தால் ரூ 1000,

மோட்டார்காரில் முட்டிக்கொண்டு இறந்தால் ரூ 500, டிராம்கார் ஏறி மாண்டால் ரூ 100 ஆக இலவசமாய் இறந்தவர்கள் கையில் அவர்கள் பாடைமீ தேறுமுன்பே கொடுக்கப்படுமென்றும், 'இன்ஷியூர்' விளம்பரம் ஒன்று போட்டுவிட்டனர். இதைக் கண்டபின் இன்னும் ஒருவராவது ரயில் மூலமோ, மோட்டார் மூலமோ, டிராம் மூலமோ செத்தபின் விகடனிட மிருந்து ஒரு காசாவது வாங்கியதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் ஒழுங்காகப் பரிசு பெற்று வந்த 'விகடன்' பத்திகாலய சிப்பந்திகளும், அவர்களது பந்து, மித்திர, புத்திர, பௌத்திர களத்திராதிகளும் இவ்வாபத்துக் குரிய உயிரிழக்கும் கொள்ளையில் போட்டி போட முன் வரவில்லை. பரிசுகளுக்கு மட்டும் தாங்களும், இன்ஷியூரன்ஸுக்கு மட்டும் வாசகர்களும் உரிமையாள வந்தனர் என்று விட்டுவிட்டனர் போலும்! இனி விஷயத்துக்கு வருவோம்.

'கல்கி' யென்ற பெயரில் இப்பொழுது ஒரு பைத்தியம் பிடித்த ஜென்மம் தன் வாழ்நாளைக் காசுக்காக வீணாளாக்கி வருகின்றது. இக் 'கல்கி'க்கு மாதா மாதம் கொடுபடும் சம்பளத்திற்காக யாரையாவது, எதையாவது திட்டி, விகடமாய் வியாசங்கள் எழுதிக் கொடுப்பதே வேலையாகும். இக் 'கல்கி'க்கு இப்போது கிரகசாரம் போதாமையால் தன் திசையில் சொந்த வீட்டை விட்டு அன்னியர் வீட்டில் சென்று குரு நீசமடைந்துள்ளான். இதனால் இச் சாதகனுக்குச் சொந்த புத்தியும் போய், சுய புத்தியும் போய் மந்த புத்தியடைந்து வருகிறது. சனியாகிய மாறகாதிபதியும் நெருங்கி விட்டதினால் 104 டிக்கிரி சுரமும் 'கல்கி'க்குக் கண்டுவிட்டது. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்ற மூதுரைப்படி சாகுந் தருவாயிலும் 'கல்கி' விகடனை மறக்கவில்லை. ஒரு வியாசம் எழுதியது. அது பின் வருமாறு:—

'இன்றுவரை வெளியிடப் படாததும், மகா மர்மமானதுமான ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன் கேளுங்கள். இந்த மகா மர்ம சங்கத்தின் நடவடிக்கை விவரங்களை நாங்கள் யோக்கியர்களைத் தவிர வேறு யாருக்கும் சொல்வதில்லை யென்று ஒருவருக் கொருவர் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம்.

இராமசாமி, அரங்கசாமி, முனிசாமி, குமாரசாமி, கிருஷ்ணன், உஸ்மான், சுப்பராயன், ரங்கன், நான் ஆகியவர்கள் சிறு பையன்களாயிருந்தபோது ஒரே சந்தின் மூலையில் ஒருங்கு கூடி கோலி விளையாடியவர்கள். அக்காலத்தில் ஒரு நாள் மேற்கண்டவாறு சத்தியம் செய்து கொடுத்து விட்டு ஒவ்வொருவருடைய மனோரதமும் இன்னதென்று வெளியிடலானோம். ஆ! அவைகளை இப்போது எண்ணிப் பார்க்கும்போது, எனது அருமை நண்பர்களில் ஒருவருடைய மனோ

ரதமாவது நிறைவேறி யிருப்பதை நான் காணவில்லை. என்னே இவ் வுலக வாழ்க்கை!

(1) இத்தனைக்கும் பார்த்தால் எங்கள் மனோ ரதங்கள் அவ்வளவு கிடைக்கக் கூடாதவையாகத் தோன்ற. இராமசாமி ஆசைப் பட்டதெல்லாம் என்ன? காலேஜ் பியூன் வேலைதான். இது நிறைவேறிற்றா? இல்லை. இந்த இன்பமான வாழ்க்கையை விட்டு சர். சி. பி. இராமசாமி ஐயர் கே. சி. ஐ. இ. என்ற முழ நீளப் பெயர் தாங்கி, வைசிராய்களும், கவர்னர்களும், இராஜாக்களும், இராணிகளும் கூப்பிடும் கதிதான் அவர் தலையில் எழுதி யிருந்தது.

(2) அரங்கசாமியின் மனோரதம் சத்திர மணியக்காரர் உத்தியோகந்தான். இதுவுங் கிடைக்காமல் ஆசாபங்கமுற்ற நண்பர் அரங்கசாமி ஐயங்கார் கடைசியில் போயும், போயும் 'ஹிந்து' பத்திரிகை ஆசிரியராக நேர்ந்தது.

(3) முனிசாமி தாலூகா கச்சேரி டபேதார் ஆக வேண்டுமென்று அத்தியந்த ஆசை கொண்டு இராப்பகல் அதே சிந்தனையாயிருந்தார். அந்த ஆசையும் நிறைவேறவில்லை. கேவலம் மந்திரி வேலையிலமர்ந்தும் பாதியில் தள்ளிவிட்டார்களே! டபேதாரா யிருந்தால் இவ்வாறு பாதியில் தள்ளியிருக்க முடியுமா?

(4) குமாரசாமி கிராம கணக்கு பிள்ளையாக ஆசைப்பட்டார். கிடைக்காமல் கல்வி மந்திரி யாகத்தான் அவரால் முடிந்தது.

(5) கிருஷ்ணன் சொந்தத்தில் டீக் கடை ஒன்று வைத்து நடத்த வேண்டுமென்று விரும்பி யிருந்தார். அதுவும், இதுவும் பார்த்துத் திண்டாடித் தெருவில் நின்று விட்டு கடைசியில் ஏழு வருஷமாய் லா மெம்பர் வேலையிலேயே உட்கார்ந் திருக்கிறார்.

(6) நண்பர் உஸ்மான் வெற்றிலை வியாபாரம் செய்ய ஆசை கொண்டிருந்தார். அது கைகூடாமல், ஹோம் மெம்பர் ஸ்தானத்தில் அல்லாவின் அருளைத் தியானித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

(7) சுப்பராயனுடைய மனோரதம் கடலைப் பிண்ணாக்கு வியாபாரத்தில் நின்றது. நடைபெறவில்லை. என்னவெல்லாமோ பார்த்த பிறகு இப்போது நிற்க இடமின்றித் தவிக்கிறது.

(8) ரங்கன் மனோரதம் என்ன? பழக்கடை வைத்து, ஒட்டு மாம்பழங்களை நைஸ் நைஸாக அறுத்துக் கொடுக்க வேண்டுமென்பது தான். அதற்குப் பதிலாக மனிதர்களுடைய தேகங்களை டாக்டராக இருந்து அறுத்துத் தள்ளிக்கொண் டிருக்கிறார்.

(9) (தான் கொண்ட மனோரதம் 'கல்கி'யால் எழுதப்படாமல் மறைவாக வேண்டுமென்றே விடப்பட்டிருக்கிறது.)

'தமிழரசு' அபிமானிகளே! மேலே காட்டியவற்றி லிருந்து 'கல்கி'யின் தேசாபிமானமும், அறிவும், ஆற்றலும், அநுபவமும், ஒழுக்கமும் எவ்வளவு கீழான முறையில் செலுத்தப்பட்டிருக்கின்றன வென்பதை ஊன்றிக் கவனியுங்கள். விகடத்திலும் பிற கனவான்களை அனுவசியமாய் இவ்வளவு இழித்துக்கூறி, அவர்களின் பாலிய மனோ பாவத்தைக் கீழ்மைப்படுத்தி நாட்டிற்கு அபகீர்த்தியை உண்டாக்கி, பொறாமை மேலீட்டால் சுயநலங் கொண்டு இவ்வாறு எழுதுவதை விட, மேற்படியார்களின் நலன் கருதி இன்னும் நல்ல முறையில் கற்றோர் மெச்ச எழுதி யிருக்கலாகாதா? 'சூரியன் பார்க்கப் போயும் நெருக்கடி எதற்கு?' பல துறையிலும், வயதிலும் தாழ்ந்துள்ள 'கல்கி' மேற்படி பெரியார்களின் மனோரதம் இளமையில் இன்னும் மேலானதாய் இருந்து வந்ததென்று கூறினால் இவர் தலை வெடித்தா விடு மென்று கேட்கிறோம்? இவர் எழுதிய 8 க்கும், எழுதாது விட்டிருக்கும் அவரைப் பற்றியும் கீழே பின் வருமாறு எழுதும் பால்ய மனோரத கற்பனைகளைக் 'கல்கி' ஆராய்ச்சி செய்து, இவை பொருத்த முள்ளவை தானா எனப் பார்த்து பதில் எழுத முன் வருவாராக:—

(1) இராமசாமி ஆசைப்பட்ட தெல்லாம் தானும் ஒரு சங்கராச்சாரியாராக மாறி, மடத் தலைவராக ஆகி, நான்கு வேதங்களுக்கு மேல் உள்ள ஐந்தாம் வேதத்தை உண்டாக்கி, அதற்குரிய மகரிஷியாய் விளங்க வேண்டு மென்பதே!

(2) அரங்கசாமியின் மனோரதம் திருப்பாணாழ்வாரைப்போல் திருத் தொண்டு செய்து, தீண்டாமையை ஒழித்து, தீந் தமிழை வளர்க்கப் போந்த திராவிட சிகாமணியாய் 13 வது ஆழ்வாராக இருக்க இச்சைப் பட்டதுதான்.

(3) முனிசாமி நாயுடு விஜய நகர சமஸ்தான முதல் திருமலை நாயகர் எல்லை வரையில் உள்ள நாட்டைப் பழைய முறையில் ஒன்று படுத்தி உலகோர் மெச்ச ஒரு குடைக் கீழ்க் கொண்டு வந்து ஆள அவாக் கொண்டார்.

(4) குமாரசாமி குமரிமுதல், இமயம்வரையுள்ள நாஸ்திகத்தை நாசம் செய்து ஆஸ்திகத்தைப் பரவச் செய்ய ஆசைப்பட்டார்.

(5) கிருஷ்ணன் இப்போ திருக்கும் சேரநாட்டுடன் பாண்டிய சோழ நாடுகளையும் வளைத்து, வெற்றிக் கொடி நாட்டி, கைலாசம் வரையிலும் சென்று சேரமான் பெருமாள் நாயனுரைக் கண்டு தரிசித்து அவரை அழைத்துவர எண்ணி யிருந்தார்.

(6) நண்பர் உஸ்மான், அஸ்தினாபுரியைத் தலைநகராக்கி, தாஜ் மகாலைக் கலாசாலையாக்கி, ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமையை யுண்டாக்கிப் பழைய அக்பர் சக்கரவர்த்தியைப் போல் அரசாள நினைத்திருந்தார்.

(7) சுப்பராயன் ஜாதிமத வித்தியாசங்களை ஒழித்து சமதர்ம வதுவை செய்துகொண்டு, உயர்ஜாதியின் கர்வத்தைப் பங்கம் செய்து, சுயமரியாதைப் பெரியாரை (சிவில் ஜெயிலைத் தவிர) ஏனைய விஷயங்களில் பின்பற்றித் தேசீய நாடகமாட நினைத்திருந்தார்.

(8) ரங்கன் மனோரதம் அகஸ்தியர் போன்று சித்தவைத்தியத்தில் பேரெடுத்து சஸ்திர சிகிச்சையில்லாமலேயே பச்சிலை மூலிகைகளினால் மனிதர்களின் தோலைப் பதனிடுவது என்பதேயாகும்.

(9) நான் ('கல்கி') கொண்ட மனோரதம் பி. ஏ. வரை படித்து ஒரு ஆங்கில தினசரியின் ஆசிரியராக மாறி, பெர்னார்ட் ஷாவைப் போல ஹாஸ்ய நிபுணராக விளங்கி, சர்வதேசங்களிலும் புகழ் பெற வேண்டு மென்பதே.

இதில் மேற்குறித்துள்ள 9 பேர்களின் பாலிய மனோரதமும் ஈடேறவேயில்லை. ஆயினும் 8 பேர்களது தற்போதைய நிலைமை சற்று திருப்திகரமாகவே இருக்கிறது. ஆனால் 9 வது பேர்வழியான 'கல்கி'யின் பாலிய மனோரதம் பாழாய்ப் போய்,—பி. ஏ. பட்டமும் பெறாமல், தமிழ்நாட்டின் குப்பைக்கார ஹாஸ்யப் புலிகளின் கட்டுரைகள் அடங்கிய 'விகடன்' பத்திரிகைக்கு உதவி ஆசிரியராக இருந்து வெள்ளைக் காகிதத்தைக் கறுப்புக் காகித மாக்கி அவரது காலத்தை வீணாக்குகிறார்?

அந்தோ! 'கல்கி'யின் பரிதாப நிலை கண்டு இரங்குகின்றோம்.

---



பரம ஏழை:—பழைய ஆகாரம் இருந்தால் கொஞ்சம் போடச் சொல்லுங்க.

செவிட்டுப் புண்ணியவான்:—'பிச்சை யெடுப்பதிலும் கொஞ்சம் கௌரவமா? பழ ஆகாரமே சாப்பிட்டு பழக்கமோ?' 'ராஸ்கெல்' ஓடுகிறாயா! இந்தக் கைப் பிரம்பால் அடிக்கட்டுமா?

# துணுக்குகள்

[மே. மா]

## வெலிங்டனே! போக வேண்டாம்.

லார்டு இர்வின் காங்கிரசை அடக்க முடியாமல் மகாத்மாவிடம் சமாதானம் பேசி சரண்புகுந்தாரெனக் கோபாவேசங் கொண்ட பார்லிமெண்ட் மெம்பர்களாகிய லார்டுகள் தங்கள்மில்லில் நஷ்டம் ஏற்படுவதை நினைத்தும் இந்தியரை அடிமையினின்று விலக்க இஷ்டமின்றியும் காங்கிரசை அடக்க என்ன செய்யலாமென்று ஆலோசித்துக்கொண்டிருந்த போது தாங்கள் முன்னே சென்று 'எனக்கு இந்தியாவில் அதிக பழக்கமுண்டு. நானும் என் மனைவியும் இந்தியர்களை நன்றாய் அறிவோம். நாங்கள் இருவரும் இந்தியாவிற்கு மறுபடியும் சென்றால் காங்கிரசை ஆறுமாதத்திற்குள் அடக்கி விடுவோம்' என்று மார்பு தட்டி பேசியதோடு 'என் மனைவி அதிக புத்தி சாலி. அதோடுகூட ஸர். சி. பி. ராமசாமி ஐயர் இருக்கிறார். அவர் புத்தியில் ஆதவர். நாங்கள் சேர்ந்து யோசித்து ஒரு நொடியில் காந்தி இயக்கத்தை யழிப்போம்' என்று உறுதி கூறி இந்தியாவிற்குவைசிராயாய்வந்தீர்கள். வந்தபின் ஆயிரக்கணக்காகக் காந்தி இயக்கத்தாரைச் சிறையிலடைத்தீர்கள். அடைத்தும் இயக்கம் அடங்கவில்லை. மீண்டும் ஆறு மாத தவணை கேட்டீர்கள். அதிலும் முடியாமல் போகவே பார்லிமெண்ட் லார்டுகள் தங்களிடம் வெறுப்புற்ற இந்த சமயம் ஒன்றும் செய்ய இயலாது திரும்பிப் போகலாமென்று கவலையோடிருக்கும்போது காந்தியடிகள் தங்களுக்குச் சகாயமாக தாங்கள் பயந்து ஓடாதபடி ஒரு வேலை



செய்துள்ளார். அதுதான் ஹரிஜனங்களை ஆலயத்தில் விடும்வேலை. இதை ஆரம்பித்ததும் அரசியல் போர் நின்றது. உடனே காந்தி இயக்கத்தினருக்கும் வைதீகர்களுக்கும் போர் தொடங்கியது.

இந்தப் போர் சாதாரணப் போரல்லவென்றும் இதில் சண்டையிடும் வீரர்கள் சாதாரணமானவர்கள் அல்லரென்றும் தங்களுக்கு நினைவூட்டுகிறோம். வைதீகர்கள் பெரிய அறிவாளிகள். இரகசியத்தில் எக்காரியத்தையும் செய்தாலும் செய்வார்களேயல்லாமல் பகிரங்கமாய்ப் பேச இடந்தரார்கள்; தவிர சனாதன தர்மத்திற்காக உயிரை விட்டுவிடுவதாய் வாதாடுவார்கள்.



இதில் கலந்துள்ளவர்கள் மாஜி ஜட்ஜுகளும் பெரிய வக்கீல்களும் மிராசுதார்களும் ஜமீன்தார்களுமாய் இருப்பதால் அவர்கள் இலகுவில் ஓயமாட்டார்கள். இப்போர் இன்னும் ஒரு யுகம் வரையில் நடக்கும். இதனிடையில் மகாத்மாவும் அவர் இயக்கமும் அரசியலில் திரும்பாது. அப்படித் திரும்பினாலும் அது பயன்படாது. ஏனெனில் ஜாதியை ஒழிக்க சக்தியில்லாத இவர்களா சுயராச்சியத்தை வாங்கிவிட முடியும் என்ற வார்த்தை எழாதா? ஆதலால் இனி தாங்கள் பயப்படவேண்டாம். சிரஞ்சீவியாக இந்தியாவில் நீங்கள் வாழலாம். இந்த உண்மைகளை யறியாமல் தாய் நாட்டிற்குத் திரும்பிப் போக வேண்டாம்.

### நடிகரின் சீர்கெட்ட நிலை

1933௵ ஜுலை௴ 2௳ சென்னை ஒற்றைவாடை கொட்டகையில் வள்ளி நாடகம் நடைபெற்றது. அதில் திரு. பி. எஸ். கோவிந்தன் முருகனாகவும் ஸ்ரீமதி விஜயாள் வள்ளியாகவும் வேடம் தரித்து நடித்தனர்.

நாடக ஆரம்பத்திலேயே வள்ளிவேடம் பூண்ட விஜயாள் என்னும் மாது முருகனைப் பார்த்து அடே என்று அழைக்கலானாள். பிறகு ஒருவரை யொருவர் தாங்கள் தரித்த வேடத்தையும் மறந்து திட்டிக்கொள்ள முற்பட்டனர். இது முற்றும் தவறான முறையாகும்; கண்டிக்கத் தக்கதாகும்.

முருகனைக் காதலனாகப் பெற வரங்கிடக்கும் வள்ளியாக நடிக்க வந்த மாது நாடகம் பார்ப்பவர்கள் மனதில் இயற்கையாய் நடித்துக்



காட்ட வேண்டியதை விட்டு, 'மூடா, கல்லாதவனே, உன் தாய் தகப்பன் உன்னைப் படிக்க வைக்காமல் இங்கு அனுப்பினார்கள் ... தலே' என்று ... பார்த்துத் திட் ... நடிப்பது எவ்வ... கெட்ட செயல் எ... தைச் சொல்ல வேண்டுவதில்லை. இத்தகைய நடிகர்கள் நம் நாட்... விருக்கின்ற வரையில்—இப்படிப்பட்ட நடிகர்கள் நடிக்கும் நாடகத்தைப் போய் பார்த்து ஆதரிக்கும் வரையில் நம் நாடு நன்மையடையா தென்பது திண்ணம்.

தற்காலத்தில் வெளிவரும் நாடக நடிகர்களைப்பற்றி—ஆண் பெண் இருபாலரையும் பற்றி விவரமாய் எழுதுவதென்றால் இப்பத்திரிகை முழுதுமே போதாது. நடிகர் ஆணாக இருந்தால் நாடகத்திற்கே மிகவும் அவசிய மில்லாத சங்கீதம் இருந்தால் போது மென்று எண்ணித் தங்கள் பெயர்களோடு 'பாகவதர்' என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டு வெளிவந்து விடுகிறார்கள். நடிக்கும் நாடகத்தின் உண்மைத் தத்துவமோ, நடிப்போ, அழகிய வசனமோ இவர்களிடம் மருந்துக்கும் கிடைக்காது. சந்தர்ப்பத்திற்குத் தகாத பொருத்த மில்லாத அபாசமான வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். இவர்கள் நாடகம் பார்க்கப் போகிறவர்களை மிகச் சாதாரணமாக நினைப்பதே இவை யனைத்திற்கும் காரணமாகும்.

நடிகர் பெண்ணாக இருந்தால் கேட்க வேண்டியதில்லை. அவர்கள் பெண்ணாக இருப்பதே பெரிய அநுகூலம். எந்த நாடகத்தில் வேண்டுமானாலும் தோன்றி அவசிய மில்லாத சில பாடல்களை, மாமா பாட்டு, வண்ணாத்தி பாட்டு, இடைச்சி பாட்டு போன்றவைகளைப் பாடிவிட்டால் போதுமானது என்று நினைத்துக்கொண் டிருக்கிறார்

கள். அன்றியும் நாடகத்தில் வேடமணியும் மாதர்கள் அவலட்சண மாக இருந்தாலும் எலும்புந் தோலுமாகத் தோன்றினும், அவர் கள் ஒவ்வொருவரையும் பூப்படைவதற்குள் சோபனம் செய்வதற் காகப் பாங்கியில் ரூபாய் பத்தாயிரக் கணக்காகப் போட்டு வைக்கும் மதியீன மைனர்கள் நாட்டில் மலிந்து கிடப்பதால் இம் மங்கையர் கர்வ மடைகின்றனர். கதா நாயகனும் கதா நாயகியுமாகிய ஆண் பெண் நடிகர் இருவரும் கதைக்குச் சம்பந்தமில்லாத வார்த்தைகளைக் கேவல பாஷையில் பேசி பொழுது போக்கி விடுகிறார்கள். இக்காலத் தில் தமிழ் நாடகமேடை இப்படிப்பட்ட பேர்வழிகளுக்குத்தான் குத்தகையாகப் போய்விட்டது. இச் சீர்கெட்ட நிலையை நடிகர்க ளும் நாடக அபிமானிகளும் நினைத்துத் திருத்தமடைந்தா லொழிய தமிழ் நாடகம் முன்னேற்றமுற வழியில்லை என எச்சரிக்கை செய் கிறோம்.

## பூனையா? புலியா?

ஆடுகளையும் மாடுகளையும் கொன்று தின்னும் (புலிகள்) வீற்றி ருந்த சிம்மாசனத்தில் எலிகளையும், கிளிகளையும் பிடித்து உண் ணும் (பூனை) அமர்ந்ததாக 'ஆனந்த விகடன்' கூறி அதற்கு ஒப் புவமையும் காட்டி விட்டது.

ஐயோ! ஷண்முகம் செட்டியாரே! நீர் ஒரு பிராம்மணராய்ப் பிறந்திருக்க லாகாதா? அதிலும் ஒரு வக்கீலாக இருந்து ஒரு பெரிய வழக்கை நடத்தி எதிர்கட்சியில் வெண்ணிற மாதர்களைக் கண்டுகளித்து கேசை நட்டாற்றில் விட்டுவிட்டிருக்கக் கூடாதா? ஆங்கில ஓட்டலில் எருமை நாக்கைக் கேட்டு அதற்குப் பதிலாக ஆட்டு நாக்குக் கொடுத் தவனை யடித்து இரண்டாயிரம் ஈடு கொடுத்து ஒரு பெரிய கொடை யாளி என்ற பெயரை எடுத்திருக்கக் கூடாதா? நகர வாசங்களில் பொதுப் பெண்கள் வீடுகளுக்குச் சென்று ஆயிரக்கணக்கில் பணத் தைக் கொடுத்து உமது படத்தை அவர் படுக்கை யறையில் வைக்கச் செய்து பெரும் புகழை யடைந்திருக்க லாகாதா? வெண்ணிற மாதைத் தூக்கி மோட்டாரில் போட்டுக்கொண்டு ஓடி மறுப்பவ ருக்கு இரண்டு மூன்று ஆயிரம் நோட்டை வீசி யெறிந்து கர்ணன் என்ற பெயர் வாங்கி யிருக்கலாகாதா? நல்ல அரசப் பெண்களை நேசம் செய்து வைத்திருத்தலாகாதா? இப்படிச் செய்திருந்தால் ஷண்முகம் செட்டியாரே! நீர் இப்போது வைசிராய் சபையில் பெரும் பதவியோ அல்லது லண்டன் மந்திரி சபையில் பெரும் பதவியோ பெற்றிருப்பீரே? ஐயோ, தெய்வமே! உமது தலையில் எழுதிய பிரமன் 'பிராம்மணன்' என்ற முத்திரையை உமது மீது போட்டிருந்தால் நீர் 'ஆனந்த விகடன்' ஆசிரியர் கண்ணில் பூனை யாய் விளங்குவீரா? அதற்கு மாறாக பெரும் சிங்கக்குட்டி

என்றல்லவா 'ஆனந்த விகடனும்' பிராம்மணர்களால் நடத்தப்படும் இதர பத்திரிகைகள் பூராவும் கட்டுப்பாடாக உம்மை வர்ணித்துப் புகழ்ந்திருக்கும். என் செய்வது? தர்ப்பைப் புல்லால் உயிர் வாழ்ந்த வர்கள் தற்பொழுது ஆசிரியர்களாக மாறினல் இப்படித்தானகுமோ? போனது போகட்டும்! இனியாவது தவம் செய்து பார்ப்பனராய்ப் பிறக்க முயல்வீராக.

## 20000 போட்டிப் பரிசு

உலகத்தில் தற்போது முக்கால்வாசி பத்திரிகைக்காரர்கள் போட்டிப் பரிசு என்ற விளம்பரத்தைச் செய்து இரண்டு ரூபாய் கட்டணம் வைத்து முதல் பரிசு பெற்றவருக்கு 20000 ரூபாய் அளிக்கப்படும் என்று எழுதி வயிறு வளர்க்கின்றனர். மு—உலகத்தில் உள்ள மக்கள் பெரும்பாலும் இதில் கலந்து கொள்ளுகின்றனர். ஆசை யென்பது மு—உலகத்தை மாத்திரமா மயக்கு கின்றது. அ—உலகத்தையும் கூட மயக்குகின்றது.

வீதிகளில் மூன்று காகிதங்களை வைத்து, 'வை, ரூபா வைத்தால் நாலு ரூபா தருகிறேம் ஆல் பிரைஸ் நோ பிளாங்க்' என்பவர்களையும் பணம் வைத்து ரங்கு, பிடி முதலான ஆட்டம் ஆடுபவர்களையும் குற்றம் சாட்ட சட்டம் இடங்கொடுத்தாலும், பகிரங்கமாய்ப் பத்திரிகைகளின் மூலமாய் ஆடும் சூதுக்குச் சட்டம் இடந் தராதது ஆங்கில அரசாட்சியின் மேன்மையே யாகும். பாபம்! போட்டிப்பரிசு விளம்பரம் செய்து லாபம் சம்பாதிக்கும் பத்திரிகை களைப் பார்த்து சிலர் மீசையை முறுக்குகின்றனர்; சட்டசபையில் கேள்விகேட்க முயற்சிக்கின்றனர்; 'ஹிந்து' பத்திரிகையுங்கூட உப தலையங்கத்தில் கண்டித்து எழுதிவிட்டது; இவர்கள் பொருமையே பொருமை! என்ன பொருமை!

'ஊரார் பணத்தைத் தானே நாங்கள் பரிக்கிறேம்? இதில் அரசாங் கமோ அல்லது சட்டமோ, சட்ட மெம்பர்களோ, இந்து பத்திராதிபரோ நஷ்டமடையப் போவதில்லையே? அப்படியிருக்க எங்களைக் கேட்பானேன்? இன்னும் வேண்டுமானல் ஒரு லக்ஷம் ரூபா பரிசு கொடுப்பதாய்ப் பத்திரி கையில் பிரசுரம் செய்து பணம் தண்டுவோம்? இதில் என்ன பயம்? இதற்கு அச்சப்படுவானேன்? இனி பத்திராதிபர்களே? அச்சமில்லை, அச்சமில்லை அச்ச மென்பதில்லையே' என்று 'ஆவி' பத்திரிகையின் ஆசிரியர் ஆகாயத்தில் குதித்துக்கொண் டிருக்கிறாராம்.

## பிழை திருத்தம்

சென்ற இதழில் 'நமது ஆசிரியருக்கு ஒரு கடிதம்' என்ற கட்டுரையில், பக்கம் 329-ல் 20வது வரியில், 'திருவாளர் ரங்கநாத மவர்களுக்கு' என்றிருக் கிறது. அதை 'திருவாளர் ராமமூர்த்தியவர்களுக்கு' என்று திருத்தி அன்பர் கள் வாசிப்பாராக.

"மீனட்சி" பிரஸ் 31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.



# சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு 1/8 படி பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்புவலி, இடுப்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு

முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத;சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு எழுதியது: நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக் கொண்டுபோய் 5 நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரிலுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உல்லாசி வருகின்றாள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை
15—5—30

இப்படிக்கு,
அண்ணாவையங்கார்.

---

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்த சகல மேக சித்தாதி எண்ணெயை இரண்டு நாள் சாப்பிட்டேன். என் முழங்கால் வீக்கமும் பிடிப்பும் நீங்கிவிட்டது. இடுப்பு வலியும் போய்விட்டது. வயிற்றில் சப்தித்துக்கொண்டிருந்த வாய்வும் நீங்கிவிட்டது. இன்னும் ஒரு வேளை எண்ணெயைக் கையிருப்பாக வைத்திருக்கிறேன். இந்த லெட்டர் கொண்டுவரும் பிராம்மண விதவை மிகவும் ஏழை. கால் குடைச்சலினால் அநேக நாளாய்க் கஷ்டப்படுகிறாள். கிருபை கூர்ந்து ஒரு ரூபா வாங்கிக்கொண்டு இரண்டு வேளை எண்ணெய் கொடுத்தனுப்பவும். நான் தங்களை வந்து பார்க்கிறேன்.

இப்படிக்கு,
கீழ்வீதி சீனிவாச ஐயங்கார்,
சைவ முத்தையா முதலி வீதி, சென்னை.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

**சகல மேக சித்தாதி எண்ணெய்**

**புட்டி 1-க்கு விலை ரூபா 5.**



# அயத்தங்க திராவகம்

நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண்பெண் இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம் பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலே மாலே கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

## சில அபிப்பிராயங்கள்

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனுதலால் விலை குறைவு செய்து அனுப்பினல் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமாறுலு மாவேனுதலால் அதை யனுசரித்து அரைடஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

---

ஐயா !

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அயத்தங்கத் திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினல் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20–6–30, கண்ணுபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.**

**தபால் கூலி பிரத்தியோகம்.**

**வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.**

# கூழ்ப்பாண்ட லேகியம்




இந்த லேக்கியத்தில் ஒரு கொச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கியகுணம். எலும்புறுக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல்

யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும், சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, கூழ்ப்பாண்ட லேகியம், மீன் எண்ணெயைக் காட்டிலும் குணம் செய்கின்றது. கணைச்சூட்டுக்கு மேன்மையாய்த் தெரிகின்றது. க்ஷயரோகம் வாராதபடி தடுக்கவும் மேலானதாய்க் காணப்படுகின்றது. மலச்சிக்கல் நீங்குகின்றது. ஆனபடியால் எங்கள் எல்லா ஷாப்புக்கும் மாதா மாதம் 10 பவுன் அனுப்பவும். இந்த லெட்டர் கொண்டுவரும் ஆள் வசம் 3 வீசை கூழ்ப்பாண்ட லேகியம் கொடுத்தனுப்பவும்.

M. C. நஞ்சுண்டராவ். B. A., M. B. & C. M. மைலாப்பூர்.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசிப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினுல்தான் என் குழந்தை பெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A., B. L.,
District Munsiff, Tanuku.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, 2 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் வி. பி. யில் அனுப்பவும். இப்போது என் மனைவியின் தேக காந்தம் குறைந்திருக்கின்றது. அத்துடன் சிவப்பிரகாச பற்பொடி 1 டசன் அனுப்பவும்.

வியாசராவ் M. A., B. L., District Munsiff, Bellary.

ஒரு பவுன் விலை ரூபா 2.

---




# மென்தா மவுத்வாஷ்

இம் மருந்தானது வாயிலுள்ள நோய், ஈர்வளர்தல், பல்வலி, இரத்தம் கொட்டல், சீழ் வருதல், வாய் நாற்றம் இவைகளைப் போக்கிச் சதா வாயுக்குக் கம கம வென்ற ஒரு மணத்தைக் கொடுக்கும்.

4-மாதம் உபயோகிக்கக் கூடிய மருந்து விலை ரூபா 2.

# தலைவலிச் சூரணம்

இந்தக் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5-நிமிஷத்தில் தலைவலி நீங்கும். தவிர உடம்புவலி கை கால்வலி இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம் மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை.

புட்டி 1-க்கு விலை 8.

# காஸ்டோலின்

(இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், தொடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கரை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானாலும் போக்கக்கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் அனைவரும் புகழ்ந்தே பேசுகிறார்கள்.

புட்டி 1-க்கு விலை அணா 4.

இன்னும் சகல நோய்களுக்கும் சிறந்த மருந்துகள் எங்கள் மருத்துவ சாலையில் கிடைக்கும். விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் பெறுவதென்றால் ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணு, மணியார்டர் கமிஷன் 2 அணு, வி. பிக்குத் தபால் சார்ஜ் ½ அணு, ஆக 5½ அணு சேர்த்து ரூபா 1-5-6 கட்டி வி. பி. யைப் பெற நேரிடும். மணியார்டர் அனுப்பினல் ரூ. 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னதாக மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே இரு சாராருக்கும் நலமாகும். இது முக்கிய மாய்க் கவனிக்க வேண்டிய விஷயம்.

2. இடம் மாறும் சந்தாதாரர்கள் தங்கள் புதிய விலாசத் தோடு சந்தா எண்ணையும் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

3. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும் மணியார்டர் அனுப்பும் பொழுதும் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டும். இன்றேல் பதில் செய்ய இயலாது. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்ப வேண்டும்.

## வியாசம் எழுதுவோர்க்கு

'தமிழர்'சில் வெளியிட வியாசங்கள் அனுப்புவோர் தயவு செய்து பின் வரும் விதிகளைக் கவனித்தல் அவசியமாகும்:—

1. இலகுவான இனிய செந்தமிழ் நடையில் படிக்கப் படிக்க இன்ப மூட்டும், நினைக்க நினைக்க ஆவேச முண்டாக்கும் அரிய சரித் திரங்களும், நெஞ்சை அள்ளும் சிறு கதைகளும், விடா நகைப்பை விளைவிக்கும் விகடத் துணுக்குகளும், உள்ளத்தை உருக்கும் வாழ்க்கை வரலாறுகளும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், உரிமை வேட்கையும் உண்டாக்கும் உயர்தர வியாசங்களும், சீர்திருத்த விஷ யங்களும் அன்போடு அங்கீகரிக்கப்படும்.

2. வியாசம் எழுதுவோர் எளிய இனிய தமிழ் நடையில் இலக்கண வழுவில்லாமல் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக மையி ஞல் எழுதி அனுப்புதல் வேண்டும்.

3. எந்தக் கட்டுரையும் நான்கு அல்லது ஐந்து பக்கத்திற்குள் அடங்கக் கூடியதாக இருப்பதே நலம். இத்தகைய வியாசங்களே முதன்மையாகக் கருதப்படும்.

4. அங்கீகாரமாகாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்பவேண்டு மானாலும், அனுப்பிய கட்டுரைகளைப்பற்றி அபிப்பிராய மறிய வேண்டு மானாலும் அவற்றோடு தபால் தலைகளும் அனுப்ப வேண்டும்.

5. கிடைக்கப்பெறும் கட்டுரைகளைக் கூட்டவும் குறைக்கவும் நிறுத்தவும் ஆசிரியருக்கு அதிகார முண்டு.

"Tamil Arasu" Rgd. M. No. 2559

# கார்டோலின்

## ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்

30, 40 வருடங்களாகக் காசநோயால் கஷ்டப்பட்டவர்களை இம் மருந்து காப்பாற்றி இருக்கிறது.
விலை புட்டி 1-க்கு ரூபா 10. விவரமான கேட்லாக்குக்கு எழுதவும்.



சளி இருமல், சுவாச காசம், காச இருமல், மந்த [illegible] காசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

விலாசம்:—31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.